
பணம
படுத்தும் பாடு
DEPOSITS
SAVINGS
கல்கி
KALKI.14-10-84
ரூ.1·50


அழகுக்கும் இளமைக்கும் சாரதா'ஸ்
பட்டுப் புடவைகள்
கோலாகலமான தீபாவளி போன்ற
பண்டிகையானாலும் சரி,
குதூகலமான திருமணம் போன்ற
நிகழ்ச்சிகளானாலும் சரி, தரம் வாய்ந்த
அசல் பட்டுப் புடவைகளை
அளிப்பதில்
முன்னணியில் நிற்கிறது
சாரதா'ஸ்.
சாரதாஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு
SARATHA'S
MADRAS & TRICHY

வாசகர் கருத்து



பஸ் கட்டண உயர்வு

● பஸ் கட்டணத்தை உயர்த்துவது ஒரு புறம் இருக்கட்டும். அதற்கு முன்னால் சில கேள்விகள். மணிக்கணக்காக பஸ்ஸுக்காகக் காத்திருந்து அது தூரத்தில் வரும் அடையாளம் தெரிந்தவுடன் சந்தோஷத்தில் நம் உள்ளம் ஒரு கணம் குதூகலிக்க, பஸ் நெருங்கி வந்து அந்த ஸ்டாப்பிங்கில் நில்லாமல் செல்லுவதும், அப்படியே நின்று ஏறிக் கொண்டால் ஒரு ரூபாய் கொடுத்து 90 பைசா டிக்கெட் கேட்டால் சில்லறையாக் கொடு இல்லேன்னு இறங்கிடு என்று நிர்த்தாட்சண்யமாய்ச் சொல்லி இறக்கி விடுவதும் சென்னையில் பலர் அனுபவிக்கும் நித்திய வேதனைகள். கேட்டால், பொது மக்களின் நலனுக்காகப் பேருந்துகள் என்று வாய் கிழியப் பேசுகிறார்கள். இதுவா மக்கள் நலன்...?

சென்னை–78., ஷ்யாமா ரங்கராஜன்.

● தனியார் நிறுவனத்தினரால் லாபம் சம்பாதிக்கக்கூடிய ஒரு துறை பொது நிர்வாகத்தில் நஷ்டமடைகிறது என்று சொல்வதே நிர்வாகச் சீர்கேட்டைத்தான் குறிக்கும்.

நஷ்டம் என்பதை வாதத்துக்கு ஒத்துக் கொண்டாலும் கூட நஷ்டத்தில் இயங்குகிற மின்துறைக்கு மேலும் நஷ்டக் கணக்குக் காட்ட 'இலவச மின்சாரம்' என்றெல்லாம் அறிவிக்கிற அரசு பல்லவன் பஸ்ஸில் இலவசப் பயணத் திட்டத்தை அறிவிக்கா விட்டாலும் மேலும் கட்டண உயர்வை அறிவிக்காமல் இருக்கலாமல்லவா?

சென்னை–57. இரணியல் 'சலே.'

● பம்பாய் மாநகர் தவிர இந்தியாவில் வேறு எங்கேயும் தமிழகம் போல் இவ்வளவு ஜோரான பஸ்களை இத்தனை ரூட்களில் ஓட்டும் பஸ் ஸர்வீஸ் கிடையாது. ''தமிழ் நாட்டிலிருந்து வருகிறீர்களா? ஆஹா. என்ன உயர்தரமான பஸ் ஸர்வீஸ்'' என்று அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா, பீஹார், ஒரிஸா, புதுடில்லி போன்ற இடங்களிலெல்லாம் என்னிடம் சொல்லிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

தமிழக அரசினர் நல்ல மாடர்ன் பஸ்களை நிறைய வாங்கி விடுகிறார்கள். அவை வாங்கப் பணம் ஆகாயத்திலிருந்து பொழியுமா? உலக வங்கியில் கடன் வாங்கி இருக்கிறார்கள். வாங்கிய கடனைத் திரும்பிக் கொடுத்தால்தானே இன்னும் உயர்தரமான ஸர்வீஸ் நடத்த முடியும்? அந்த பஸ்களைப் பயன்படுத்தும் பிரயாணிகள் தான் அதற்குண்டான செலவைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். மான்யம், மான்யம் என்றால் அதையும் கடைசியில் வரி செலுத்தும் பொதுஜனத்திடம்தானே வசூலித்தாகவேண்டும், வரி என்ற சவுக்கடி மூலமாக?

கல்கத்தா. எஸ். எஸ். வேங்கடராமன்.

● சென்னை நகரத்தில் மீண்டும் பஸ் கட்டணம் உயர்கிறது. பழியை உலக பாங்கின் தலையில் போட்டு விடலாம். அடுத்த தவணைக் கடன் வேண்டாம் என்று சொல்லி விட்டுத் தனியார்களிடம் உடனே பஸ் ரூட்டு களை நடத்தும்படி விட நமது சோஷலிஸம் இடம் கொடாது! பரிதாபம்!

நம் நாட்டில் தனியார்கள் சாராயக்கடைகளை ஏலத்தில் எடுத்து லாபமடித்துக் கொழுக்க ஆட்சேபணையில்லை. ஆபாசத் திரைப்படங்களைக் கலை என்ற பெயரில் தயாரித்துக் கொள்ளை லாபமடிக்கவும் ஆட்சேபணை கிடையாது. ஆனால் தனியார் துறையினர் பஸ் போக்குவரத்தையோ, உற்பத்தியைப் பெருக்கும் இதர தொழில்களையோ, மின் உற்பத்தி நிலையங்களையோ லாபகரமாகவும், ஆரோக்கியமான போட்டியின் காரணமாக மக்களுக்குக் கட்டுப்படியாகும் விலையிலும் அளிக்கத்தான் நமது உதவாக்கரை சோஷலிஸம் தடை போடுகிறது!

சென்னை. சுப்ரமணியன் அனந்தராமன்.



பணம் படுத்தும் பாடு

- அபரிமித வரிகள் காரணமாகக் கணக்கில் வராத கருப்புப் பணம் தேசப் பொருளாதாரத்தையே பாழ்படுத்தி வருகிறது.

- ''என்னப்பா இது: பணம் கட்டி எவ்வளவு நாழியாயிற்று இன்னும் கணக்கில் வரவு வைத்துக் கொண்டு பாஸ் புத்தகத்தைத் தரவில்லே. இவங்களுக்கெல்லாம் அரட்டை அடிக்கவே நேரம் சரியா இருக்குது''— இது பாங்க் வாடிக்கையாளர் ஒருவரின் குரல்.

- 'வரவனெல்லாம் பெரிய்....ய மந்திரிங்கற நினைப்புலதான் வரான். ரேஷன் கடையிலே காத்திருப்பான். சினிமா தியேட்டரில் காத்திருப்பான். ஆனா பாங்குக்கு வந்து விட்டால் போதும். தாம் தூமென்று குதிக்க ஆரம்பித்து விடுவான்' —ஊழியர் ஒருவர்.

- ஒரு பாங்கில் கேட்டது:
மானேஜர்: (ஒரு பெண்ணிடம்) ஏம்மா' நீ காய்கறி வியாபாரம் தானே பண்ணப் போறே? அதுக்கு 1000 ரூபாய் போதுமே? எதுக்கும்மா இரண்டாயிரம் ரூபாய்?
பெண்மணி: ஸார். எனக்கு வேண்டியது ஆயிரம் ரூபாய் தான். ஆனால் அந்த ஆளு தான் (ஒரு அரசியல் புள்ளியின் பெயரைச் சொல்லுகிறார்.) 'இது திருப்பித் தர வேண்டியதல்ல. ''அம்மா'' பணம், 2000 ரூபாயிலே ஆயிரம் ரூபாய் நீ எடுத்துக்கோ; மீதியை நீ எனக்குக் கொடுத்து விடு'' என்கிறார்.

- நாட்டில் பண வீக்கம் அதிகமாகிக் கொண்டே போகிறது. இதைக் கட்டுப் படுத்தினால் தான் விலைவாசியைக் கட்டுப் படுத்த முடியும். எந்த அரசு இதைச் செய்யப் போவுதோ? — இது ஓரளவு பொருளாதாரம் படித்தவர்களின் பேச்சு.


''இதையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு இந்தக் கட்டுரைக்கான தகவல்களைச் சேகரிக்கப் பலரைச் சந்தித்தோம்.



லோன் மேளா எனப்படும் கடன் தரும் விழாவில் திரு. ஜனார்தன் பூஜாரி (வலது)

லோன்கள் பல விதம்

எவ்வளவிதமான லோன்கள் கொடுக்கிறார்கள்? டி. ஆர். ஐ. என்று ஒரு லோன் இருக்கிறது. அதாவது வருடத்தில் 3000 ரூபாய் வருமானம் இருந்தால் இது கிடைக்கும். 6500 ரூபாய் வரை கடன் பெறலாம். ஐந்து வருடங்களில் திருப்பித்தர வேண்டும். இதுக்கு 4 சதவீத வட்டி உண்டு. இன்னொன்று பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் சுயவேலை வாய்ப்புக்காக 25000 ரூபாய் கடன் வழங்குவது. இது தவிர ஏற்கெனவே கணக்கு வைத்துள்ளவர்கள் தன் சொத்துக்களைக் காட்டித் தொழிலை விருத்தி பண்ணிக் கொள்ளப் பெறுகிற லோன். பெர்ஸனல் லோன் என்று ஒன்று. (ஆனால் எந்த மானேஜரைக் கேட்டாலும் இதுமாதிரி எதுவும் கிடையாது என்றுதான் சொல்வார்கள். வேண்





○ பாங்கு வாடிக்கையாளர் ஊழியரைக் குறை கூறுவதும் ஊழியர் வாடிக்கையாளர் மீதே பழி சுமத்துவதும் சகஜம்.

○ இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் கட்டிடம் சென்னை நகருக்கே எழில் சேர்க்கும் ஒன்று.

டியவர்களுக்கு மட்டும் ஒரு பக்கத்தில் வாரி வழங்கிக் கொண்டிருப்பார்கள்.)

''ஒரு காலத்தில் சாதாரண மக்கள் கடன் என்று கேட்டு பாங்குக்கு வர முடியாது. ஆனால் இப்போது நிலை வேறு. உண்மையிலேயே பாங்குகள் இப்போதுதான் மக்களை வந்து அடைந்திருக்கின்றன. இதை ஒப்புக் கொள்வீர்களா?''

''நீங்கள் சொல்வது சரி; தேசியமய மாக்கப்பட்டதன் பலனை இப்போது தான் மக்கள் அனுபவித்து வருகிறார்கள். ஆனால் எங்களுக்கு வருத்தம் என்னவென்றால் அரசியல் கட்சிகளின் துணையோடு வருகிறார்கள். அதனாலேயே அவர்கள் ஏமாற்றப் படுகிறார்கள். நடுவில் இருப்பவர் சாப்பிட்டு விட்டுப் போய் விடுகிறார். நேரடியாக எங்களைச் சந்தித்தால் முழுப்பயனையும் அடையலாமே? எங்கள் பாங்கைப் பொறுத்த அளவில், ஆளும் கட்சிகளின் லெட்டர்பேட் தாங்கி வரும் கடிதங்கள் குப்பைத்தொட்டியில் தான் விழும். நியாயமான முறையில் அணுகுவோருக்கு நிச்சயம் லோன் உண்டு.''

''நிறைய மானேஜர்களே 'திருப்பித்தர வேண்டியதில்லை' என்று கூறித்தான் பணம் தருகிறார்கள் என்கிறார்களே?''

''இது அபாண்டமான குற்றச்சாட்டு. கொடுக்கும் கடனைத் திருப்பி வாங்க நடவடிக்கை எடுத்தால் தான் மானேஜருக்கு நல்லது. இல்லையேல், 'கடனைத் திருப்பி வாங்கத் திறமையில்லாதவர்' என்ற பட்டத்தைக் கொடுத்து எங்காவது மாற்றி விடுவார்கள். அதனாலேயே குப்பனுக்கும், சுப்பனுக்கும் பணத்தைக் கொடுத்துவிட்டு, ஒவ்வொரு குப்பத்தையும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறேன். கடன் வாங்கும் எல்லோரும் திருப்பித் தர வேண்டாம் என்ற எண்ணம் உடையவர்கள் அல்ல; நாலு பேருக்கு நடுவில் ஒருவர் மட்டும் பணம் திருப்பிக் கட்டினால் மற்றவர்கள் 'அவனை ஏதோ தீண்டத்தகாதவன் போலப் பார்த்துக் கேலியாகப் பேசுகிறார்கள். இது கண்டிக்க வேண்டிய ஒன்று!''

அலைந்து, அலைந்து டெபாஸிட்

நிறைய டெபாஸிட் கொடுத்தால் அந்த நபர் சொல்லுபவருக்கெல்லாம் கடன் கொடுக்கிறார்கள். உதாரணமாக, தென் மாவட்டத்து உணர்ச்சிமிகு அமைச்சர் ஒருவரின் இலாகாவின் கீழ் ஒரு வாரியம் இருக்கிறது. அந்த வாரியத்தின் டெபாஸிட்டைப் பெறப் பல பாங்குகள் போட்டியிட்டன. ஆனால் வென்றது மூன்று பாங்குகள் மட்டுமே, மந்திரியின் நேரடிக் கண்காணிப்பில், இந்த டெபாஸிட் உத்தரவு போடப்பட்டது — ஒரு கண்டிஷனுடன்! அதாவது அவரது நண்பர்கள் பலருக்கு

லாரி வாங்க அந்த வங்கிகள் கடன் தர வேண்டும். ஒத்துக் கொண்டார்கள். பாங்கு அதிகாரிகள். அமைச்சர் அனுப்புவித்த ஆட்கள் போலியான R. C. புத்தகத்தைக் காட்டி, 2 லட்சம், மூன்று லட்சம் என்று வாங்கிக் கொண்டு போனார்கள். அவ்வளவு தான். அப்புறம் மானேஜர் லாரிக்கு கடன், வாங்கியவனைத் தேடிக் கேட்டால் லாரியும் இல்லை; ஒன்றும் இல்லை. எல்லாம் போலி! R.C. புக்கைக் காட்டி ஏதாவது ஒரு லாரியைக் காண்பித்து நம்பர் பிளேட்டை மட்டும் அப்போதைக்கு மாற்றி மானேஜரை ஏமாற்றி இருக்கிறார்கள். மாட்டிக் கொண்டவர்களெல்லாம் இப்போது 'மந்திரியினால் தான் இதைச் செய்தோம்' என்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் இப்படிக் கடனாகக் கொடுத்திருக்கிறார்களாம்.

இதுபோல் டெபாஸிட், டெபாஸிட் என்று அலையும் மானேஜர்கள் பள்ளத்தில் விழுவதுண்டு.

''நாங்க என்ன செய்யறது ஸார் இவ்வளவு தொகை டெபாஸிட் வசூல் பண்ணனும் என்று குறியீடு செய்து விடுவார்கள். அதனால் தான் இந்த நிலை. எங்களால் செய்ய முடியாவிட்டால் 'திறமையற்றவர்' என்று கூறி, மாற்றிவிடுவார்கள்.''.

பாங்கியில் குடும்பம்

சமீபத்தில் ஒரு பாங்கில் பார்த்தது. கேஷ் கவுண்டரில் கேஷியர், வீட்டிலிருந்து தமது சிறிய மகளையும் அழைத்து வந்து உட்கார வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தார். நாளைக்கு அவர் தம் மனைவியையும் அழைத்து வந்து அந்தக் கூண்டுக்குள்ளேயே குடும்பம் நடத்தினாலும் ஆச்சர்யமில்லை. யார் தட்டிக் கேட்கப் போகிறார்கள்? வாடிக்கையாளர்கள் எதிரில் நிற்க 'மாமியார் கொடுமையை'ப் பேசும் பெண்கள். சினிமா விமர்சனம் செய்யும் ஊழியர். சிகரெட் பிடிக்கும் டெல்லர். இப்படிப் பல ரகம். பாங்க் என்பது பொது மக்களுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஒரு ஸ்தாபனம் என்பதை அடிக்கடி மறந்து விடுகிறார்கள். 'ஊழியர்களின் இந்தப் போக்குக்குக் காரணம் என்ன?' என்று ஒரு மானேஜரை விசாரித்த போது அவர் சொன்னார்:

''முதல்லே ரெக்ரூட்மெண்ட் பாலிஸியை மாத்தணும் ஸார்! இப்போதெல்லாம் கடமைகளை விட உரிமைகள் பெரிதாகப் போய் விட்டன. நாங்களெல்லாம் ஊழியர்களை அணைத்துக் கொண்டு போனால்தான் வேலை ஆகும். ''என்னம்மா; முடிச்சுடு கண்ணு'' என்று அவ்வப்போது அன்பு வார்த்தைகளை அள்ளி வீச வேண்டும். தொந்தரவு கொடுக்கும் ஊழியர்களின் மேல் கைவைத்தால் பாதுகாக்க இருக்கவே இருக்கிறது யூனியன். இதனாலேயே பல ஊழியர்கள் மேல் பதவிக்கு வர மறுத்துக் குமாஸ்தாவாகவே இருக்கிறார்கள்!''

கிளையே இல்லாத ஊருக்கு டிராஃப்ட்

பல வங்கி ஊழியர்களிடம் பேசியபோது அவர்கள் சொன்னது:

''வாடிக்கையாளர்களில் சிலர் எங்களை அவர்கள் வீட்டு வேலைக்காரர்களைப் போல் நினைக்கிறார்கள். சிறிய தவறுக்குக் கூடத் தாறுமாறாகத் திட்ட ஆரம்பித்து விடுகிறார்கள். தவறுவது மனித இயல்பே தவிர, வேண்டுமென்றே யாரும் தவறு செய்வதில்லை. கல்கத்தா, பம்பாய் செக்கைக் கட்டி விட்டு அடுத்த நாளே பணம் வேண்டும் என்று காலில் சுடுநீரைக் கொட்டிக் கொண்டு வந்து நிற்பவர்கள் உண்டு. ஆறு நாட்கள் ஆகும் — என்றால், ''என்னய்யா பாங்க் இது?' என்று விஷயங்களைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். ஒரு செக் ஆனர் (honour) செய்யப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள இரண்டு நாட்கள் ஆகும் — சென்னையைப் பொறுத்த வரை. மற்ற ஊர்களென்றால், தாமதம் தான் ஆகும். வாடிக்கையாளர் அவசரத்துக்குப் பணத்தைக் கொடுத்து விட்டால் நாங்கள் வம்பில் மாட்டிக் கொள்ள வேண்டியதுதான்.''

''கிளையே இல்லாத ஊருக்கு டிராஃப்ட் தருகிறீர்களே?''

''இது தவறுதான். ஆனால் எங்கள் வேலைப் பளுவையும் நீங்கள் பார்க்க வேண்டும். சமயத்தில் மூன்று கவுண்டர்களை ஒருவரே கவனிக்க வேண்டி வரும். பாங்க் ஆப் இந்தியா சேர்மன் வாகுல் அவர்கள் தேசியமயமாக்கப்பட்டபின், வேலைகள் வளர்ந்துள்ள அளவுக்கு ஆட்கள் அதிகமாகவில்லை என்று கூறியுள்ளார். அதிகாரிகளுக்கு யூனியனைக் கண்டால் பிடிப்பதில்லை. ஆனால் அடிப்படை உரிமைகளைக் கூடத் தர மறுக்கும் மானேஜர்கள் இருக்கும் போது யூனியன் அவசியமாகிறது. அவர்களை ஒழுங்குபடுத்தவே யூனியன் இருக்கிறது. அப்புறம், பஞ்சப்படி, போனஸ், என்று குரல் கொடுக்க யூனியன் வேண்டாமா? மற்றபடி, ஊழியர்களை மாற்றும்போது யூனியன் குறுக்கே வந்து தடுக்கிறது என்பது சரியல்ல.''

யார் பெரியவர்?

ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் மானேஜருக்கு மிகவும் தொந்தரவு கொடுத்து வந்தார் ஓர் ஊழியர். மானேஜர் மேலிடத்துக்கு எழுத, அவருக்குத் திண்டுக்கல்லுக்கு மாற்றி உத்தரவு போட்டு விட்டார்கள். விடுவாரா ஊழியர்? பாங்கு இயக்குனர்களில் ஊழியர்களின் பிரதிநிதி இருக்கிறாரே எதற்கு? அவரைப் பிடித்தார். மாற்றல் கேன்ஸல் ஆனது. மறுபடி மதுரை கிளை; அதே மானேஜர்! யார் பெரியவர் என்ற போராட்டம் இப்போது அங்கு நடைபெறுகிறது!

''அம்மா'' பணம்

கடன் வாங்குபவரிடம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ''இது அம்மா பணம்;


இல்லங்களில் எழில் கூட்டிட
உள்ளம் உவகையில் திளைத்திட
அணிந்திடுவீர் கோ-ஆப்டெக்ஸ்
சேலைகளை...
த்தள்ளுபடி
20%
40%
10.10.84 முதல்
23.10.84 வரை
கோ-ஆப்டெக்ஸ்
பொன்விழா ஆண்டு
DIPR 210/84 Elegant

வாங்கினால் கொடுக்க வேண்டியதில்லை'' என்று தவறான எண்ணத்தைக் கிளப்பிவருகிறார்கள் என்றார் ஒரு மானேஜர். ஏழை மக்களுக்கு லோன் வாங்கித் தருவதற்காகவே ஆளும் கட்சியில் சில குறிப்பிட்ட நபர்களை நியமித்திருக்கிறார்கள். தலைவர்களை அணுகினால் கூட ''நீங்கள் அவரைப்போய்ப் பாருங்கள். எல்லாம் செய்வார்'' என்று கூறி விடுவார். அப்படிப்பட்ட பொறுப்பில் உள்ள ஒரு இளைய தலைவரிடம் பேச்சுக் கொடுத்தோம். ''என்ன ஸார், எங்களுக்கு என்று ஒரு மனச்சாட்சி அல்லது பொறுப்பு இல்லையா? கடன் கேட்டு எங்களிடம் வருபவர்களை நாங்களே ஒரு முறை நன்கு பரிசீலித்து விட்டுத்தான் சிபாரிசு செய்கிறோம். கடன் வாங்கிய பிறகு எதற்காகக் கடன் வாங்குகிறாரோ அதைச் செய்கிறாரா என்று நானே சென்று பார்க்கிறேன். பணம் கட்டவில்லை என்றால், நானே போய் ஞாபகப் படுத்திக் கட்ட வேண்டிய அவசியத்தை விளக்குகிறேன். காலம், காலமாகப் பெரிய பண முதலைகளுக்கே மக்கள் பணத்தை வாரி விட்ட இந்த பாங்குகள் இன்றைக்குத்தான், மக்களிடம் வந்திருக்கின்றன. இந்தப் பணியை நாங்கள் செய்வதாலேயே எங்கள் மீது இந்த அதிகாரிகளுக்கு ஒரு வெறுப்பு. ஏதோ இவர்கள் வீட்டு பணத்தை எடுத்துக் கொடுப்பது போல் தான் பேசுகிறார்கள். மேலும் மேலும் மக்களுக்கு பாங்குகளின் பணியை விஸ்தரிக்க வேண்டுமென்றால், ரெகவரி (Recovery) முக்கியமான ஒன்று என்பது எங்களுக்குத் தெரியாததல்ல. நாங்கள் சிபாரிசு செய்த ஆள் ஒழுங்காகத் திருப்பிக் கட்டவில்லை என்றால், அடுத்து வரும் எங்கள் சிபாரிசுகளை பாங்க் மானேஜர் எப்படி ஏற்றுக் கொள்வார்?''

உருப்படியான காரியங்கள்

ஏதோ பணம் கிடைக்குது. வாங்கித் 'தாம், தூம்' என்று செலவழித்து விடலாம் என்று எண்ணும் சிலருக்குத் தான். ஆனால் அந்தப் பணத்தை வைத்து உருப்படியாக வாழ்க்கையை நடத்துபவர்களும் உண்டு. உதாரணமாக, உஸ்மான் சாலையில், நடமாடும் காய்கறி வண்டி வைத்திருக்கும் கிருஷ்ணன். ''முன்னெல்லாம் முதலீடு இல்லாமல் எக்கச்சக்க வட்டிக்குப் பணத்தை வாங்கி வியாபாரம் செய்வேன். இதனால் நான் சம்பாதித்த லாபம் எல்லாம் வட்டிக்கே சரியாகப் போய் விட்டது. ஆனால் இப்போது பாங்குகளின் உதவியால் கடன் பெற்றுத் தினமும் என்னால் முடிந்த அளவு கடனைத் திருப்பி அடைத்து வருகிறேன். கணிசமான லாபமும் கையில் நிற்கிறது'' என்று கூறிப் பிரதமரை வாழ்த்துகிறார்.

இவர் போல் எத்தனையோ நபர்கள். தையல் மிஷின்களை வைத்துப் பிழைத்துக் கொள்பவர்கள், மாவு ஆட்டும் மிஷினை வாங்கி வியாபாரம் செய்கிறவர்கள் என்று பலவகை.

சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் கிருஷ்ணாபுரி குடியிருப்போர் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் சமீபத்தில் செய்த ஒரு நல்ல காரியம்: அவர்கள் குடியிருப்புக்குப் பக்கத்தில் உள்ள கோவிந்தசாமி நகர் என்ற குடிசைகள் நிறைந்த பகுதிக்கு பாங்கில் (ஐ. ஓ. பி.) கடன் வாங்கி, குடிசைகளுக்குப் பதில் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டித் தந்துள்ளார்கள்.

கட்டுரை: நமது நிருபர்கள்

புகைப்படங்கள்: சுபா

மேலட்டை வண்ணப்படம்: யோகா

(அடுத்தவாரம்: ரிஸர்வ் பாங்கின் பணி குறித்து ரிஸர்வ் பாங்க் முன்னாள் கவர்னர் திரு ஜகந்நாதன் கூறுகிறார்.)

அடுத்தவாரம்: சிறப்புப்பேட்டி

சுப்ரீம் கோர்ட் முன்னாள் நீதிபதி



வி.ஆர்.கிருஷ்ணய்யர்

? இப்போதுள்ள ஆட்சிமுறை சிறந்ததா? அல்லது ஜனாதிபதி ஆட்சிமுறை நல்லதா? ஏன்?


? கொள்கைச் சார்புள்ள நீதித்துறை (Committed judiciary) தேவையா?

? அயல் நாடுகளில் உள்ள இந்திய அறிஞர்கள் பற்றி தங்கள் கருத்து என்ன? அவர்கள் இந்தியாவுக்கு எப்படி உதவ முடியும்?

? தேர்தல்களில் பணபலம் ஆதிக்கம் செலுத்தாமல் மோசடிகள் நிகழாமல் இருக்கத் தாங்கள் கூறும் யோசனைகள் என்ன?

இவற்றுக்கும் இன்னும் பல முக்கியமான பிரச்னைகள் குறித்தும் தெளிந்த சிந்தனையுடன் ஆணித்தரமான பதில்களை அளிக்கிறார்.

"நாங்கள் இளவயதினரோ முன்போல சுறுசுறுப்பானவர்களோ அல்ல என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் எங்கள் உணர்வுகள் பாதகமின்றி அப்படியே இருக்கின்றன. அதேபோல் எங்கள் உடமைகளும். ஓரியண்டல் பாதுகாப்பு அதற்கு உறுதிசெய்கிறது."



திரு ஸேனும் திருமதி ஸேனும் ஓய்வுபெற்ற தம்பதி. பாதுகாப்பின் ஒரு வடிவம்.

ஓய்வு பெறுவது என்றும் களிப்பாறுதல் முழுவதும், முற்றிலும் அமைதிபெறல். ஆயுள் முழுவதும் நேர்மையாக உழைத்ததன் பயன்களை காலம் நீட்டிக்கொண்டு அனுபவித்து மகிழும் தருணம். இந்த ஆனந்தம் நீடிக்குமாறு உறுதி செய்து கொள்ளுங்கள். வீடுபுகுந்து கொள்ளை, திருட்டு, தீ, கலகங்கள் இன்னும் என்ன நேருமோ, எப்பொழுது நேருமோ யார் அறிவார்? ஆபத்திற்கு இடம் கொடுப்பானேன்?

ஸேன் தம்பதியர் இடம் கொடுக்கவில்லை.

புத்திசாலியான அந்த வயோதிக ஜோடி என்ன செய்தார்கள் தெரியுமா? ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸிடமிருந்து ஹவுஸ் ஹோல்டர்ஸ் பேக்கேஜ் பாலிஸி எடுத்துக் கொண்டார்கள். குறைந்த ப்ரீமியம் தொகைக்கு அவர்களுக்கு தீ, களவு, கலகம், காஸ் சிலிண்டர் வெடித்தல்—மற்றும் வெள்ளம், புயல் போன்ற விபத்துகளிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கிறது.

கூடுதல் ப்ரீமியம் ஏதுமின்றி அவர்களுக்கு இந்த பாலிஸி சொந்த விபத்துக்களுக்கும் (ரூ. 10,000 வரை) பயணத்தின் போது சாமான்கள் இழப்பிற்கும் (ரூ. 1,000 வரை) மேலும் பொதுமக்களுக்கான பொறுப்புக்களுக்கும் (ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20,000 வரை) பாதுகாப்பு கொடுக்கிறது.

இவ்வளவு குறைந்த ப்ரீமியத்தில் இதைவிடச் சிறப்பான பெறுமானம் எங்கிருந்து கிடைக்கும். ஸேன் தம்பதியின் விவேகம் உங்களுக்கு வழிகாட்டட்டும். உங்களுக்கு அருகாமையில் உள்ள ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள். ஜி.பி.ஓ. தபால் பெட்டி நெ. 7037 புதுதில்லி 110002

பயம் இன்றி வாழுங்கள்

ஹவுஸ்ஹோல்டர்ஸ் பேக்கேஜ் பாலிஸி

மதிப்பிடப்பட்ட பெறுமானம்	நடப்பு ஆண்டு ப்ரீமியம்
ரூ. 20,000 -	ரூ. 60 -
ரூ. 30,000 -	ரூ. 90 -
ரூ. 50,000 -	ரூ. 150 -
ரூ. 60,000 -	ரூ. 180 -
ரூ. 75,000 -	ரூ. 225 -
ரூ. 1,00,000 -	ரூ. 300 -

தி ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

SIMOES-D/OIC/104/84 TAM

குண்டூசி

தீபாவளி மலர் — 1984

விலை ரூ. 7-00

காஞ்சிப் பெரியவாளின் பூர்ண அருளாசியுடன், தெய்வீக விஷயங்களுடனும் தொண்டாற்றி வரும் உங்கள் அபிமான "குண்டூசி" இவ்வாண்டு அக்டோபர் மாத இதழ்தான் வழக்கம் போல் தீபாவளி பொன்னாளில் உங்கள் கரங்களில் மலரும்.

பல புதுமையான சிறப்பு அம்சங்களும், மனதிற்கு மகிழ்ச்சியூட்டும் ஆன்மீக விஷயங்களும், அரசியல் கதைகள், சிறப்புக் கட்டுரைகள், கவிதை இலக்கியம், தீபாவளி மாதப்பலன், கடவுளர்களின் கலர் படங்கள் மற்றும் பல அம்சங்களும் இடம் பெறுகின்றன.

எமது அன்பு ஏஜெண்டுகளும், வாசகர்களும் முன்கூட்டியே பிரதிகளைப் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

தபாலில் நேரிடப் பெற விரும்பும் அன்பர்கள் ரூ. 7-50 மட்டும் அனுப்பி வைக்கக் கோருகிறோம்.

வருட சந்தா தீபாவளி மலர் உள்பட ரூ. 22-00 மட்டும்

நிர்வாகி, **குண்டூசி,** — 78, டாக்டர் பெசன்ட் சாலை, சென்னை-14

இப்போது பரபரப்பாக விற்பனையாகிறது...

கோகுலம்

அக்டோபர் இதழ்

16 பக்க வண்ணப் படக்கதை

மதுபுரத்தின் மன்னன்



கதை: ஆனந்தி ✻ சித்திரம்: வினு

96 **பக்கங்கள் ✻ விலை: இரண்டே ரூபாய்தான்!**

கதைகள் • கவிதைகள் • சிரிப்புத் துணுக்குகள் • அறிவியல் விஷயங்கள்

வெள்ளித்திரை

நீ தொடும் போது



● ஒரு சிறுகதை வேண்டுமா?

பார்வையில்லாத பெண்ணை மனத்தில் நினைத்து, ஏங்கி, ஒரு சந்தர்ப்ப சபலத்தில் அவள் குளிப்பதைப் பார்க்கிறார் ஜனகராஜ். கோவிலில் மைக் வைக்காத குறையாய் மன்னிப்புக் கேட்கப் போய், அந்தப் பெண்ணின் பெரியப்பாவிடம் மாட்டிக் கொள்கிறார். உடனே சுபமான முடிவு, கல்யாணம். அந்தக் குளியல் சீன் (புதுமுகம் ரேணுகா) என்னதான் இருந்தாலும் கொஞ்சம் ஓவர்.

● நெடுங்கதைப் பிரியரா?

மேற்சொன்ன இடத்தில் கட் பண்ணி விட்டால் சிறுகதை. ஆனால் க்ளைமாக்ஸ் வரை அவருக்கு வேலை இருப்பதால் அந்தப் பெண், புருஷன் என்று நினைத்துக் கயவனிடம் முதலிரவை இழந்து... என்று ஒரு நெடுங்கதையாக வளர்கிறது.

● நாவல் தான் உங்கள் விருப்பமா?

லக்ஷ்மி — ராஜேஷ் — ரகுவரன் இதற்கென்றே. லக்ஷ்மி மகா நல்ல பாடகி. இவருக்கு ராகங்கள் அடிமை. அந்த கானத்திற்கு ரகுவரன் அடிமை. ஆனால் லக்ஷ்மி? ராஜேஷின் வக்கிர புத்திக்கு அடிமை! வயதான லக்ஷ்மி, இளமையான ரகுவரன். முதலில் குரு சிஷ்ய பாவம். அப்புறம் காதல். வழக்கமாய் இசை பற்றிய படங்களில் வருகிற மாதிரி லக்ஷ்மி பாடக்கூடாது என்று ராஜேஷ் சத்தியம் வாங்கிக் கொள்கிறார். முக்கோணம், நாற்கோணம் என்று பல ஜோடிகள்! நிறைய சம்பவங்கள் (சுவையானவைதானா என்பது வேறு விஷயம்.)

● சும்மா துணுக்கு மட்டும் படிக்கிற ஜாதியா நீங்கள்?

வாருங்கள், உங்களுக்கு நிறைய விஷயம் இருக்கிறது.

ரகுவரனுடைய சட்டைக்கு பட்டன் தைத்து விட்டு, மிச்ச நூலை அறுப்பதற்கு லக்ஷ்மி வாயைக் கொண்டு போக, அதே சமயம் ரகுவரனும் கொண்டு வர, யம்மா, என்ன இயல்பான வெட்கம், பொய்க் கோபம், சிணுங்கல்! அந்தக் காட்சி ஒரு ரசமான துணுக்கு. இப்படியே பல.

● இசையும் கவிதையும் இருந்தால் போதுமென்கிறீர்களா?

ஐந்து பாடல்கள், காதுக்கு இடைஞ்சலில்லாத இசை. 'வாய் திறவாய் பூங்குயிலே'— மு. மேத்தாவின் பாடல். 'தென்றல் காற்றும் ஆடை மாற்றும், அல்லிப் பூவும் காதை நீட்டும்' என்கிற வரிகளைக் குறித்துக் கொள்ளுங்கள். 'அந்தப் பூங்குயில் வந்து பாடாதோ?' — வைரமுத்துவின் திறமை (என்ன வைரமுத்து சார், திருப்திதானே? பாடல் வரிகளை விமர்சனத்தில் குறிப்பிட்டு விட்டோம்.)


● ஆசிரியருக்குக் கடிதம் பகுதியில் பேர் வந்தால் போதுமா?


எழுதிப் போட எத்தனையோ கேள்விகள் இருக்கின்றன. 'லக்ஷ்மி காரெக்டரை ஏன் இப்படி முடமாக்கி மூலையில் வைத்தீர்கள்?' 'ஜி. சீனிவாசன் ரொம்ப நேரத்திற்குக் காணவில்லையே, அந்தமானில் நாதசுரம் வாசிக்கவா போயிருந்தார்? வேண்டும் என்கிற போது கடைசியில் வந்து சேர்கிறாரே, எப்படி?' 'ஜனகராஜ் கசாப்பு வேலை செய்கிற கடைசிக் காட்சியில் இத்தனை குரூரம் ஏன்?' 'படத்தை நீங்கள் நிறுத்தியிருக்கும் இடம் என்ன முடிவைச் சொல்ல எண்ணி?' இத்யாதி... இத்யாதி...


● 'மொத்தத்தில் படம்...' என்கிறீர்களா?

ஆசிரியரில்லாத ஒரு வாரப் பத்திரிகை!

—ஜெயமன்மதன்


பசியாறச் சாப்பிடட்டும்!
ஈழத் தமிழர் நலன்
பசி தீராது!


சாதனை விளக்க சைக்கிள் ஊர்வலம் நாங்கள் இல்லாமையா?.. ஊம்..ம்.ம் கிளம்புங்க!.. கிளம்புங்க!


பாம்பு! பாம்பு!
சமாதம்



கல்கி

1984 அக்டோபர் 14
மலர் : 43 இதழ் : 11
ரக்தாக்ஷி புரட்டாசி 28



நீதிபதி சொன்ன உண்மைக் கதை!

பல்லாண்டுகளுக்கு முன்னால் இங்கிலாந்தில் மன்னன் ஜேம்ஸ் ஒரு மாதா கோயிலுக்குப் பாதிரி ஒருவரை நியமித்தார். அந்த நியமனம் செல்லாது என்று தீர்ப்பாயிற்று. 'ஒரு பாதிரியை நியமிக்கக் கூட மன்னனுக்கு உரிமை இல்லையா? நீதிபதிகள் தங்கள் தீர்ப்பை மாற்றிக் கொள்ள வேண்டும்' என்றான் மன்னன். மறுத்து விட்டனர். 'சட்டங்கள் எல்லாமே அரசாணையினால் தான் பிறக்கின்றன; எனவே அரசாணைப்படி நீதிபதிகள் தீர்ப்பு வழங்க வேண்டுமே தவிர அதனைப் புறக்கணிக்க நீதிபதிகளுக்கு உரிமை இல்லை' என்று வாதாடினான் ஜேம்ஸ். அப்போதும் நீதிபதிகள் மசியவில்லை. கடைசியாக மன்னன் அனைத்து நீதிபதிகளையும் அழைத்து, 'மன்னிப்புக் கேட்கிறீர்களா? சிறைக்குப் போகிறீர்களா?' என்றான். பத்துப் பன்னிரண்டு நீதிபதிகள் மன்னிப்புக் கோரி மண்டியிட்டு அரசன் கரத்தை முத்தமிட்டுப் பிரிந்தனர். போப் என்ற ஒருவர் மட்டும் மறுத்துவிட்டார். காராகிருஹம் சென்றார். செல்லும்போது கூறினார்: ''அரசன் சட்டத்தைப் பிறப்பிக்கலாம்; ஆனால் தர்மம் அதனினும் பெரிது. இன்று என் சக நீதிபதிகள் மன்னனிடம் மன்னிப்புப் பெற்று விட்டனர். ஆனால் தர்மத்தை நிலைநாட்டும் ஆண்டவனிடம் மன்னிப்பு பெற முடியாது!

சென்னையில் நடந்த வள்ளலார் காந்தி விழாவில் (வழக்கம்போல் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் ஆதரவில் தான்) உயர்நீதிமன்ற நீதிபதி மாண்பமை திரு. மோகன் எடுத்துக் கூறிய சரித்திர நிகழ்ச்சி இது.

அநாதி காலம் தொட்டே தர்மத்துக்கும் சட்டத்துக்கும் இடையில் ஒரு போராட்டம் இருந்து தான் வருகிறது. பாண்டவர் வனவாசம் சட்டப்படி சரியே. எனவேதான், 'தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும், தருமம் மறுபடி வெல்லும்' என்று பாரதி அர்சுனன் வாய்மொழியாகப் பாடினான். அங்கே 'நீதி' என்றோ, 'சட்டம்' என்றோ பாரதி பேசவில்லை. அண்ணல் காந்தி சட்டத்தை எதிர்த்தார்; அதற்குத் தர்மத்தைத் துணை கொண்டார். சமீப காலத்துக்கு வந்தால் என். டி. ராமராவை டிஸ்மிஸ் செய்தது கூட சட்டப்படி சரியாக இருக்கலாம். அவ்வாறுதான் பிரதமரும் உள்துறை அமைச்சரும் நாடாளுமன்றத்தில் வாதாடினார்கள். ஆனால் அந்த நடவடிக்கை தர்மமாகாது. தர்மத்தை நிலைநாட்டுவது அவரவர் மனச்சாட்சியே.

சட்டம், நீதி, தர்மம் அனைத்தையும் கவனித்து நமது நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினாலும் நமது ஆட்சியாளர்கள் அந்தத் தீர்ப்பு தங்களுக்குச் சாதகமாய் இல்லையென்றால் சட்டத்தையே மாற்றிவிடுகிறார்கள்! இதற்குப்பல உதாரணங்கள் உண்டு என்றாலும் சமீபத்திய நிகழ்ச்சியைக் கவனிப்போம்:

கேரளத்தில் பஞ்சாயத்து, ஊராட்சி, நகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புக்களின் காலம் முடிந்தது. ஆனால் அரசு தேர்தல்களை நடத்தவில்லை. இது முறையல்ல என்று கருதிய உயர்நீதிமன்றம், 'உள்ளாட்சி அமைப்புகளிடத்தில் விசேஷ அதிகாரிகளை நியமிக்காதீர்கள். அதற்குப் பதில் இப்போதுள்ள அமைப்புக்களின் வாழ்நாளையே இன்னும் சில மாதங்களுக்கு நீடித்து, அதற்குள் தேர்தல்களை நடத்தி விடுங்கள்' என்றது. கருணாகரன் தலைமையிலான அரசுக்கு இந்தத் தீர்ப்பு பிடிக்கவில்லை. காரணம், பெரும்பாலான உள்ளாட்சி அமைப்புக்களில் எதிர்க்கட்சியினரே பெரும்பான்மையினராக உள்ளனர்! எனவே அரசு இரு அவசரச் சட்டங்களைப் பிறப்பித்தது. ஒரு சட்டத்தின் மூலம் உள்ளாட்சி அமைப்புக்களின் காலக் கெடுவை நீடிக்கும் அதிகாரமே தனக்கு இல்லை என்றாக்கிக் கொண்டது! (அரசு தன் அதிகாரத்தைக் குறைத்துக் கொள்வது இதுவே முதல் தடவையாகக் கூட இருக்கலாம்!) மற்றொரு அவசரச் சட்டம் மூலம் உள்ளாட்சி அமைப்புக்களின் அதிகாரங்களை அரசாங்கமே நேரடியாக ஏற்றுக் கொண்டு விசேஷ அதிகாரிகளை நியமிக்காது விட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிப்பது போல் காட்டிக்கொண்டது! சட்டத்துக்கும், தர்மத்துக்கும் இடையில் போராட்டம் தொடர்கிறது!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.

மூலக் கனல்

நா. பார்த்தசாரதி

அத்தியாயம் 27

மறுபடி திருவுக்கு நினைவு வந்தபோது டி. பி. யில் தன் அறையின் படுக்கையில் தான் கிடத்தப்பட்டிருப்பதையும், கன்னையனும் சர்மாவும் படுக்கை அருகே நிற்பதையும் உணர்ந்தான். உள்ளூர் டாக்டர் ஒருவரும் அவசரமாக அழைக்கப்பட்டு வந்திருந்தார்.

இரவு ஏழரை மணி சுமாருக்கு எழிவிருப்பை அடைந்திருந்த சர்மாவும், கன்னையனும் டி. பி. யின் அறையில் திருவைக் காணாமல் திகைத்து வாட்ச்மேனிடம் விசாரித்திருக்கிறார்கள். "எங்கேயோ போர்வையை எடுத்துப் போர்த்திக்கிட்டு வெளியே போனாருங்க" என்றான் அவன். தேரடிப் பகுதியின் மேல் அவனுக்கு இருந்த 'ஸெண்டிமெண்டல் அட்டாச்மெண்ட்' சர்மாவுக்கு நன்கு தெரியுமாதலால் உடனே காரைத் தேரடிக்கு விடச் சொன்னார் அவர். தேரடியை அடைந்ததுமே அந்த ஆள் நடமாட்டமற்றுப் போயிருந்த பாழடைந்த பகுதியில் கார் ஹெட்லைட் வெளிச்சத்திலேயே அவன் விழுந்து கிடப்பதை அவர்கள் பார்த்து விட்டார்கள். முதலுதவி செய்து உடனே டி. பிக்குக் கொண்டு வந்து சேர்த்து அப்புறம் டாக்டரையும் அழைத்து வந்து கவனித்திருந்தார்கள். அவன் குடித்திருந்தது வேறு அவர்கள் கவலையை அதிகமாக்கியது. "கவலைப்பட ஒன்றுமில்லை. ஆனால் இந்த உடல்நிலையில் இவர் குடிப்பது கூடாது. கண்டபடி சுற்றவும் கூடாது. பரிபூரணமான ஓய்வு தான் தேவை!" என்றார் டாக்டர்.

அன்றிரவு பன்னிரண்டு மணிக்கு மேல் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து "சாமீ! என்ன பண்ணுவீங்களோ, எப்படிச் சொல்லிக் கூட்டிக்கிட்டு வருவீங்களோ என் மகன் ராஜாவை உடனே நான் பார்க்கணும்"— என்று சொல்லிவிட்டுச் சர்மாவிடம் சிறு குழந்தை போல் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தான் திரு. சர்மாவுக்கும், கன்னையனுக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. 'அவருக்கு எந்தப் பெரிய ஏமாற்றத்தையும் அளிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்'— என்று சென்னையிலிருந்து கிளம்பியபோது சைக்கியாட்ரிஸ்ட் சொல்லி அனுப்பியிருந்தது நினைவுக்கு வந்தது. "இப்பத் தூங்குங்கோ காலம்பர ஏற்பாடு பண்றேன். பார்க்க முடியல்லேன்னாலும் டிரங்க்கால்லே உங்க மகனோட ஃபோன்ல நீங்க பேசறதுக்காவது ஏற்பாடு பண்றேன்" — என்றார் சர்மா.

"அவனுக்குத் தான் என் மேலே கோபமாச்சே என்னோட ஃபோன்ல பேசச் சம்மதிப்பானா?" என்று திரு உடனே கேட்டான்.

"சிரமம்தான் இருந்தாலும் நான் உங்களுக்காக வாதாடி அவனைப்பேச வைக்கிறேன். கவலைப்படாதிங்கோ... நீங்க அவனோட பேசலாம். இங்கே டி. பி. யிலேயே ஃபோன் இருக்கு. அங்கே மெட்ராஸ்ல அவன் இல்லே. எங்கே இருக்கான்னு விசாரிக்க ஏற்பாடு பண்றேன்" என்றார் சர்மா.

மகனோடு பேசலாம் என்ற ஏற்பாடு திருவுக்கு ஆறுதலும் திருப்தியும் அளித்தன. அடுத்த நாள் காலையில் சர்மா சென்னையிலுள்ள சைக்கியாட்ரிஸ்ட்டுடன் பேசிக் கலந்தாலோசித்துத் திருவும் அவன் நீண்ட பல ஆண்டுகளாக நேரில் சந்திக்காத மகனும் போனில் பேசிக் கொள்ள ஏற்பாடு செய்தார்.

மகன் தன்னோடு ஃபோனில் பேச இசைந்தது திருவுக்கு ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் அளித்தது. "என்னை மன்னிச்சிடுப்பா! நான் இனிமே தப்பு எதுவும் பண்ண மாட்டேன். என்னை மாதிரி அரசியல்வாதிகளாலே அடுத்த தலை முறையே கல்வி, உழைப்பு ஒழுக்கம், நேர்மை, நியாயம் எல்லாத்திலேயும் நம்பிக்கையற்றுச் சீரழிஞ்சு போச்சுங்கிறதை இப்ப நானே உணர்றேன்" — என்று திரு பேச்சை ஆரம்பித்தான். மகன் பதிலுக்கு அதிக நேரம் பேசவில்லை.

"நீங்க திருந்திட்டீங்கங்கிறதை அறிஞ்சு எனக்கும் சந்தோஷம்தான் அப்பா இதே மாதிரித் தொடர்ந்து நீங்க நேர்மையா இருக்கணும்கிறது தான் என் ஆசை" — என்று சொல்லி அவன் பேச்சை முடித்தான். அப்பா என்று அவன் வாய் மொழியாகவே தான் அழைக்கப்பட்ட போது திருவுக்கு மெய் சிலிர்த்துப் புல்லரித்தது. தன்னை முதல் தரமான சமூக விரோதி என்று கண்டித்து எழுதிய தன் மகனே இப்போது 'அப்பா' என்று பிரியமாக அழைத்து மன்னித்தாற்போன்ற தொனியில் பேசிய இந்த ஒரு விநாடிக்காகவே இத்தனைகாலம் தான் உயிர் வாழ்ந்தது வீண் போகவில்லை என்பது போல் தோன்றியது. திருவின் மனம் மிகவும் நிறைவாக இருந்தது அப்போது.

அன்று நடுப்பகலில் திடீரென்று 'பவர் கட்' ஏற்பட்டு ஏ.சி. நின்று போய் அறை ஜன்னல் கதவுகளைத் திறந்து வைக்க நேர்ந்திருந்தது. திரு தூக்கம் பிடிக்காமல் கண்களை மூடியபடி படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். அவன் தூங்கி விட்டதாக நினைத்துக் கொண்டு வெளியே டி.பி. வராந்தாவில் சர்மாவும், கன்னையனும் தங்களுக்குள் சகஜமாக உரையாடிக்கொண்டார்கள். கன்னையன் சர்மாவைக் கேட்டான்:

''என்ன? கடைசியிலே எப்படிச் சமாளிச்சீங்க... சர்மாஜீ?''

''ஒருவழியாச் சமாளிச்சாச்சப்பா! சைக்கியாட்ரிஸ்ட்டோட மகளையே எழில்ராஜாவா நடிக்கச் சொல்லி ரிகர்சல் நடத்தி அப்புறம் ஃபோனிலே பேசவும் வச்சு இந்த மனுஷனைத் திருப்திப்படுத்தி நிம்மதியாத் தூங்க வைச்சாச்சு...''

''எவ்வளவு நாளைக்கித் தான் எழில்ராஜா இல்லேங்கற கசப்பான உண்மையைச் சொல்லாமே இப்படிப் பொய் சொல்லியே சமாளிக்க முடியும் சர்மாஜீ?''

''டாக்டர் உண்மையைச் சொல்லக்கூடாதுங்கிறவரை இப்படியே நாடகம் நடத்திச் சமாளிக்க வேண்டியதுதான்''—

இந்த உரையாடல் அறைக்குள் திருவுக்குத் தெளிவாகக் கேட்டது.

அன்று பிற்பகல் சர்மாவும், கன்னையனும் மறுபடி திருவைப் பிரக்ஞை தவறிய நிலையில் கண்டு பதறிப் போனார்கள். உள்ளூர் டாக்டர் வந்து ஏதேதோ செய்தார். நடுநடுவே நினைவு வந்த போதெல்லாம் 'ஐயோ!



என் மகனை யாரும் கொல்லலே... அவன் தப்பி விட்டான்... நான் அவனோடு தான் ஃபோனில் பேசினேன்'' — என்று இரைந்து கத்திவிட்டு மறுபடி மறுபடி பிரக்ஞை தவறி மூர்ச்சையானான் திரு. அன்றிரவு நிலைமை மிகவும் மோசமாகியது. எழிலிருப்பு டாக்டர் திருவைச் சென்னைக்கே கொண்டு போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தினார். காரிலேயே திருவைப் பின் ஸீட்டில் படுக்கவைத்து இரவோடிரவாகச் சென்னைக்குக் கொண்டு போனார்கள். சென்னையை அடையும்போது அதிகாலை நான்கு மணி ஆகிவிட்டது. மாட வீதி மருத்துவ மனையில் அவன் தங்கியிருந்த அதே பழைய ஏ. ஸி. அறையில் மீண்டும் திரு அனுமதிக்கப்பட்டுப் படுத்துக் கிடந்தான். நினைவு வரும்போது, ''ஐயோ, என் மகனை யாரும் கொல்லவில்லை அவன் தப்பி விட்டான்'' — என்று ஹிஸ்டீரியா வந்தவன் மாதிரி அலறுவதும் மறுபடி நினைவு தவறுவதுமாகவே நாட்கள் ஓடின. அவ்வப்போது சிறிது நேரம் பிரக்ஞை வருவதும் போவதுமாக அவன் ஒரு முழுநேர மனநோயாளியானான். கோமாவில் கழிந்த நேரம் அதிகமாகவும் பிரக்ஞையில் கழியும் நேரம் குறைவாகவும் இருந்தன. அவன் சாகவிரும்பினான். ஆனால் சாவும் வரவில்லை. வாழ்வும் நன்றாக இல்லை. நடைப் பிணமாக அவ்வளவு— கூட இல்லை — நடப்பது நின்று போய்ப் பல நாளாயிற்று — வாழ்ந்தான் அவன்.

நினைவு பிசகாமல் வரும் சில போதுகளிலும் எழிலிருப்பு டி. பி. யில் சர்மாவும் கன்னையனும் பேசிய உரையாடலைக் கேட்ட ஞாபகம் வந்து உடம்பு பதறி நடுங்கும். தன் மகனைத் தானே கொன்றிருக்கிறோம் என்ற பயங்கர உண்மை நினைவு வந்து சித்ரவதை செய்யும். துப்புத் துலங்காததாலோ என்னவோ, போலீஸ் அவனைத் தேடி வந்து கைது செய்யவும் இல்லை. தான் படுத்த படுக்கையாகப் பைத்தியம் பிடித்துச் சித்தஸ்வாதீனமிழந்து அனுபவிக்கும் இந்தக் கொடுமை தனக்கு இயற்கையாக அளித்த தண்டனையோ என்று கூட அவனுக்கே பிரக்ஞையான வேளைகளில் தோன்றும். அவன் மனமே அவனைக் கைதியாக்கி வதைத்தது. நாளடைவில் டாக்டர், நர்ஸ், எல்லோரும் அவன் ஒரு தேறாத கேஸ் என்று கைவிட்டு விட்டாற் போன்ற நிலைக்கு அவனை ஒதுக்கினார்கள். அவன் சேர்த்து வைத்திருந்த சொத்தும், ரொக்கமும் வசதிகளுமே அவனை விரட்டி விடாமல் மருத்துவ மனையில் வைத்துத் தொடர்ந்து உபசரிக்க உதவின. பார்க்க, வந்து கவனிக்க என்று அவனுக்கு உறவினர் யாருமில்லை. கன்னையன் கூட வேறு இடத்தில் வேலைக்குப் போய் விட்டான். சர்மா மட்டும் அவனைப் பிடிக்காவிட்டாலும் விசுவாசம் காரணமாகத் தொடர்ந்து வந்து அவனைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

எப்போதாவது நினைவு வரும்போது தான் இப்படி எல்லாம் சீரழியாமல் நேராக வாழ்ந்திருக்கலாமோ என்று இலேசாக ஓர் எண்ணம் திருவின் மன ஆழத்தில் மெல்லத் தலைகாட்டும். எந்த மூலக் கனலிலிருந்து அவன் பல வெளிச்சங்களை அடைந்திருந்தானோ அந்த மூலக்கனல் இன்று அதன் ஊற்றுக் கண்ணிலேயே அவிந்து போயிருந்தது. மறுபடி அதை ஏற்றிச் சுடரச் செய்வதற்குரிய வயதும், வாழ்வும் சக்தியும் இனி அவனுக்கு இருக்குமென்று தோன்றவில்லை.

நாட்கள், வாரங்கள் மாதங்கள் என்று காலம் ஓடியது. சாகவும் முடியாமல்,

அருள்வாக்கு

விலையுயர்ந்த ரத்னமொன்று நம்மிடமிருந்தால் வீட்டிலே எங்கே வைப்போம்? வாசல்புற ரூமில் வைப்போமா? தோட்டத்தைச் சேர உள்ள ரூமில் வைப்போமா? ரொம்பவும் காபந்தாக மத்தியில் இருக்கிற ரூமில் இரும்புப் பெட்டியில் தான் வைப்போம். அப்படியே வேதத்தில் ஜீவ ரத்னமான சிவநாமத்தை ரொம்பவும் ஜாக்கிரதைப்படுத்தி வைத்திருக்கிறது. நாலில் மத்தி இரண்டாவது. நாலு வேதங்களில் இரண்டாவது யஜுஸ். (தைத்திரிய க்ருஷ்ண) யஜுர் வேதத்தில் மத்திய பாகம் அதன் நாலாவது காண்டம். அந்தக் காண்டத்தில் மத்யம் ஐந்தாவது ப்ரச்னம். இதிலே தான் நடுவில் ஸ்ரீருத்ர ஸூக்தம் எனப்படுவதில் நடுநாயகமாக பஞ்சாக்ஷரம் வருகிறது. பஞ்சாக்ஷரத்துக்கும் மையமாக 'சிவ' என்ற த்வயக்ஷரம் இருக்கிறது.

உடம்பை மெய் என்கிறோம். அதிலே இருக்கிற பரமாத்மாவை மெய்ப்பொருள் என்பார்கள். ஸத் வஸ்து என்று வேதாந்தத்தில் சொல்வதைத் திருவள்ளுவர் அப்படியே தமிழில் 'மெய்ப்பொருள்' என்கிறார். வேதங்களையெல்லாம் ஒரு சரீரமாக—மெய்யாக வைத்துக் கொண்டால் அதில் உயிராக மெய்ப்பொருளாக இருப்பது சிவநாமா. உயிர்பரமாத்மா உள்ளது ஹ்ருதயம் என்றால் அந்த ஹ்ருதயம் சரீர மத்தியில் தான் இருக்கிறது. இதைத்தான் ஞானசம்பந்தரும் சொல்கிறார்:

வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாத(ன்) நாமம் நமச்சிவாயவே.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்




அடுத்த வாரம்
கல்கி
21.10.1984
தீபாவளி
சிறப்பிதழில்...
ஸ்ரீவேணுகோபாலன்
எழுதும்
மகத்தான சரித்திரத்
தொடர் கதை
மோகினி
திருக்கோலம்
ஆரம்பம்
✲ பிரான்ஸ் தேசத்தின் ஆதிக்கம் இந்தியாவில் பரவி இருந்த காலம். அந்த அலை வேகத்தில் அடித்து வரப்பட்டு இங்கு கரை ஒதுங்கிய பாரீஸ் அழகி...
✲ இன்னும் மராட்டியக் கொள்ளை; பிண்டாரிகள் சூறை. இவற்றை எதிர்க்கும் மாவீரம்....

வாழவும் முடியாமல் இரு படுக்கையில் கிடந்தான். அவன் ஒருவன் உயிரோடிருப்பது உலகத்துக்கும் — ஏன் — சமயாசமயங்களில் அவனுக்கும் கூட மறந்துபோயிற்று.

'வீழ்த்தப்பட்டதன் காரணமாகவே எழுந்திருக்க வேண்டும் என்றும், ஒடுக்கப்பட்டதன் காரணமாகவே உயர வேண்டும் என்றும் நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு பின்னிரவின் கருக்கிருட்டில் எழிலிருப்பின் தேரடி மண்ணில் தோன்றிய வாழ்க்கை வைராக்கியங்கள் இன்று அவனுள் முற்றிலும் அவிந்து வற்றி அடங்கிப் போயிருந்தது.

'ஊரவர் கூடி உற்சவம் எடுத்துப் பேரிசை வளர்த்துப் புகழினைப் பெருக்கி அவனுள் அன்று கிளர்ந்து மூண்ட அந்த மூலக்கனலை அவித்திருந்தார்கள். புகழும், பதவிசுகமும், அளவற்ற பணமும், அவனைப் பண்பற்றவனாக்கி முடித்திருந்தன. தன்னையும் தன்னை ஒத்த அரசியல்வாதிகளையும் பற்றி நினைத்தபோது தாங்கள் தண்டனைக்குரியவர்கள் என்று அவனுக்கே இப்போது தோன்றியது. ஊருணி நீரில் நஞ்சு கலப்பதைப் போலவும், ஊர் நடுவில் நச்சுச் செடி பயிரிடுவதைப் போலவும் தாங்கள் சமூக வாழ்வைச் சீரழித்திருப்பதாகத் தோன்றியது. நோக்கமும், திட்டமும், கொள்கைகளும் இல்லாமல் பெரிய உயரங்களில் தடலடியாக ஏறி அந்த உயரங்களை அசிங்கப்படுத்தித் தாழச் செய்திருக்கிறோம் என்று மனம் கூசியது. எதை எதை எல்லாமோ சீர்திருத்தப் போவதாகக் கிளம்பி எல்லாவற்றையும் சீரழித்திருப்பது புரிந்தது. இப்படி நினைத்து நினைத்து நினைவின் சோர்விலேயே அயர்ந்து கண்களை மூடினான் அவன்.

• • • •

மறுபடி அவன் கண் விழித்தபோது அறை குளிர்ந்திருந்தது. எல்லா ஜன்னல்களும் மூடப்பட்டு ஏ. சி. ஓடிக் கொண்டிருந்தது. எதிரே சுவர்க் கடிகாரம் மாலை ஆறு மணியைக் காட்டியது. அறைக்குள் மங்கலான விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. நர்ஸும், அறையைத் தூசிதுடைத்துச் சுத்தம் செய்யும் வேலைக்காரியும் தங்களுக்குள் சிரித்துப் பேசிக் கொண்டே உள்ளே நுழைந்தார்கள்.

''தேர் நிலைக்கு வந்தாச்சா அம்மாளு?''

''வந்தாச்சு சிஸ்டர்! வெய்யில் அதிகமா இருந்திச்சுன்னு பகல்லே யாரும் வடம் பிடிக்கலே. வடக்கு மாடவீதி முக்குலே கொண்டாந்து ரெண்டு மணிக்கு அப்பிடியே விட்டுட்டாங்க... மறுபடி நாலு மணிக்குத்தான் வடம் பிடிச்சாங்க. இப்பத்தான் தேர் நிலைக்கு வந்திச்சு...''

நினைவு மங்கிக் கொண்டிருந்த திருவுக்குக் கிணற்றுக்குள் ஆழத்தில் இருப்பவன் கேட்க முடிந்ததைப் போல் இந்த உரையாடல் மங்கலாகக் காதில் விழுந்தது.

ஆம் தேர் நிலைக்கு வந்து விட்டது. மாடவீதியில் காலையில் புறப்பட்ட தேர் மட்டுமில்லை. அவனுடைய மனத்துக்குள்ளிருந்து புறப்பட்ட நினைவுத் தேரும் ஓர் ஓட்டம் ஓடித் தவித்து எங்கெங்கோ சுற்றி அலைந்துவிட்டு அவசர அவசரமாகத் திரும்பி நிலைக்கு வந்திருந்தது. அவன் தளர்ந்து போயிருந்தான்.

''அம்மாளு நீ இங்கேயே இரு ... மறுபடியும் இந்த ஆளுக்கு நினைவு தப்பிப் போச்சு... அவசரமா டாக்டரைக் கூட்டிக்கிட்டு வரணும்... நான் போறேன்'' — என்று நர்ஸ் அப்போது பதறிய பதற்றம் அதல பாதாளத்தில் இருப்பவனுக்குக் கேட்பது போல் மங்கலாகத் திருவுக்குக் கேட்டது.

நினைவு இருக்கிற நேரங்களை விட, நினைவு தப்புகிற நேரங்களே சமாதி நிலையின் சுகத்தைத் தனக்கு அளிப்பது போல் அவன் சமீபத்தில் பல முறை எண்ணி, எண்ணி மகிழ்ந்திருக்கிறான். இப்போதும் அந்தச் சுகமான மகிழ்ச்சியில் தான் அவன் மூழ்கியிருக்கக் கூடும். அந்த ஒரு மகிழ்ச்சியாவது இனி அவனுக்குக் கிடைக்கட்டுமே, பாவம்!

(நிறைந்தது)

அடுத்த வாரம்

சட்டம் என்ன சொல்கிறது?

அன்றாட வாழ்க்கையில் ஏற்படக் கூடிய பல பிரச்னைகள் பற்றிய சட்ட விளக்கங்களை அளிக்கிறார் வழக்கறிஞர் திருமதி ஜெயந்தி நடராஜன். எளிய முறையில் எழுதப்பட்ட நிரந்தரப் பயன்தரும்





இலவச இணைப்பு



மின்னி மிளிரும் மேனி... என்னாளும் உங்கள் பொன்னான கனவு...நிறைவேற வரமளிப்பது ரெக்ஸோனா.

சரளம், கருவா, கிராம்பு, ஹபுஷா (தேவதாரம்) ஆகிய நாலு வகை இயற்கைத் தைலங்களின் நற்கலவையான ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு இயல்பான வழியாகும்.

ரெக்ஸோனா உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைத்திருக்கிறது.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS RX 84 2012 TM

வேங்கை வனம்



அத்தியாயம் 25

வேங்கைகள் வாழ்க

தூம், தூம், தூம்...

பெரிய பெரிய கல்லுருண்டைகளைக் கொண்டு *கல்கால் கவண் மூலம் கோட்டைக் கதவங்களை நோக்கி எறியும் சத்தம் இது...

யானைகள் பிளிறுகின்றன...

வீரர்கள் ஆவேசம் நிறைந்த குரல் எழுப்புகிறார்கள்...

இத்தனையும் கோட்டைக்கு வெளியே... எதிர் நடவடிக்கையாக கானப்பேரெயில் கோட்டை மீது பொருத்தப்பட்டிருந்த யந்திரங்களின் மூலம் பாயும் கூரிய அம்புகள் பலரைப் பலியாக்குகின்றன.

அந்தச் சத்தம் காற்றில் மிதந்து வந்து வேங்கைவனத்தில் எதிரொலிக்கிறது.

ஆனால் வேங்கைமார்பன்...

மயங்கி வீழ்ந்துபட்ட திருமேனியைப் பளிங்கு மாளிகைக்குக் கொண்டு செல்லலாம் என்றாலோ, யாரோ உட்தாழ்ப்பாள் இட்டிருக்கிறார்கள்.

அப்படியே அவளை மடியில் இடத்தி வேங்கைகள் அருகில் நெருங்கா வண்ணம் எவ்வளவோ முயன்று பார்க்கிறான்.

வேங்கைகளோ அவனது கட்டுக்கு மீறி அருகே வந்து திருமேனியை முகர்வதும், உறுமுவதும், திருமேனிச் சிலையண்டை ஓடிச் சென்று அண்ணாந்து கவனித்து, பிறகு ஓடிவருவதுமாகவிருக்கின்றன.

ஆ! தியாகவல்லி அன்றைக்குச் சொன்னது நினைவுக்கு வருகிறது.

வேங்கைகள் சிலையைக் கண்டே இவனிடம் ஐக்கியமாகி இருக்கின்றன. அதனால் தான் இவளைக் கண்டதும் பாசத்தைப் பொழிய அலமருகின்றன.

எவராவது துணைக்கு வருவார்களா என்று திரும்பிப் பார்க்கிறான்.

அப்போது தியாகவல்லி ஒரு குவளையில் நீர் கொண்டு மலர்ந்த முகத்துடன் வருகிறாள். அவள் ஆடிய நாடகத்தின் எதிர் பார்த்த முடிவாயிற்றே!

''இவ்வளவையும் நீ கவனித்துக் கொண்டு தானிருந்தாயா, தியாகவல்லி?''

அவள் மெது வாகக் காதோடு உதடுகளைக் குவித்து,

''இது நான் நடத்திய நாடகம். நீங்கள் பக்கத்திலிருக்கிற வரை திருமேனியை வேங்கைகள் ஒன்றும் செய்துவிட முடியாது என்பதை எனது அனுபவத்தை வைத்துத் தீர்மானித்தேன். விஷப்பரீட்சை தான். ஆனால் விடை அமுதமாகக் கிடைத்து விட்டது'' என்று கூறி நீர்க்குவளையை நீட்டுகிறாள்.

தியாகவல்லியைக் கூர்ந்து கவனித்துப் புன்முறுவல் பூத்த வேங்கைமார்பன், குவளையில் இருந்த நீரை உள்ளங்கையில் நிரப்பித் திருமேனி முகத்தில் தெளிக்கிறான்...

தூம், தூம், தூம்...

கோட்டையை உடைக்க வெளியே துவம்சம் நடக்கிறது.

---

* இந்த யந்திரத்தைப் பற்றிக் குறுந்தொகையில் பேசப்படுகிறது.



தியாகவல்லி ஓடிச் சென்று, தான்தான் காரணம் என்று தெரியா வண்ணம் மாளிகைக் கதவின் தாழ்ப்பாளை மட்டும் திறந்து விட்டு ஓடிவருகிறாள்…

மயக்கம் தெளிந்து கண்களைத் திறக்கிறாள் திருமேனி.

நினைவு திரும்புகிற போது, தான் எங்கிருக்கிறோம் என்பதை அறிய முடிகிறது. வேங்கைமார்பனின் திண்ணிய தொடையின் மீது அமர்ந்து மலையனைய மார்பில் சாய்ந்து…

இமைகள் படபடக்கின்றன. எழ முயற்சி செய்தபோது…

ம்ம்ஹூஹூஹூ…

கோவி. மணிசேகரன்

வேங்கைகள் மீண்டும் அருகே வந்து கொள்ளிக் கண்களையும் கோரப் பற்களையும் காட்டி உறும…

'ஓ' என்று மீண்டும் அதிர்ச்சிக்கு ஆளாகி அவனைச் சேர்த்து அணைத்துக் கொள்கிறாள். அந்த வேங்கைமார்பில் இரண்டாம் முறையாகச் சாய்ந்த சுகம்…

அவன், அவளை அணைத்துத் தட்டிக் கொடுத்துத் தேற்றுகிற போது கண்ட ஸ்பரிசம்…

வண்ணமலரின் மென்மையோ? வசந்த ருதுவின் வருடலோ என்று வியக்கிறாள். அந்தத் தொடுவுணர்வில் அவளது மன்மத உடம்பில் புஷ்பபாணங்கள் உருவாகின்றன.

சற்றைக்கெல்லாம் திருமேனிக்குத்தெளிவு பிறக்கிறது. ஏதோ ஒரு புதுசுகம். அது வரையில் காணாத ராஜசுகம். படித்ததினால் மட்டுமே அறிந்த ரதிசுகம்…

வேங்கையின் வீர மாமடியில் சயனித்து இருக்கிறோம். அந்த வீரக்கரங்கள் எவ்வளவு மென்மையாகத் தன்னைத் தடவி விட்டுக் கொண்டிருக்கின்றன…

இதயத்துள் யாரோ, யாரோ என்ன காமதேவன் விளக்கேற்றுகிறான்.

அந்த இதய அகலில் வேங்கைமார்பன் நெய் வார்ப்பது போல…

மரத்தை வெறுத்து முள்வேலியில் கூடு கட்டப் பார்த்த பேதைமையை எண்ணிப் பார்க்கிறாள். என்னே விதியின் விளையாட்டு!

மலரைப் புறக்கணித்துக் காம்புகளை நேசித்து, முடிவில் அந்தக் காம்புகள் கண்களைக் குத்தாமல் தப்புவித்ததும் காலத்தின்

கவிதையோ என்று கண் மலர்ந்து நோக்குகிறாள்...

''திருமேனி ''...

''சொல்லுங்கள்...''

அவளது கண்களில் பாண்டிய நாட்டின் விலையுயர்ந்த முத்துக்கள் அரும்புகின்றன.

''திருமேனி வேங்கைகள் உன்னை ஒன்றும் செய்யா! நீ இங்கு வருவதற்கு முன்னமே உன்னைச் சிநேகித்தவை. எழுந்திரு.''

அவனது மார்பில் தான் தலைவைத்திருக்கிறோம் என்பது புரிகிறது. அந்த மார்பின் உறுதி தெரிகிறது: அதன் துடிக்கும் ஓசையும் கேட்கிறது! அளவுக்கு மீறித் துடிக்கிறது...

மெல்ல எழுகிறாள்; அப்போதும் அவசரமாக எழ முடியவில்லையா? மனம் இடம் தரவில்லையா?

பக்கத்தில் தியாகவல்லி...

நாணத்தால் நெற்றி வியர்க்கிறது.

தொல்காப்பியத்து அவத்தாபேதங்கள் ஆறும் நினைவுக்கு வருகின்றன. சே அதை எழுதியவர் தொல்காப்பியராகத்தானிருக்க முடியும். வீணாகத் தமிழ்ச்சங்கத்தில்மறுத்துப் பேசினேன்... தொல்காப்பியரும் ஆண் மகன்தானே? காதலித்து இருக்கக் கூடாதா என்ன? அனுபவங்கள் பொருளதிகாரமாய்ப் புன்னகைத்து இருக்கின்றன...

தும், தும், தும்... கவணைக்கல் வீச்சு.

விர், விர், விர்... அம்புகள் பறக்கின்றன.

பிளிறல், கனைத்தல்...

வீரர்களின் ஆவேசக் குரல்கள்...

நங், நங், நங்கென்று வாட்களின் ஒலிகள்..

ஓ... பரதவர்கள் புகுந்து கள்ளப் போர் புரிந்து பாண்டிய வீரர்களை விரட்டப்பார்க்கிறார்கள் என்பது வேங்கைமார்பனுக்குப் புரிகிறது...

அருகே வந்து முகத்தும் உடம்பை அவளது தொடையில் தேய்த்தும், பாதங்களை நக்கியும் அன்பைத் தெரிவித்த வேங்கைகளை அன்போ் குனிந்து தடவி, முத்தமிடுகிறாள்...

''வேங்கை, பாக்கியம் செய்திருக்கிறது'' என்றான் வேங்கைமார்பன் குறும்பாக.

தலைகுனிந்த வண்ணமே கண்களை மட்டும் அண்ணாந்தி — அடடா அப்படிப் பார்க்கிறபோது அவள் எவ்வளவு அழகாக இருக்கிறாள் — கவனிக்கிறான். அந்தக் கவனிப்பில், ஒரு மாறுதல் தெரிகிறது...

அவள் மெல்ல இல்லையென்பது போலத் தலையசைத்து, ''வேங்கையின் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது.'' என்றாள்.

அர்த்தம் புரிகிறது...

தொடர்ந்து போர்க் குரல்கள். ஆயுத ஓசைகள் கேட்ட வண்ணமிருக்கின்றன.

''போரை நிறுத்துங்கள்'' என்று ஓங்கிக் கூச்சலிடலாமா என்று ஒருகணம் சிந்திக்கிறாள் திருமேனி.

''என்ன யோசிக்கிறாய் திருமேனி? இனி போரை யாராலும் நிறுத்த முடியாது. இரண்டில் ஒன்று பார்த்தே ஆக வேண்டும்''

''ஏன் நிறுத்த முடியாது?'' என்றாள் தியாகவல்லி.

''நிறுத்தலாம். ஒரு வெள்ளைத் துணி தான் தேவை. ஆனால் இதன் பின் விளைவு பயங்கரம். இருதரப்புக்கும் உதவிக்கு வந்தவர்கள் வீணாகப் பகை நெஞ்சம் கொள்வர். ஒரு பெண்ணின் சுயநலத்துக்கு இப்படி ஒரு யுத்தம்; இப்படி ஒரு சமாதானம் என்றால், அடுத்து நாம் உதவிக்கு அழைக்கிறபோது புறக்கணித்து விடுவார்கள். நடப்பது நடக்கட்டும்.''

கம்பீரமாக எழுந்து நின்ற திருமேனி, அவளது திருமேனிச் சிலையை ஒருகணம் நோக்கிவிட்டுப் ''போர் நடக்கட்டும்'' என்று ஆணைவமாகக் கூறுகிறான்.

அப்போது, யந்திரப் பொறிகளிலிருந்து புறப்பட்ட அம்புகள் வானில் சரக் கூடம் கட்டுவன போலப் பின்னிப் பாய்ந்து விழுகின்றன.

'போர் நடக்கட்டும்' என்று கூறிய திருமேனியைக் கவனிக்கிறான் வேங்கைமார்பன். அவனது பார்வையைப் புரிந்து கொண்ட திருமேனி, ''பிரபோ...'' என்றாளேயொழிய குரலில் ஒரு நாணம்...

முதல் முறையாக அவ்வாறு அழைத்த நாணம்...

''சொல் திருமேனி?''

''போர் நடக்கட்டும். இனி பின்வாங்குவது இழுக்கு உங்களுக்கோ, எனது தந்தைக்கோ மட்டுமல்ல; எனக்கே இழுக்கு.''

வேங்கைமார்பன் மேலும் விளக்கம் எதிர்பார்ப்பது போல விழிக்கிறான்.

''பிரபோ நீங்கள் தமிழரென்று நிரூபிக்க வேண்டாமா? தமிழ் வீரரென்று நிரூபிக்க வேண்டாமா! தமிழனுக்கே பிறந்தவள்என்று நிரூபிக்க வேண்டாமா? நான் கடத்திச் சென்றவனுக்கு மனைவியாகவில்லை; களம் கண்ட வேங்கைக்கு மனைவியானேன் என்று சரித்திரம் செப்ப வேண்டாமா?''

வேங்கைமார்பன் ஒரு கணம் கண்களை மூடிப் பெருமிதமாகப் பெருமூச்செறிகிறான்.

தியாகவல்லி கேட்டாள்: ''நீங்கள் ஒப்புக் கொண்டாலே எல்லாம் சரியானது போலத்தானே இளவரசி?''

திருமேனி, வேங்கை மரத்துப் பொன்னிறப் பூவாய்ச் சிரிக்கிறாள்.

''சரியாகிவிடும். ஆனால் விதி இந்தத் திருப்பத்தை யுத்த களத்தில் விளையாடிவிட்டிருக்கிறது. இப்போது நான் ஒப்புக் கொண்டாய் விட்டது என்ற செய்தி வெளியே சென்றால், வெவ்வேறு விதமாகவும் பேசலாம். அது எனது வேங்கைவனத்துக்குப் புகழ் சேர்ப்பதாகாது''

''உங்கள் தந்தை தோற்பதா இளவரசி?''

''எப்படிப் பார்த்தாலும் இழப்பு இல்லை. தோற்றால், வெற்றி கண்டவரை வீரமருமகனாக ஏற்கிறார்; தந்தை வென்றால், தோல்வி கண்டவருக்கு மாலைக் கொடுத்து வெற்றித் திருமகனாக்குகிறார். ஆனாலும் வேங்கைதான் வெல்ல வேண்டும். அப்போது தான் அந்த வேங்கையையே மருமகனாகக் கொண்ட பாண்டிய நாட்டைக் கண்டு பலரும் அஞ்சுவர், படையெடுக்கவும் பயப்படுவர்!''

வேங்கைமார்பன் தோள்களில் மகிழ்ச்சி மலையெனத் திரண்டது. அவனது நெஞ்சம் இணைத்து வைத்த வேங்கைகளை வாழ்த்திக் கொள்கிறது. அதற்குக் காரணமாக நின்று,



பண்டிகைக் காலங்களில் உங்கள் தோற்றத்திற்கு ஒளியூட்டுவது தரம் நிறைந்த வீணா வேஷ்டிகள்
அம்பாஸடர், ராஜாராணி மற்றும் ராஜா ஃபைன், 2/64 நைஸ் வேஷ்டிகள். வசதியான உடுப்பு. 100% முழுமையான பருத்தியில் தயாரிக்கப்பட்டு மெர்சிரைஸ் செய்யப்பட்டுள்ளது.
Veena
வேஷ்டிகள்
உங்கள் தனித் தன்மையை மேம்படுத்துகின்றன.
இது ஒரு எஸ்.எஸ்.எம். க்ரூப்பின் தயாரிப்பு.

துணிந்து துணைபுரிந்த தியாகவல்லியைப் போற்றிக் கொள்கிறது.

"நேரமாகிறது; நான் புறப்படுகிறேன் திருமேனி!"

"சென்று வாருங்கள் பிரபோ. வென்று வாருங்கள்! எனது வேங்கை சோங்கை யாகாது."

அன்று சொன்ன சொல்லுக்குப் பிராயச் சித்தம் தேடுவது போல் சொல்லிச் சிரிக் கிறாள், திருமேனி.

உணர்ச்சி மலர்ந்து, மகிழ்ச்சி, மகரந்த மாய்க் கொட்டுகிறது.

அவன் புறப்பட்டுச் செல்கிறான். அவனது நடையில் இப்போது தான் வேங்கை குடி கொண்டது.

கோட்டைக்கு வெளியே...

இரவு பூத்து போர் ஓய்ந்த நேரம்..

வானில் ஐப்பசி மேகத்துள் திணறிக் கொண்டிருக்கிறாள் நிலாவழகி.

அப்போது பார்த்து துயின்மனையுள் நுழை கிறான் காளிங்கன். அவனைக் கண்டதும் பாண்டிய மாமன்னர் சற்றே முகமலர்ச்சி கண்டு. "வா, காளிங்கா உன்னைப்பற்றித் திருமேனி சொன்னாள்; நானும் உன்னைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்" என்றார்.

"எனக்கு மன்னிப்பு உண்டா மன்னர் பெருமானே?"

"நீ என்ன தவறு செய்து விட்டாய்? நல்லது; நீ வந்த விஷயத்தைச் சொல்ல லாம்."

"நாளை கோட்டைக் கதவம் திறக்கிறது."

"நான் எதிர்பார்ப்பதும் அதுதான்."

உக்கிரப் பெருவழுதிப் பாண்டியரின் கண்களில் அங்கு எரிந்து கொண்டிருந்த இரு தீப்பந்தங்கள் தெரிகின்றன.

"காளிங்கா யவனர்கள் போட்ட திட் டத்தை இந்த மூன்று தினங்களாக முயன்று பார்த்தோம். பயனில்லை."

"அதுதான் கானப்பேரெயில். உயிர்ப்பலி மூலம் சூழ்ச்சி செய்தால் ஒழியக் கதவின் ஓர் ஆணியைக் கூட யாராலும் அசைத்துப் பார்க்க முடியாது. அதுவும் வேங்கை வனத்து இரகசியம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்."

"என்ன சூழ்ச்சி?"

"இங்கே பன்னிரண்டு சுரங்கங்களிருக் கின்றன. மூன்று சுரங்கங்களைக் கண்டுபிடித் திருக்கிறேன். என்னுடன் ஆயிரம் வீரர்களை அனுப்புங்கள். ஏன்? எதற்கு என்று கேட் டால் இப்போதைக்கு விடை கூற முடியாது. நாளைய காலை விடை தெரியும். சுரங்கத் துக்கு ஐநூறு வீரர்கள் வீதம் நுழைய வேண்டும்."

"மூன்றும் சுரங்கம்?"

"அது இப்போதைக்கு வேண்டாம்."

பாண்டிய மாமன்னர் அடுத்தகணமே உத்தரவு பிறப்பிக்க, ஆயிரம் வீரர்கள் காளிங்கனைப் பின் தொடர்ந்தனர்.

அப்போது இரவில் மூன்றும் யாமம் நடந்து கொண்டிருந்தது.

கோட்டையின் நடுவே எழுந்து நின்ற அந்த உயர்ந்த ஸ்தூபியின் உச்சியில் அக்கினி அகண்டாகாரமாய் எரிகிறது...

ஆயிரமாயிரம் வீரர்கள் கானக்கோட்டை முழுவதுமாகப் பரவியிருந்தாலும், அவர்கள் அனைவருமே சளைத்து உறங்கிக் கொண் டிருந்தனர்.

சுரங்கத்திலிருந்து வெளிப்பட்ட வீரர்கள், கானப்பேர் வீரர்களுடன் வீரர்களாக மெல்ல ஐக்கியமாகிப் படுத்துக் கொள் கிறார்கள். காளிங்கன், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய வேலைகளை விவரித்து விட்டு சூரியோதயத்தை எதிர்பார்த்து வேற்று வழியாகச் சென்று மறைந்து போனான்.

இதே நேரத்தில்...


வேங்கைவனத்தில் காவல் நின்ற தியாக வல்லி, பகபதிக்காக எதிர்பார்த்துக்கொண் டிருந்தாள்.

அதோ, பகபதியும் இரும்பு வேலிக்குப் பின்புறமாக வந்து நிற்கிறான்.

பகபதியை நெருங்கிச் சென்ற தியாக வல்லி, மெல்லிய குரலில் "பகபதி! என் அண்ணன் காளிங்கன் கோட்டைக்குள்ளிருக் கிறார். அவரால் வேந்தருக்கு விபரீதம் நடக்கும் என்று நினைக்கிறேன். அவரை எங்கே கண்டாலும் தீர்த்து விடத் தயங் காதே! இந்த யுத்தத்தில் உனக்கிடப்பட்ட வேலை இதுதான். இந்தக் கட்டளை வேந்த ரால் பிறப்பிக்கப் பட்டதற்குச் சமம் கவனம்" என்றாள்.

பகபதியும் அந்தக் கட்டளையை ஏற்று இருளில் மறைந்து சென்றான்.

(தொடரும்)




கல்கி
1984
தீபாவளி மலர்
நினைவூட்டுகிறோம்!
ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள். அல்லது தபாலில் பெற விரும்பினால் "கல்கி காரியாலயம் சென்னை-32" என்ற விலாசத்துக்கு எழுதுங்கள்.
விலை ரூ.: 20/- ★ தபால் செலவு: ரூ. 5/-
தீபாவளியின் குதூகலம்; வண்ணங்கள்; அதன் தெய்வீகம் முதலியவற்றைப் பிரதிபலிக்கும் உன்னதத் தயாரிப்பு.
மிகப்பிரபலமான எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகளுடன் முதல்தர ஓவியர்கள், புகைப்பட நிபுணர்களின் ஒத்துழைப்புடன் வண்ணக் களஞ்சியமாக உருவாகிறது. காலமெல்லாம் போற்றிப் பாதுகாக்கக்கூடிய பொக்கிஷம்.

போட்டிக்கதை 7

''அவன் வரக் கூடாது... வரவே கூடாது...''

நான் கண்டிப்புடன் கூறிவிட்டு என் மனைவி மங்களத்தின் முகத்தைப் பார்க்கிறேன்...

''என்னங்க... கொஞ்சம் இரக்கப்பட்டு நினைச்சுப் பாருங்க... ரவி நமக்கு ஒரே பையன்... அவனே நம்ம ஒரே பொண்ணு மாலதி கல்யாணத்துக்கு வரக் கூடாதுன்னு சொல்றீங்களே... பாவம் ரவி. அவனால தங்கை கல்யாணத்துக்குப் பணம் தர முடியல்லேன்னாலும் பாசத்தைக் கொட்டறானே. அவன் இல்லாமல் மாலதிக்கும் பிடிக்கல்லீங்க... அவனே வரச் சொல்லி உடனே கடிதாக போடுங்க... உங்களுக்கு எழுதப் பிடிக்கல்லேன்னு நான் எழுதறேன்...''

மங்களத்தின் பதில் எனக்கு எரிச்சலைத் தருகிறது.

''அடி போடி அறிவுகெட்டவளே.... அஞ்சு வருஷமா மெட்ராஸ்க்குப் போய்ச் சம்பாதிக்கிறானே... மாசம் ஐம்பது ரூபா சேர்த்து வைச்சிருந்தாலும் இப்ப மூவாயிரம் ரூபா சேர்த்து நமக்குத் தந்திருக்கலாமே... ஒரு பைசா கூட நமக்கு இது வரையும் அனுப்பாத அந்த நன்றி கெட்ட பயலே என்னடி கூப்பிடணும்... பாசமாம் பாசம்... யாருக்கு வேணும்டி பாசம்... இந்தக் காலத்திலே பணம்தாண்டி கல்யாணத்தை நடத்தி வைக்கும்... பாசம் நடத்தி வைக்காது... அவன் வந்தா கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளிடுவேன்... உனக்கும் தலை முழுகிடுவேன்'' நான் சீறுகிறேன்...

மங்களம் பதில் ஏதும் பேச முடியாமல் முந்தானையால் கண்ணில் ததும்பி வந்த கண்ணீரைத் துடைத்தபடி விலகிப் போகிறாள்...

நான் பெருமூச்சு விட்டபடி ஈஸிசேரில் சாய்கிறேன்...

வேலையில் இருந்து ரிடையர்ட் ஆனவுடன் ரவி சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றி மாலதி திருமணத்தை நடத்துவான் என்று கற்பனைக் கோட்டை கட்டி இருந்தேன். அதைப் பொடிப் பொடியாக்கி என் வெறுப்பைத் தீவிரமாகச் சம்பாதித்துக் கொண்டு விட்டான். பி. காம் படித்து முடித்தவுடன் சென்னைக்கு வேலை தேடிச் சென்றவன் இரண்டு மாதம் கழித்து வேலை கிடைத்து விட்டதாகக் கடிதம் எழுதினான்.. அதோடு சரி... அதற்கப்புறம் பாசத்தைப் பொழிந்து அம்மாவுக்கும்... தங்கைக்கும் பக்கம் பக்கமாகக் கடிதம் எழுதினானே தவிர நான் ஆவலோடு எதிர்பார்த்த பணத்தை அனுப்பவேயில்லை. ஐந்து வருடத்தில் ஒரு தடவை கூட தீபாவளி... பொங்கலுக்குக் கூட வரவில்லை. அதற்கப்புறம் தான் அவனைப் பற்றி நானே ஒரு முடிவு செய்து கொண்டேன். எந்த ஆசைநாயகியின் வலையிலாவது



விழுந்திருப்பான். அவனுக்குச் சம்பளம் முழுவதையும் சமர்ப்பணம் செய்திருப்பான். பெண் ஒருத்தி துணை என்று வந்து விட்டால் பெற்றோரை மறக்கும் பிள்ளைகளின் குணம் அவனுக்கும் வந்திருக்கும்.! நான் நேரடியாகச் சென்னைக்குச் சென்று அந்தக் கண்றாவிகளைக் காண விரும்பவில்லை. மங்களம் பிள்ளையைப் பார்க்காமல், மாலதி அண்ணனைக் காணாமல் உருகுவதைப் போல் என்னால் உருக முடிய வில்லை. என்னைப் பொறுத்த வரை பணம்... பணம்... அதுதான் முக்கியம்... பாசமாவது. நேசமாவது எனக்குப்பிள்ளையே இடையாது என்று மனத்திற்குள் உறுதி கொண்டு விட்டேன். கஷ்டப்பட்டு கடன் வாங்கி நான் நடத்தும் என் பெண்ணின் கல்யாணத்திற்கு என் குடும்பத்திற்காகக் கொஞ்சம் கூடக் கஷ்டப்படாத ரவி வரக் கூடாது... வரவிட மாட்டேன்...

அடுத்த வாரம். வெள்ளிக்கிழமை காலை நேரம்... திருமண சத்திரத்தில் பரபரப்புடன் நான் இயங்கிக் கொண்டிருக்கும் சமயம்...

மணையில் மாலதியும். மாப்பிள்ளையும் உட்கார்ந்தாகி விட்டது...

நான் எதிர்பாராத பெருங்கூட்டம்... நான் கல்யாணப் பத்திரிகையை அளவோடு கொடுத்தும் அளவில்லாத கூட்டம் வந்ததற்குக் காரணம் மாப்பிள்ளை வீட்டார் தான்... இஷ்டப்படி பத்திரிகையை 'நோட்டீஸ்' போல் கொடுத்திருப்பார்கள் என்று நினைத்துக் கொள்கிறேன்...

நல்லவேளை. 'மாப்பிள்ளை அழைப்பு' என்று காரில் ஏற்றி ஊரைச் சுற்றும் அனுவசியப் பந்தாக்களை மாப்பிள்ளையே வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

நான் தற்செயலாக மங்களத்தைப் பார்க்கிறேன். அவள் முகத்தில் மலர்ந்திருந்த மகிழ்ச்சியை வைத்தே அவள் பிள்ளை எப்படியோ வந்து விட்டான் என்பதை உணர்கிறேன்.

ரவியைத் தேடுகிறேன்...

கையில் கேமிராவோடு நிற்கும் இரண்டு இளைஞர்களைப் பார்க்கிறேன்...

அந்த இருவரில் ஒருவன் ரவியேதான்... நான் கோபத்துடன் நேரடியாக அவனிடம் போகிறேன்...

அவன் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்தபடி யாரும் இல்லாத சத்திரத்து அறை ஒன்றுக்கு அழைத்துச் செல்லுகிறேன்...

மங்களமும் என் பின்னால் ஓடிவருகிறாள்..

''டேய் வெட்கங்கெட்ட பயலே... யாருடா உனக்குப் பத்திரிகை அனுப்பினது... எதுக்காக இங்க வந்தே?'' நான் கத்துகிறேன்.

''அப்பா... எனக்கு யாரும் பத்திரிகை அனுப்பல்ல. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க என்னைக் கூட்டிக்கிட்டு வந்தாங்க... நான் அவங்க சார்பா வந்திருக்கிற போட்டோ

விஜயா கண்ணன்



கிராபர்...'' ரவி சொன்னதும் எரிமலை ஆகிறேன்...

''தூ... எச்சக்கலை நாயே... உனக்கு மானம், ரோஷம் இருந்தா இப்படி ஒரு சாக்குச் சொல்லி வந்திருப்பியா... நீ சோத்துல உப்புப் போட்டுத்தானே திங்கறே... ஒழுங்கா வெளியே போயிடு... இல்லேன்னு கொலையே பண்ணிடுவேன்.''

''என்னங்க ரவி என்ன தப்பு பண்ணிட்டான்னு இப்படித் தாம் தூம்னு குதிக்க நீங்க...'' மங்களம் ரவிக்கு வாதாடியதும் அவளை ஓங்கி அறைகிறேன்... ''தங்கை கல்யாணத்துக்கு ஒரு பைசா கூட கொடுக்காமல் ஓசிச் சோறு தின்ன வந்திட்ட இந்தத் தண்டச் சோற்றுப் பயலுக்கு வக்காலத்தா வாங்கறே'' என்றதும் மங்களம் அழத்துவங்கி விட்டாள்.

''அப்பா... நல்ல நாளும் அதுவுமா அம்மாவை அழ வைச்சிட்டீங்களே... நான் இப்பவே போயிடறேன்... என் அஸிஸ்டெண்ட் போட்டோ எடுக்கட்டும்...'' ரவி சொல்லி விட்டு வெளியேறுகிறான்.

நான் அமைதி அடைகிறேன்...

மாலதி கழுத்தில் மாப்பிள்ளை தாலி கட்டி முடிக்கிறார்... திருமணம் நடந்து முடிகிறது.

ஆறு நாள் கழித்து...

ஈஸிசேரில் சாய்ந்தபடியே பேப்பர் படித்துக் கொண்டிருக்கும் என்னருகே மங்களம் வந்து நிற்கிறாள்...

''இந்தாங்க... ரவி உங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் பணம் அனுப்பி இருக்கான்... இந்தக் கடிதாசையும் உங்களுக்கு அனுப்பி இருக்கான்...'' மங்களம் கொடுத்தந்த வாங்கிக் கொண்டு கடிதத்தைப்படிக்கிறேன்...

அன்புள்ள அப்பாவிற்கு... ஓ ஸாரி... அப்படி அழைத்தால் உங்களுக்குப் பிடிக்காதே...அன்புள்ள வரதன் அவர்களுக்கு...

மாலதி கல்யாணத்தில் நீங்கள் என்னை விரட்டியதைப் பெரிதாக நான் நினைக்கவில்லை. ஆனால் அன்புத் தங்கையின் கழுத்திலே தாலி கட்டப்படும் நல்ல காட்சியைப் பார்த்துச் சந்தோஷப்பட முடியவில்லையே என்ற பெரும் வருத்தம் நான் படுகிறேன்.. தங்கைக்குப் பணம் தர முடியாத தண்டச் சோறு என்று நீங்கள் சொன்னதால் வேறு வழியின்றிச் சில உண்மைகளை எழுதுவதற்கு மன்னிக்கவும். 'ஸ்காலர்ஷிப்'களை வைத்து பி. காம். படிப்பை முடித்தேன். நான் வேலை வாங்கித்தர முடியாது... நீயே தேடிக் கொள் என்று விரட்டி அடித்தீர்கள்... நான் சென்னைக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்டதைப் போல் வந்து சேர்ந்தேன். வேலை வேலை என்று நாயாக அலைந்தது தான் மிச்சம். வேலை கிடைக்கவில்லை.. சாப்பாடு இல்லாமல் பட்டினியுடன் அலைந்து திரிந்தேன்... அம்மா, மாலதிக்கு என் நிலைமையை எழுதினால் தாங்க மாட்டார்கள் என்று நான் வேலை கிடைத்து விட்டதாகப் பொய்யான கடிதம் எழுதி அனுப்பினேன். நான்கு வருடங்கள் ஹோட்டல் ஒன்றில் சர்வராக வேலை பார்த்தேன்... ஹோட்டல் முதலாளி தாராள மனக்காரர்.. சம்பளம் வாங்கிக் கொண்டதாகக் கையெழுத்தை மட்டும் வாங்கிக் கொண்டு சாப்பாட்டை மட்டும் தான் எனக்குப் போட்டார்... சென்ற வருடம்தான் நானாகவே போட்டோ எடுக்கும் கலையைக்கஷ்டப்பட்டுக் கற்றுக் கொண்டு 'போட்டோகிராபர்' ஆனேன்... கொஞ்சம் கொஞ்சமாக வந்த வருமானத்தைச் சேர்த்து இரண்டாயிரம் ரூபாய் ஆக்கி மாலதி கல்யாணத்திற்கு அனுப்பலாம் என்று நான் நினைத்த சமயத்தில் எனக்கு 'போட்டோ' தொழிலை இலவசமாகக் கற்றுக் கொடுத்தவர் அவசரத் தேவைக்கு அதைக் கடனாக வாங்கிக் கொண்டு விட்டார். நானும் செய்நன்றி மறக்கக் கூடாது என்பதற்காக அவருக்குப் பணத்தைத் தந்தேன்... நேற்றுதான் அவர் பணத்தை திரும்பக் கொடுத்தார். அதை அனுப்பி உள்ளேன். பெற்றுக்கொள்ளவும். திருமணத்தின் போது என் நிலைமையை விளக்கிச் சொல்லலாம் என்றிருந்தேன். ஆனால் என் பேச்சைக் கேட்கும் நிலையில்தான் நீங்கள் இல்லையே... பரவாயில்லை... நடந்தது நடந்ததாக இருக்கட்டும். இனிமேல் மாதம் தவறாமல் உங்களுக்குப் பணம் அனுப்புகிறேன்... எனக்குத்தான் நல்ல காலம் வந்து விட்டதே... உங்களுக்கு விருப்பம் இருந்தால் அம்மாவும், நீங்களும் என்னுடனே வந்து தங்கிக் கொள்ளலாம்... அதை ஆத்மார்த்தமாக விரும்புகிறேன்.

ரவி.

கடிதத்தைப் படித்து முடித்ததும் மகிழ்வுடன் எழுந்திருக்கிறேன்...

''அடியே மங்களம்... இனிமே நாம அங்கேயே போயிடுவோம்... எனக்கு வர்ற பென்ஷன் பணத்தை மிச்சம் பிடிச்சிடலாம்... கிளம்பு... கிளம்பு...'' நான் அருகில் உட்கார்ந்திருக்கும் மங்களத்தைப் பிடித்து குஷியோடு ஆட்டுகிறேன்...

அவள் மரமாகக் கீழே சாய்கிறாள்...

''மங்களம்... நீ... நீ... போயிட்டியா?''

மகனிடம் பாசத்தை மட்டுமே எதிர்பார்த்த அந்தத் தாய் முகம் மகனை நினைத்தபடி உயிரை விட்டு மலர்ந்திருப்பதை என்னால் உணர முடிகிறது.

''தாஜ்மகாலைக் கண்டால் கழுதைக்குப் பிடிக்காது''

''ஏன்?''

''அதில் நிறைய சலவைக் கற்கள் இருப்பதால்?''


—ஜெயின் சேகர்.



டான்டெக்ஸ்®

எகானமி

சிறப்புத்தரம்... உங்களுக்கு ஏற்ற விலையில்



வகைவகையான வண்ணங்களில்.

TTK தயாரிப்பு

சோதனைமேல் சோதனை



சென்னை அடையாறு கான்ஸர் இன்ஸ்டிடியூட்டினுள் நுழைந்து, ஆந்திர முதல்வரின் மனைவி திருமதி தாரகம் அம்மாளைப் பார்க்க வேண்டுமென்று விசாரித்ததும், தடை ஏதுமின்றி உடனே ஒருவர் வழி காட்டினார். இரண்டாவது மாடி. நேர் எதிரே அறை. வெளிர் மஞ்சள் கதவுகள் எப்போதும் மூடியே இருந்தன. வெளியே எந்நேரமும் சில பேர் காத்து நின்று கொண்டிருந்தார்கள், உள்ளே போய் அவரைப் பார்க்க.

செப்டம்பர் முதல் வாரத்தில் சென்னை வந்தார். கூடவே இருந்து கவனித்துக் கொண்டார்கள் மகள் லோகேஸ்வரி, மாப்பிள்ளை கணேசராவ் இருவரும்.

திருமதி. ராமராவுக்கு கான்ஸர் தொல்லை கடந்த ஓராண்டுக்கும் மேலாகவே இருந்து வந்தது. அப்போதெல்லாம், ஒரு மாதத்துக்கு அல்லது ஒன்றரை மாதத்துக்கு ஒரு தடவை சென்னை வந்து, சில நாட்கள் தங்கி சிகிச்சை பெற்று ஹைதராபாத் சென்று விடுவார்.

இரண்டு நாளைக்கு ஒரு தடவையாவது என். டி. ஆர். போன் பண்ணி உடல்நலம் பற்றி விசாரிப்பாராம். இவர்களும் அவ்வப்போது போன் பண்ணுவதுண்டாம். உடல் நிலை சௌகரியமில்லாத நிலையிலும், ஆந்திர அரசியல் நிலைமைகளை அறிந்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டினார் தாரகம். என். டி. ஆர். மீண்டும் முதல்வரான செய்தி தெரிவிக்கப்பட்டதும், ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினார்.

திருமதி ராமராவ்

ஆனாலும் இந்தத் தடவை கொஞ்சம் சீரியஸாகி விடவே, அதிக நாள் இருக்க வேண்டியதாகி விட்டது. தீவிர சிகிச்சையின் காரணமாய் — சில பின் விளைவுகள் ஏற்பட்டு விட்டன. ஆனாலும் இன்னும் கொஞ்ச காலத்தில் நோயின் தீவிரம் மட்டுப்பட்டு, குணமாகி ஊர் திரும்பி விடலாம் என்று நம்பிக்கையுடன் அன்று சொன்னார் மாப்பிள்ளை. ஆனால் அதற்குள் கடவுள் சித்தம் வேறுவிதமாகி விட்டது.

'உள்ளே சென்று நான் பார்க்கலாமா?' என்று கேட்டேன். உள்ளே அழைத்துக் கொண்டு போனார்கள். கட்டிலிலே, கழுத்து வரை போர்த்தியபடி படுத்திருந்தார். சிறிய முகம். பாட்டிலிலிருந்து, குளுக்கோஸ் நீர் உடலில் ஏறிக் கொண்டிருந்தது. (உடம்பு பலவீனமாய் இருந்ததால்) கண்கள் லேசாய் மூடியிருந்தன. தலைமாட்டில் ஏதோ சிகிச்சை உபகரணம். பக்கத்திலே ஒரு மேஜை. அதன் மேலே மாத்திரைகள்; மருந்துப் புட்டிகள்; ஒரு டூ — இன் — ஒன். எப்போதாவது கேட்பதுண்டு என்றும் நார்மலாய்ப் பேசுகிறார் என்றும் சொன்னார்கள். உணவு விஷயத்திலும் அதிகக் கட்டுப்பாடு இருக்கவில்லை.

வெள்ளிக்கிழமை (21.9.84) இரவு என். டி. ஆர். ஆஸ்பத்திரிக்கு வந்து மனைவிக்கு ஆறுதல் சொல்லிவிட்டுப் போனார். கலைஞரும் உடன் வந்தார். இப்போது என். டி. ஆருக்கே முதல்வரும், கலைஞரும் மாறி மாறி ஆறுதல் கூற வேண்டியதாகிப் போய் விட்டது.

ஆந்திராவின் பல பகுதிகளிலிருந்தும், மக்கள் வந்து, திருமதி. ராமராவை ஆஸ்பத்திரியில் பார்த்துவிட்டு அவர் விரைவில் நலமடைய வேங்கடாசலபதியைப் பிரார்த்தித்து விட்டுப் போனது ஆந்திர மக்களின் அபிமானத்தைக் காட்டியது.

பத்திரிகை நிருபர்களிடம் அன்று பேசிக் கொண்டிருந்த போது சென்னையிலிருந்து என். டி. ஆருக்குப் போன் வந்தது. வாக்கிங் ஸ்டிக்கைத் தேவையில்லை என்று கடாசி விட்டுப் போனில் மனைவியுடன் பேசினார். இப்போதோ — மனைவியின் மரணத்துக்குப் பின் — கைத்தடி மறுபடி அவர் கரத்துக்கு வந்துள்ளது. மக்களின் பேரன்பும், அபிமானமும் அவருக்கு இந்த இரண்டாவது சோதனையையும் தாங்கக் துணிவளித்தரும்.

எஸ். சந்திரமௌலி

மனித இதயத்தின் ஒவ்வொரு துடிப்புக்குமிடையே ஒரு விநாடியில் 6-ல் ஒரு பங்கு நேரம் இதயம் செயல்படாமல் நிற்கிறது. இதன் விளைவாக, நம் ஆயுளில் ஆறில் ஒரு பங்கு நேரம் இதயம் ஓய்வு எடுத்துக் கொள்கிறது!

—சம்பத் குமாரி.

ஆதாரம்: 'மிர்ரர்'.



சமைத்து 4 மணி நேரங்கழித்துக்கூட மணம் கமழும் சூடான உணவை பரிமாற இக்ளூ ஹாட் பேக் இப்பொழுது உங்களுக்கு உதவுகிறது



மறுபடியும் சூடவைக்கும் வேலையே இல்லை

சாதமானாலும் சரி, குழம்பு, கறி வகைகளானாலும் சரி, சமையலை சீக்கிரமே முடித்து இக்ளூ ஹாட்பேக்கில் வைத்து மூடிவிடுங்கள். 4 மணி நேரம் கழித்து பரிமாறினாலும் உணவு சமைத்த சூட்டோடு, ருசியாகவும், சத்து மிக்கதாகவும் இருக்கும்.

நேரமும் எரிபொருளும் மிச்சம்...

ஏனெனில் உணவை மீண்டும் சூடாக்குவதை தவிர்க்கிறது. மேலும் உணவுச்சத்து இழப்பையும் இது தடுக்கிறது.

ஜெனரல் மர்ச்சன்ட்ஸ் கடைகளில் இக்ளூ ஹாட்பேக் பல சைஸ்களில் கிடைக்கும்.
இன்றே ஒரு இக்ளூ ஹாட்பேக் வாங்குங்கள்.
அதனால் பல விதத்திலும் லாபம்.
மேலும் அதிக ஓய்வு நேரம் கிடைக்கிறது.

இக்ளூ ஹாட்பேக்கின் திறமைக்கு ஒரு சான்று

தொடர்ந்து இரண்டு மாதம் இந்த ஹாட் பேக்கை சோதித்து பார்த்து சென்னை கேடரிங் இன்ஸ்டிட்யூட் கீழ்க்கண்ட சான்றுரையை வழங்கியுள்ளது.

''இது உஷ்ணத்தை நன்கு பாதுகாக்கிறது. அதே சமயம் உணவில் ருசிக் குறைவு ஒன்று மில்லை. 8 மணி நேரத்திற்கு பிறகு கூட உணவின் மணத்தில் ஒரு குறைவும் ஏற்பட வில்லை... இப்பெட்டிகள் திறன் மிக்கவை!"

IGLOO hotpack

பியர்ட்ஸெல் இன்சுலேஷன் லிமிடெட்டின்
தரமான தயாரிப்பு

OBM 4897 TM R



"என்ன ரமா, உனக்கென்ன பைத்தியமா? நடக்கிற காரியமா அது?"

"நீங்க என்ன சொன்னாலும் சரி, நான் இங்கே டாக்டர்கிட்டே காண்பிக்க மாட்டேன். ஊருக்குப் போய்த்தான் ஆகணும்."

"பத்து வருஷம் கழிச்சு உண்டாயிருக்கே. ஆரம்பத்திலேயேசெக்–அப்செய்துக்கிட்டாத் தான் நல்லது. இப்ப ஏற்கெனவே நாலு மாசம் ஆச்சு, சொன்னா கேளு ரமா."

"இங்கே டாக்டர் கிட்டே போயிட்டு வந்தா எப்படியும் இந்தக் குவார்ட்டர்ஸ் முழுசும் விஷயம் தெரிஞ்சுடும். எனக்கு யார் கிட்டேயும் சொல்றதுக்கு இஷ்டமில்லே."

"பைத்தியம் மாதிரி பேசாதே. அண்டை அசலுல ஏதானும் மனஸ்தாபம் இருக்கிறது சகஜம்தான். அதுக்காக இப்படி ஒரே யடியா யாரும் வேண்டாம்னு முடியுமா? ஆபத்துக்கு உதவ நாலு பேர் பழக்கமும் வேணும். அப்படி உனக்கும், மத்தவங்களுக்கும் பெரிய சண்டை கூட ஒண்ணும் இல்லியே?"

"சண்டை போட்டாத்தானா? என்னைப் பத்தின விஷயம் எதுவும் மத்தவங்க வாயிலே பொறப்பட்டு வர நான் அனுமதிக்க மாட்டேன். அதுக்காகவே நான் யாரையும் லட்சியம் பண்ணாமே பேச்சு வச்சுக்காமே இருக்கேன். பொம்பளைங்க விஷயம் உங்களுக்குப் புரியாது. நான் எங்க ஊருக்குப் போய்க் குழந்தை பிறந்த பின் தான் வரப் போறேன்."

ஹூம்... இவள் பிடிவாதத்தை மாற்ற முடியாது. அனுபவம் கண்ட உண்மை. மற்றப் பெண்கள் ஏதோ பொழுது போக் கிற்கு, தமாஷாக வம்பு பேசினாலும், ஒரு நெருக்கடி சமயத்தில் கைகொடுக்கத் தயங் காதவர்கள்தான் என்பது ராகவனுக்குத் தெரியும். ஆனால் ரமாவுக்கு இருக்கும் 'காம்ப்ளெக்ஸி'ல் இதைப் புரிய வைக்க முடி யாது. இப்போதைக்குப் பத்து வருஷங்கள் கழித்துத் தாயாகப் போகிறவளின் மன நிம்மதிதான் முக்கியம்.

ஏழு மாதங்கள் கழித்துக் குழந்தையுடன் வந்தாள் ரமா. வாசலில் சத்தம் கேட்டுக் கதவைத் திறக்க வந்தபோது வெளியே நின் றிருந்த பக்கத்து வீட்டுப் பெண் மெது வாகச் சொல்வது காதில் விழுந்தது.

"ராகவன் சார். என்னதான் ரமா பிரசவத்துக்குப் போயிருக்கான்னு சொன் னாலும் நம்ப முடியல்லே. யாரோட குழந் தையையோ தத்து எடுத்துக்கிட்டு வந்தி ருக்கா போலிருக்கு ரமா. இருக்கட்டும். அவ ளுக்கும் குழந்தை ஆசை இருக்குமில்லையா? ஆனா தானும் ஒரு குழந்தையைப் பெத்துட் டோம்னு காட்டிக்கவிரும்பறாப் போலிருக்கு. பாவம் ரமா அவ ஆசையைக் கலைப்பா னேன்? நாம யாரும் தெரிஞ்சதா காட்டிக்க வேண்டாம். அவ சந்தோஷமா, நிம்மதியா இருக்கட்டும்."

தன் தாய்மையின் பெருமையைக் காட்டிக் கொள்ள முடியாதபடி, என்றும் நிரூபிக்க முடியாதபடி தான் எத்தனை பெரிய தவறு செய்து விட்டோம் என்பது புரிந்ததும் கலங்கி நின்றாள் ரமா.

அரசுக்குச் சொந்தமான 'அசோகா ஹோட்டலுக்கு' 28 வயது. 600 அறைகள் உள்ள இக்கட்டிடத்தைப் புதுப்பிக்க ஆகும் செலவு 3 கோடி ரூபாய். கட்டிட உட்பகுதியை அழகு படுத்த 'டேல் கெல்லர்' என்னும் ஏதென்ஸ் நகர அலங்கார நிபுணர் வரவழைக்கப்பட்டுள்ளார். அவருக்கு மட்டும் 18 லட்ச ரூபாய்!

–க. இரமேஷ் குமார்.



வாசகர் பங்கு

சரியாசனம் இடையாது

இந்த இருபதாம் நூற்றாண்டின் கடைசி யிலும் எங்கள் வீட்டுப் பெண்களுக்குச் சரி யாசனம் இடையாது. என் மாமாவின் முன்னிலையில் ஆண்கள் மட்டுமே அவ ருக்குச் சமமாக நாற்காலியில் உட்கார லாம். அத்தியாவசியமான சமயங்களில்கூட பெண்கள் உட்கார்ந்து விட்டால் அவருக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிடும்.


கே. ராஜேஸ்வரி, மயிலாடுதுறை

கண்மூடித்தனம்

ஆண்களும், பெண்களுமாய்ப் பலர் வேலை செய்யும் எங்கள் அலுவலகத்தில் பல ஆண்கள் கூலிங் கிளாஸ் போட்டுக்கொண்டு வருவார்கள். பெண்களில் நான் மட்டுமே கறுப்புக் கண்ணாடி அணிந்து செல்வேன். அதைப் பற்றி அவர்கள் என் காதுபடவே பேசும் பேச்சு...

சுஜாதா, பழங்கானத்தம்





பெண்ணொன்று பிறந்துவிட்டால்...

வேண்டுதல், வேண்டாமை வேண்டும்

என் தோழியைப் பெண் பார்க்கவந்த போது அவள் மாப்பிள்ளையைப் பிடிக்க வில்லை என்று சொல்லி விட்டாள். பைய னுக்கோ பெண்ணைப் பிடித்துவிட்டது. பெண்ணைப் பெற்றவர்களுக்கு வந்ததே கோபம்... ''பெண்ணாய்ப் பிறந்தவளுக்குப் பிடிக்கும் பிடிக்காது என்று கூட உண்டா?'' என்று நன்றாக வைது கட்டாயப்படுத்திக் கல்யாணம் செய்து வைத்து விட்டனர். இதன் விளைவாகத் தோழி தற்கொலை செய்து கொள்ளக்கூடத் துணிந்து விட் டாள்.

ஆர். பிரேமலதா, தாமரைக்குளம்

என் இந்த ஓரவஞ்சனை

கடந்த வருடம் பாரதிதாசன் பல்கலைக் கழக செஸ் சாம்பியன் ஷிப்பை வென்று அனைத்துப் பல்கலைக் கழகப் போட்டியில் கலந்து கொள்ள ஆவலாக இருந்தேன். ஆனால் பெண்களுக்கு அனைத்துப் பல்கலைக் கழக அளவில் செஸ் பந்தயமே இடையாது என்று கூறிவிட்டார்கள். பெண்கள் அறிவில் சளைத்தவர்களா என்ன?

வி. கீதா, பொறையார்

தவறான மதிப்பீடு


ஆபீஸ் போகும் நேரத்தில் அவசரமாக பேனாவில் இங்க் போட வேண்டியிருந்தது. நிப்பைக் கழற்ற வரவில்லை. தம்பியும் முயன்று தோல்வியே அடைந்தான். என் மனைவி உதவ முன் வந்த போது 'எங்க ளுக்கே முடியவில்லை. உனக்கெப்படி முடி யும்' என்று என்னையும் அறியாமல் கூறிவிட்டேன். அவள் முகம் வாடிவிட்டது. கடைசியில் நிப்பைக் கழற்றியது அவள் தான்!

முருக. இராமலிங்கம், புதுச்சேரி

பந்தி பேதம்

இன்ஸ்டிடியூட்டில் தேர்வு நடந்துகொண் டிருந்தது. மேற்பார்வைக்குச் சென்ற போது மதிய உணவுக்கு வெளியே ஓட்டலுக்குப் போகலாம் என்று சுற்றறிக்கை அனுப்பி னார்கள். நானும் சம்மதித்துக் கையெழுத்திட் டேன். கடைசியில் ஆண்கள் எல்லோரும் வெளியில் சாப்பிட்டுவிட்டு எனக்கு ஒரு பொட்டலத்தை வாங்கிக் கொண்டு வந்து சேர்த்தார்கள். நானும் அவர்களுடன் சென்று சேர்ந்து சாப்பிட்டால் நன்றாயிரா தாம்.

ஆர். ராஜலெட்சுமி, புதுக்கோட்டை





இது என்ன நியாயம்?

பெண்ணாகப் பிறந்து புகுந்த வீட்டிற்குச் சென்று விட்டால் பிறந்தகத்தில் நேரும் துக்கங்களைக் கூட நெடுங்காலம் அநுஷ்டிக்கக் கூடாது. புகுந்த வீட்டின் துக்கங்களை ஒரு வருஷத்துக்கு அனுஷ்டிக்க வேண்டும். பிறந்த வீடு துக்கமென்றால் உடன் பிறந்தோரை இழந்திருந்தால் கூட ஒரு மாதத்துக்குள் பண்டிகை கொண்டாடிவிடலாம்!

லக்ஷ்மி வெங்கட், உதகமண்டலம்

பெண்ணொன்று பிறந்துவிட்டால்...

உன் குரல் (வீணை) என் கையில்

நல்ல அழகி. சிறந்த பாடகி — இசை வித்வானின் கரம் பிடித்தாள். அழகில் குறைந்த அவனோ 'நீ பாடினால் அண்டை வீட்டுக்குக் கேட்கும். அதனால் பாடக் கூடாது' என்று உத்தரவு போட்டுவிட்டான். மனைவியின் குரலுக்குக் கூடவா உரிமை கொண்டாட வேண்டும்?

டி. வி. திரிபுரசுந்தரி, மண்ணச்சநல்லூர்

சமூக அவலம்


விதவையாகி விட்டதால் தன் ஒரே மகளின் திருமணத்தைப் பார்க்கக் கூடாது என்று நான்கு வீடுகள் தள்ளித் தனியிடத்தில் வைத்திருந்தார்கள் ஒரு பெண்மணியை. அந்தத் தாயின் மனம் அறிந்து புது மணத் தம்பதிகள் முதன் முதலில் அவளிடம் தான் ஆசி பெற வேண்டும் என்று வாதாடிச் சம்மதம் பெற்று அழைத்துச் சென்றேன்.

எஸ். கல்பகம், சென்னை-10

நான் என் செய்யும்? நட்சத்திரம் நான் என் செய்யும்?

பக்கத்து வீட்டு அம்மாளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. ஒன்று ஆண், மற்றொன்று பெண். இரு குழந்தைகளுக்கும் மூல நட்சத்திரம். இன்று 25 ஆண்டுகளுக்குப் பிறகு ஆணுக்கு மட்டும் தான் கல்யாணம் ஆகியிருக்கிறது. காரணம் கேட்டால் 'ஆண் மூலம் அரசாளும். பெண் மூலம் நிர்மூலம்' என்பது வசனமாம்!

என். பிரேம்குமாரி, சிவகாசி



தீராத கடனும் மாறாத வருத்தமும்

தந்தையும், சகோதரனும் அடுத்தடுத்து இறந்து விட்டார்கள். நாங்கள் சகோதரிகள் மூவர் அம்மாவை ஆதரித்து வந்தோம். அவளும் காலமான போது ஈமக்கடன்களைச் செய்ய எங்களுக்கு உரிமை இல்லையே என்று எங்களுக்குச் சொல்லொணா வருத்தம்.

கமலா நாராயணன், பாலக்காடு



ஒருவழிப்பாதை

அழகும் செல்வமும் படைத்த ஒருவனை மணந்த பிறகே அவன் திருத்த முடியாத குடிகாரன் என்று அறிந்தாள். கெஞ்சிய அவளிடம் உன்னை விட்டாலும் விடுவேன், ஆனால் குடிப்பதை விட மாட்டேன் என்று அலட்சியமாகச் சொல்லி அவளைப் பிறந்தகத்தில் கொண்டுவிட்டுவிட்டான் அவன். அவள் பெற்றோர்களோ அவளைத் திரும்பிப் போய் அவனுடன் வாழுமாறு வற்புறுத்துகிறார்கள்.

கே. ஜயா, பம்பாய்-77

[அப்பப்பா! ஒரு பக்கம் பெண்களுக்கு சம உரிமை என்று பேசிக்கொண்டே இன்னொரு பக்கம் அவர்கள் எப்படியெல்லாம் மட்டம் தட்டப் படுகிறார்கள்! அடுத்த வாரம் மேலும் சில மனக் குமுறல்களும், பட்டுப் புடவை பரிசு பெற்றவர் பற்றிய விவரமும்]

வாசகர் பங்கு



நெருப்பு மலர்

11

விஷ்ணு பிரஸாத்தின் குரல் கேட்டு வயிற்றிற்குள் அலையாய்ச் சுருண்டு எழும்பிய பயம் அடங்க ஒரு விநாடி பிடித்தது கிருத்திகாவிற்கு. டெலிபோன் தொடர்பைத் துண்டித்து ரிஸீவரை வைத்த பின்பும் காதருகில் அந்தக் கட்டைக் குரல் துரத்திக் கொண்டு வந்து கேட்பது போலிருந்தது. உடம்பு மெலிதாக ஒரு தரம் நடுங்கி அடங்க, 'எதற்காக இப்போது இப்படி பயப்படுகிறோம்...?' என்கிற எண்ணம் தோன்ற, தன்னைச் சுதாரித்துக் கொண்டாள். விஷ்ணு பிரஸாத் நல்லவனில்லை. கண்ணாடிக்குள்ளிருந்து வெளிப்பட்ட பார்வையில் கபடமிருந்தது. எதையும் செய்யத் தயங்காதவன் என்பது முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. பேசும் போது ரொட்டித் துண்டிற்கு அலைகிற நாயின் ஞாபகம் வந்தது.

ஒரு வகையில் இவனும் ஒரு நாய்தான் என்று முடிவு செய்தாள். உடம்பிற்கு அலைகிற நாய். தராதரமற்றுக் கெஞ்சுகிற நாய். அம்மாவோடு இருந்தவன் எப்படி என்னையும்...

'சீ... என்ன மனிதர்கள் இவர்கள்... கீழ் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டே படியேறித் தன் அறைக்குள் காலடி எடுத்து வைத்திருப்பாள், திரும்ப டெலிபோன் மணி அடிக்கிற சத்தம்.

''கிருத்திகா, திரும்பவும் உனக்குத்தான் டெலிபோன்...''

மீண்டும் அவனாக இருக்குமோ...பேசாமல் ரிஸீவரைப் போட்டுவிட்டு வந்த கோபத்தில் கூப்பிடுகிறானோ... அவனாகவே இருந்தாலும் இந்த முறை பயந்து டெலிபோன் தொடர்பைத் துண்டிக்கப் போவதில்லை. தைரியமாய்ப் பேசப் போகிறேன். அவன் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டுக் கொள்ளப் போகிறேன். எதற்காக பயப்பட



வேண்டும்? இப்போது நான் தனி மனுஷி இல்லையே... துணைக்கும், உதவிக்கும் அர்ஜுனும், பாஸ்கரப்பாவும் இருக்கிற வரை என்ன பயம்...?''

நிதானமாகக் கீழே இறங்கி வந்து அமைதியாக ரிஸீவரை எடுத்து ஹலோ சொன்னதும்,

மறுபக்கக் குரல் வெறிநாயாக, அடிபட்ட பாம்பாகச் சீறிற்று.

''ரொம்பப் புத்திசாலித்தனமாக வீட்டை விட்டுத் தப்பித்துப் போய் விட்டதாக நினைக்காதே... உன் நல்ல காலம் நாயைப் பிடித்துப் பின் பக்கம் கட்டிப் போட்டிருக்கான்கள். ஆனால் எப்போதுமே நல்ல காலமாக இருக்காது. இந்த விஷ்ணுபிரஸாத் தோல்வியை அவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொள்பவனில்லை. தெரிந்து கொள். அப்படித் தோல்வியை ஏற்றுக் கொள்பவனாக இருந் திருந்தால் இந்த டில்லியின் பெரும் பணக்காரர்களில் ஒருவனாக வந்திருக்க முடியாது...''

தன் எரிச்சலை அடக்க முடியாதவளாகக் கேட்டாள் அவள்.

''அப்படியா, இப்போது எதற்காகத் திரும்பவும் கூப்பிட்டீர்கள்...?''

''மரியாதையாய் நாளை சாயந்திரம் இங்கே வந்து சேர வேண்டும் என்று சொல்வதற்காகத்தான்...''

''வர இயலாது, முடியாது என்றால்...?''

''வரவழைக்கிற வழி எனக்குத் தெரியும். என் ஆட்கள் உன்னை ஒரே கட்டாகக் கட்டித் தூக்கிக் கொண்டு வந்து விடுவார்கள்...''

''இங்கே சட்டமும், போலீஸ் ஸ்டேஷனும் தூங்குவதாக நினைப்போ உங்களுக்கு?''

''என்னது... என்னது?...'' — என்று பெரிதாய்ச் சிரித்தான் அவன்.

''சட்டம், போலீஸ்...? இன்னமும் குழந்தையாகப் பேசுகிறாயே...? பணம் செய்யக் கூடிய வித்தைகள் புரியாமல் இருக்கிறாயே...?'' சட்டென்று தன் சிரிப்பை நிறுத்திக் கொண்டு கடுமையான குரலில் கேட்டான்.

''இப்போது என்ன சொல்கிறாய்...? நாளை சாயந்திரம் நீயாக வரப்போகிறாயா, இல்லை வரவழைக்கட்டுமா...?''

''மிரட்டாதே. உன் மிரட்டலுக்குப் பணிய நான் புவனேஸ்வரி இல்லை...''

''புவனேஸ்வரிக்கு மிரட்டல் எதற்கு? ரூபாய்க் கற்றையை விசிறி எறிந்தால் போதுமே...''

உடம்பில் நெருப்புப் பற்றிக் கொண்ட உணர்வோடு ''ஷட் அப்'' என்று கத்தினாள் கிருத்திகா. ''உன்னால் முடிந்ததைச் செய்து கொள்...''

சட்டென்று ரிஸீவரை வைத்து விட்டு உடம்பும், மனமும், படபடக்க நின்ற போது, ஹாலில் இருந்த அத்தனை பேரின் கவனமும் தன் மீது இருப்பதைப் புரிந்து கொண்டாள். தன்னையும் மீறி உரக்கக் கத்தியதில் அவர்கள் கவனம் தன் மீது திரும்பி இருக்கிறது...

''கிருத்திகா வாட்ஸ் ராங்...? இப்போது டெலிபோனில் உன்னைக் கூப்பிட்டது யார்...?'' — ஹாஸ்டல் வார்டன் அருகில் வந்து அவள் தோள் மீது கை போட்டுப் பரிவோடு கேட்டதும், அவளிடம் எல்லாவற்றையும் சொல்லி விடலாமா என்று நினைத்தாள். ஒரு வினாடிதான் அந்த நினைப்பு தலைதூக்கிற்று. பின் சட்டென்று மாற்றிக் கொண்டாள். 'எதுவானாலும் அர்ஜுனிடம் தான் சொல்ல வேண்டும்...'

திடீரென்று உடனே அர்ஜுனைப் பார்க்க வேண்டுமென்று தோன்றிற்று. அவன் பக்கத்

தில் இருந்தால் பயம் தெரியாது. மனத்தில் கஷ்டம் தோன்றுது. இமாலய பலமும், நம்பிக்கையும் வந்து விடும். இப்போதே அர்ஜுனைப் பார்க்க வேண்டும்... உடனே... இந்த நிமிடமே...

''எல்லாம் அப்புறம் சொல்கிறேனே. உடனே நான் அர்ஜுன் வீட்டிற்குப் போக வேண்டும். அனுமதிப்பீர்களா மாடம்...?''

''அர்ஜுன் வீட்டிற்கா. இந்த நேரத்திலா...?''

''ஆமாம் மாடம். ரொம்ப முக்கியமாய் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். இப்போது நீங்கள் அனுப்பாது போனால் அதற்காக வருத்தப்பட வேண்டி நேரிட்டாலும் நேரிடும்...''

வார்டன் நெற்றியைச் சுருக்கிக்கொண்டு யோசித்தாள். முகத்தில் லேசாய் ஒரு கடு கடுப்பு தோன்றியது.

''இப்போது நீ டெலிபோனில் பேசியதற்கும் அதற்கும் சம்பந்தமிருக்கிறதா...?''

''ஆமாம் மேடம்...''

''அப்படியானால் ஒன்று செய். போன் பண்ணி அர்ஜுனை வரச் சொல்லி அவரின் துணையோடு போ. இந்த நேரத்தில் உன்னைத் தனியாக பஸ்ஸிலோ, டாக்ஸியிலோ, த்ரீவீலரிலோ அனுப்ப முடியாது...''

''தாங்க்யூ மேடம்...''

கிருத்திகா வார்டனிடமிருந்தே காசு வாங்கி அர்ஜுனுக்கு டெலிபோன் பண்ண, ராம்சிங் எடுத்தான்.

''ராம்சிங், நான் கிருத்திகா பேசறேன். சாப் இல்லே...?''

''யாரைக் கேட்கிறீர்கள் மெம்சாப்... படா சாப்பையா, சோட்டா சாப்பையா..?''

''சோட்டா சாப்தான்...''

''இல்லே மெம்சாப். இன்னும் மீட்டிங் முடிந்து வரவில்லை...''.

''நான் இப்போது அவரிடம் அவசரமாகவும், அவசியமாகவும் பேசியாக வேண்டுமே ராம்சிங்...''

''ஜீ... படாசாப்பிற்கு லைன் கொடுக்கட்டுமா...?''

''அவர் தூங்கப் போய் விட்டாரா...?''

''ஹாங் ஜீ...''

''அப்படியானால் அவரை எழுப்ப வேண்டாம். நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டுமே ராம்சிங்...?''

''காத்துக் கொண்டிருக்கிறேன் மெம்சாப்...''

''நான் இப்போது அங்கே வரப்போகிறேன். எத்தனை நேரமானாலும் காத்திருந்து சோட்டா சாஹிப் கிட்டே பேசி விட்டுத்தான் திரும்பப் போகிறேன். அதனால் எனக்குக் கொஞ்சம் வண்டியனுப்புகிறீர்களா?''

''ஓ... ஒரு நிமிடம் இருங்கள். கிஷன் வீட்டிற்குப் போய் விட்டானு பார்க்கிறேன்...''

ராம்சிங் ரிஸீவரை வைத்து விட்டுப் பார்த்துக் கொண்டு வருகிறவரை கிருத்திகாவின் நினைவு அர்ஜுனிடம் இருந்தது. இன்னும் மீட்டிங் முடிந்து வரவில்லை என்றால் இத்தனை நேரமாகவா மீட்டிங் தொடரும். அப்படி என்ன அவசர மீட்டிங்...? ராணுவத்தில் கூட இப்படியெல்லாம் திடீர்க் கூட்டம் கூட்டுவார்களோ...? திடீரென்று ஏன் கூட்டப் போகிறார்கள்? ஏதாவது யுத்த நேரமாக இருந்தால் தான் அவசர ஆலோசனைகள் தேவைப்படும். இப்போது ஒரு யுத்தமும் இல்லையே...? ஒருவேளை மீண்டும்—

''மெம் சாப்...'' — ராம்சிங்கின் குரலில் கலைந்து 'எஸ்' சொன்னாள்.

''கிஷன் வீட்டிற்குப் போயாகி விட்டது மெம்சாப்... நான் வேண்டுமானால் வண்டியை எடுத்துக் கொண்டு வரட்டுமா...?''

''ஹரே, உங்களுக்கு டிரைவிங் தெரியுமா...?''

''ஓ... அர்ஜுன் சாப் சொல்லித் தந்திருக்கிறார். லைசென்ஸ் கூட வைத்திருக்கிறேன்.''

''அப்படியானால் நேராக ஹாஸ்டலுக்கு வாருங்கள். நான் வாசலில் நிற்காமல் உள்ளே ஹாலில் காத்துக் கொண்டிருப்பேன். நீங்கள் ஹாலுக்கே வந்து விடுங்கள்.''

''அச்சா மெம்சாப். இதோ ஐந்தே நிமிடத்தில் அங்கு இருப்பேன்...''

ரிஸீவரை வைத்துவிட்டு வார்டனுக்கு நன்றி சொல்லித் தன் அறைக்குப் போய் நைட்கவுனையும், கைப்பையையும் எடுத்துக் கொண்டு கீழே வந்த போது ஹால் அமைதியாகக் கிடந்தது. ராம்சிங் வந்தால் உள்ளே விடச் சொல்லி கார் நம்பரும், ராம்சிங்கின் அடையாளங்களும் வாசல் கூர்க்காவிற்குத் தரப்பட்டன.

''அப்படியானால் நீ ராத்திரி வரமாட்டாய் இல்லையா கிருத்திகா...?''

''அப்படித்தான் நினைக்கிறேன், மாடம், வித் யுவர் கைண்ட் பர்மிஷன்...''

''ஓ. கே. தென், குட்நைட், நான்படுக்கப் போகிறேன். நீ ஜாக்கிரதையாக அர்ஜுன் வீட்டு ஆளுடன் கிளம்பிப் போ...''

''ஓ... நீங்கள் போங்கள் மாடம். குட் நைட் மாடம்...''

''வார்டன் அவளது அறைக்குப் போய் விளக்கை அணைத்துப் படுத்துக் கொண்டதும், ஹாஸ்டலில் ஒரு அசாதாரண அமைதி சூழ்ந்து கொண்டது. சில அறைகளில் மட்டும் விளக்கு எரிய மற்ற அறைகள் இருட்டில் ஆழ்ந்து கிடந்தன. பொறுமையற்று கிருத்திகா ஜன்னல் வழியாக வாசலைப் பார்த்த போது பளீரென்று காரின் முன்பக்க விளக்கின் வெளிச்சம் அடிக்க ராம்சிங் வண்டியை நிறுத்திக் கீழே இறங்கி 'குட் ஈவினிங்' சொல்லியபடி அவளுக்காகப் பின் பக்கக் கதவைத் திறந்து விட்டு அவள் ஏறிக் கொண்டதும் வண்டியைக் கிளப்பியபடி கேட்டான்.

''ஏன், மெம்சாப், ஏதாவது தவறு நடந்து விட்டதா...? இவ்வளவு அவசரமாக என்னை வரச் சொல்லி வீட்டிற்கு வருகிறீர்களே...?''

அவன் குரலில் தொனித்த கவலையைக் கவனித்த கிருத்திகா, எதிர்பார்ப்பற்ற அந்த அன்பை நினைத்து நெகிழ்ந்து போய், ''தவறு ஏதும் நடந்து விடக் கூடாது என்ற ஜாக்கிரதை உணர்வினால்தான் உடனடியாக உங்களை வரச் சொல்லிக் கிளம்பி விட்டேன். அனுவசியமாக உங்கள்


அமிர்தாஞ்சன்
அறியும்
தலைவலியின்
கடுமையை
எளிதாகப் பூசிட ஏற்ற மிருதுவான அடிப்படைபொருள் கொண்டது.
புத்தம் புதிய, கார்க்கினுலான உள் அமைப்பு மருந்தின் சக்தியைப் பாதுகாக்கிறது.
AMRUTANJAN
Pain Balm
OBM 9708 TM
1984 ஒலிம்பிக் போட்டி இந்திய விளையாட்டு வீரர்களுக்கு பெய்ன் பாம் சப்ளை செய்ய அங்கீகாரம் பெற்றவர்கள்.
அமிர்தாஞ்சன்
துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது.
தீய பின்விளைவுகள் இல்லாதது.

தூக்கத்தையும் கெடுத்துத் தொந்தரவு படுத்தி விட்டேனே என்று இப்போது வருத்தப்படுகிறேன். கொஞ்சம் பொறுமையாக இருந்து காலையில் வந்திருக்கலாம். ராத்திரிக்குள் ஒன்றும் குடி முழுகிவிடப் போவதில்லை—''

''ஓ...'' என்று தளைந்து போன குரலில் குறுக்கிட்டான் ராம்சிங்.

''ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள் மேம்சாப்...? உங்களுக்கும், அர்ஜுனுக்கும் எதைச் செய்யவும் காத்துக் கொண்டிருக்கிற இந்தக் கிழவனிடம் இப்படிப் பேசலாமா...? உங்களை வந்து அழைத்துப் போகக் கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்று நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறேன்...''

அதற்கு நல்ல பதிலாகச் சொல்ல வாயெடுத்த கிருத்திகா ஏதோ உள்ளுணர்வால் தாக்கப்பட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்தாள். அவர்களின் பியட்டிற்குப் பின்னால் இன்னொரு கார்... அம்பாஸிடர்... ஹாஸ்டலை விட்டு வெளியே வந்த போது தெருத் திருப்பத்தில் இந்தக் கார் நின்று கொண்டிருந்ததும் தங்கள் வண்டி கடந்து போன உடனே அந்தக் கார் கிளப்பப்பட்டதைப் பார்த்ததும் நினைவிற்கு வர, அவர்கள் தன்னைப் பின்தொடர்வது புரிய—

''ராம்சிங், சற்று வேகமாகப் போங்கள். பின் வண்டி நம்மை ஃபாலோ பண்ணுகிறது. அவர்களுக்கு ஓவர்டேக் பண்ண இடம் கொடுக்காமல் சீக்கிரம் வீட்டிற்குப் போய் விடுங்கள், ப்ளீஸ்...''

அவள் குரலில் தொனித்த பயமும், பதற்றமும் புரிய ராம்சிங் வண்டியின் வேகத்தை அதிகப்படுத்தி என்பதைத் தொட—

பின் வண்டியும் தன் வேகத்தை அதிகப் படுத்துவதைக் காரின் நிலைக்கண்ணாடியில் கவனித்து, கிருத்திகாவின் பயமும், பதற்றமும் அர்த்தமற்றதில்லை என்று நினைத்து இன்னமும் ஆக்ஸிலேட்டரை மெதுவாக அழுத்த ஆரம்பித்தார்...

(தொடரும்)



காலை மணி ஏழு.

ஒரு கையில் பேப்பரும், இன்னொரு கையில் ஈஸிசேருமாக வாசல் திண்ணைக்கு வருகிறார், சுப்ரமண்யம். ஈஸிசேரைப் பிரித்துப் போட்டு, ஆயாசமாய் அதில் சாய்ந்தவருக்கு எதிர் வீட்டுக் காட்சிகள் நன்றாகவே தெரிகின்றன.

இன்றைக்குச் சற்று அதிகமாகவே யார், யாரோ அங்கு வருகிறார்கள். பெரும்பாலும் ரங்கசாமியின் ஆபீஸ்காரர்களாகத்தான் தெரிகிறது. வாகனங்கள் ஏதாவது ஒன்று மாற்றி ஒன்று வாசலில் நிற்பதும், வந்த சுவட்டில் மறைவதுமாக இருக்கிறது. ஒரு சிலர் ரங்கசாமியிடம் வாசலில் நின்று பேசுவது மட்டும் சுப்ரமண்யத்திற்கு நன்றாகவே காதில் விழுகிறது.

''வெரிஸாரி மிஸ்டர் ரங்கசாமி! அப்பாவை இழந்து நிற்கிற உங்களுக்கு எப்படி ஆறுதல் சொல்றதுன்னே தெரியலே... ஆனா வயசானவரைக் கடைசி வரைக்கும் வச்சிக் காப்பாத்திட்டீங்க...''

''ஆமாம் ஸார்... அப்பாவைக் கடைசி வரைக்கும் வச்சிக் காப்பாத்தினதில் எனக்கும் திருப்தி. எழுபது வயசுதான் ஆகிறது. இன்னும் கொஞ்சகாலம் இருப்பார்ன்னு நினைச்சோம்... ம்... கொடுத்து வைக்கலே..''

ரங்கசாமியின் விசும்பல் கேட்டதும் சுப்ரமண்யத்திற்குக் கேலிப் புன்னகை ஒன்று உதட்டில் அரும்பியது. பொய் என்கிற கலை தான் மனிதர்களுக்கு எத்தனை ஜாலமாய் வருகிறது! மந்திரக் கோலைச் சுழற்றிவிட்டாற் போல ஒரு மாய மாற்றம்!

பார்த்துக் கொண்டே இருந்த சுப்ரமண்யத்திற்குத் திடீரென உடம்பு படபடக்கிறது.

ஈஸிசேரை உதறிக் கொண்டு எழுந்து போய் - அந்த ரங்கசாமியிடம் நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி நாலு வார்த்தை கேட்க வேண்டுமென்று ஆவேசமாய் உடம்பு ஆர்ப்பரிக்கிறது.

ஆனால்... ஆனால்....

நண்பர் தாமோதரன் — ரங்கசாமியின் தந்தைதான் — அடிக்கடி சொல்வது நினைவிற்கு வந்து எழுந்திருக்கவிடாமல் தடுக்கிறது.

''பண்டம் சிதறினால் பொறுக்கி விடலாம் சுப்ரமண்யம். வார்த்தைகளை ஒரு தடவை வெளியே விட்டு விட்டால் அது அப்படியே கல்லில் செதுக்கிய எழுத்துக்களாயிடும். திருப்பி எடுக்க முடியாது!''

அன்று ஒருநாள் தாமோதரன் இப்படிச் சொன்னதும் அடக்க முடியாமல் சிற

எதிர் வீட்டுக் காட்சிகள்

ஷைலஜா



ஆரம்பிக்கிறார், சுப்பிரமணியம். ''தாமு! நம்முடைய இந்த எழுபது வயசுக்கு இப்படி ஒரு விவேகமான பேச்சு தேவைதான். ஆனால் அவசியமேற்படுகிற போது இந்த மௌன ஆயுதத்தையே நீசுதாரீதமாப் பயன்படுத்தி ஆகணும். நானும் பல வருஷமாய் இந்தத் திண்ணையில் உட்கார்ந்த படியே எதிர் வீட்டில் உனக்குக் கிடைக்கிற மரியாதையைப் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். ஒரு வாய் வார்த்தை பேசாமலேயே இந்தச் சித்திரவதையை எத்தனை நாளைக்கு அனுபவிக்கப் போகிறாய்? தாமு... உனக்கு ஏன் இந்தக் கொடுமை?''

இப்படி நண்பர் வாய் விட்டு அரற்றியும் பதிலுக்குப் பதற்றமே இல்லாமல் சொல்கிறார், தாமோதரன்?

''கொடுமைக்கு விடிவு பொறுமையாய் இருக்கணும்னு நினைக்கிறேன், சுப்ரமண்யம்''

''தாமு தத்துவம் உனக்குச் சாப்பாடு போடாது... அழுகிற பிள்ளைதான் பால் குடிக்குமாம். ஐந்தாறு வருஷமாய் நீரிழிவு வியாதியில் கஷ்டப்படுகிற உனக்கு டாக்டர் சொன்னபடி கோதுமை சாதம் செய்து போட உன்மருமகள் கடுத்துக் கொள்கிறாள். மகன் ரங்கசாமியோ, ''பேசாமப் போடறதைத் தின்னுங்க அப்பா. அவளால் வேலைக்கும் போயிட்டு, குழந்தைகளையும் கவனிச்சிட்டு உங்களுக்கு ஒரு சோறு, எங்களுக்கு ஒரு சோறுன்னு செய்ய முடியாது...'' என்று பரிந்து வருகிறான், பெண்டாட்டிக்கு. வீட்டுக்குப் பெரியவனாய், லட்சணமாய் என்றைக்காவது அவனை அதட்டிக் கேட்டிருக்கிறாயா, நீ?''

தாமோதரன் இதற்குப் பதிலே சொல்லாமல் பொக்கைவாய் திறந்து மெல்லச் சிரிக்கிறார். இது ஒரு வரம் தான். பொறுமைத் தவமிருந்து தெய்வத்திடமிருந்து பெற்றுக் கொண்ட மௌனப் புன்னகை வரம்.

சுப்ரமண்யம் தொடர்கிறார்:

''போகிறது இனிமேலும் நீ பிள்ளை, மருமகள் என்று வயிற்றுக்கு வஞ்சனை செய்பவர்களிடம் வாழாமல், யாருமில்லாத ஒண்டிக் கட்டையான என்னோடு சேர்ந்து கொள். உனக்குத் தினம் ஒரு ஆழாக்குக் கோதுமை சாதம் வடித்துப் போட்டால் நான் ஒன்றும் குறைந்து போய் விட மாட்டேன்...''

''ஆனா இது சரிலா, ரங்கசாமிக்குக் கௌரவக் குறைச்சல் இல்லையா, சுப்ரமண்யம்?'' என்று நிதானமாய்த் தாமோதரன் கேட்டதும் திரும்பவும் கத்த ஆரம்பிக்கிறார்:

''எது கௌரவக் குறைச்சல் பெற்ற அப்பனுக்குத் தேவையான ஒருவேளை கோதுமைச் சோறுக்கு வழி செய்ய வக்கில்லாதவனுக்கு, கௌரவம்பற்றி என்ன தெரிந்திருக்கப் போகிறது? இன்றைய காலத்துப் பிள்ளைகளுக்குப் பெண்டாட்டி புடவைக்குப் பின்னால் ஒளிவதுதான் கௌரவம். அந்தக் கௌரவம், நீ வீட்டை விட்டு வெளியேறுவதினால் குறைந்து போகுமானால் பாதகம் ஒன்றுமில்லை. தாமு, வாஸ்தவமாய்ச் சொல்கிறேன் வரவர உன்னைக் கண்ணால் பார்க்கச் சகிக்கவில்லை. பெண்டாட்டி, குழந்தைகுட்டி இல்



லாத நான் கூடத் திடமாய்இருக்கிறேன். நீ இப்படி எலும்புத் துருத்திக் கொண்டு எழுபது வயசுக்கு நூறு வயசுக் கிழவன் மாதிரி...''

சுப்ரமண்யத்திற்கு இதற்கு மேல் பேச முடியவில்லை. துக்கம் பந்தாய் நெஞ்சை அடைக்கிறது. ஒரு வருஷமா, இரண்டு வருஷமா ஐம்பது வருஷ சிநேகிதம். இடையில் வேலை நிமித்தம் சுப்ரமண்யம் பல ஊர்களுக்குப் போய் விட்டாலும் ரிடையர் ஆன பிறகு. மனைவியும் வியாதியில் மறைந்ததிலிருந்து இதே வீடும். இதே திண்ணையும் தான் ஸ்வாதீனமாகி விட்டன. அதை விட தாமோதரனின் நட்பு இப்படி அவரை அதட்டி உரிமையாய்க் கேட்குமள விற்குக் கொண்டு விட்டிருக்கிறது.

தாமோதரன் மறுபடியும் தம் வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டு பேச ஆரம்பிக் கிறார்:

''சுப்ரமண்யம் நீ சொல்கிற மாதிரி பிள்ளை — மருமகள் உறவை அறுத்திட்டு நான் புறப்பட்டால் யாருக்கு சந்தோஷம் இருக்கப் போகிறது. என்கிறாய்? ஏதோ கடைசி வரையிலும் 'அப்பாவை வைத்துக் காப்பாற்றினான். ரங்கசாமி...' என்கிற நல்ல பெயராவது அவனுக்குக் கிடைக்கட் டுமே... இந்தப் பெயரை அவனுக்குத் தந்து விட்டுப் போவதை விட வேறு என்ன நான் சேர்த்துத் தரப் போகிறேன்?''

''தாமு இனிமேலும் உன்கூட நான் பேசிப் பிரயோஜனமில்லை...''

சுப்ரமண்யம் அலுத்துப் போனவராய் ஈஸிசேரை விட்டு எழுந்திருந்தார்.

சொன்னபடி தாமோதரன் பிள்ளைக்கு 'நல்ல பெயர்' ஏற்படுத்திக் கொடுத்து விட்டுத் தான் போய்ச் சேர்ந்து விட்டார். இந்த நல்ல பெயரின் பின்னணிக் கதை சுப்ரமண்யத்திற்குத்தான் தெரியும்.

இன்றைக்கு தாமோதரன் மறைந்து பதி மூன்று நாளாகிறது. 'வைகுண்ட சமாரா தனை' என்று காரியப் பத்திரிக்கை கூட அச் சடித்து உறவினர்களை. நெருங்கிய நண்பர் களை அழைத்திருந்தான் ரங்கசாமி.

வீட்டின் மொட்டை மாடியில் ஷாமி யானா கட்டி. கீழே ஓலைப்பந்தலில் தடுப்புக் கட்டி. பின்கட்டு ஓரமாய்க் கோட்டை அடுப்பு 'ஜகஜக' என்று எரிய...

''பெரியவர் சாவு கல்யாண சாவு இல்லையோ. அதான் பிள்ளை அமோகமாச் செலவழிச்சி 'சுபம்' செய்கிறார். பத்துக்கு ரங்கசாமி கோதானம் எல்லாம் கொடுத்த தாய்க் கேள்வி...''

''அடடா... எத்தனை சிரத்தையான மனசு! இன்றைக்கு வைகுண்ட சமாராதனை சாப்பாட்டைப் பார்த்தியோ. எத்தனை வகைப் பதார்த்தங்கள் அம்மா... வயிறே வெடிக்கிறது.''

''இருந்தாலும் இந்தக் காலத்தில் இப்படி ஒரு பிள்ளையைப் பார்க்கிறது அபூர்வம்தான். வயசானவரை கடைசி வரைக்கும் அடிச்சி விரட்டாமக் காப்பாத்திக் கரை சேர்த்திருக் கிறார். ரங்கசாமி!''

'காப்பாத்திக் கரை சேர்த்திருக்கிறார்..'

கடைசியாய்க் காதில் விழுந்தன இந்த வார்த்தைகள். சுப்ரமண்யத்திற்கு 'காய வைத்துக் கரை சேர்த்திருக்கிறார்' என்று நிஜமாக மாற்றிக் கூவ வேண்டும் என்பது போலப் பற்றிக் கொண்டு வருகிறது.

''அரிசி சாதம் தான்... தின்னுத் தின் னுங்க...''

'லொட்' என்று தட்டத்தை மாமனார் முன் வீசி விட்டு கசினோ ஆபீஸுக்குப் பறப்பதையும். வேறு வழியின்றிப் பசி பொறுக்காது அதையே தின்று விட்டுத் தாமோதரன் அவஸ்தைப்படுவதையும் கண் கூடாகப் பார்த்திருக்கிறார். சுப்ரமண்யம். அவஸ்தையின் கொடுமைக்குப் பயந்து சில நாட்கள் அவர் வயிற்றைக் காயப் போட்டதையும் கண்டு கலங்கிப் போயிருக் கிறார்.

இன்றைக்கு அந்த மனிதருக்குவைகுண்ட சமாராதனை. ஊருக்கெல்லாம் விருந்து!

''மாமா.''


குரல் கேட்டதும் சுப்ரமண்யம் சட்டென நிமிர்கிறார்.

ரங்கசாமி.

சாஸ்திரோக்தமான உடையில் சாதுவாய் ஒரு தோற்றம். மனைவி எதிரில் நிற்பதாய் நினைத்துக் கொண்டிருக்கிறாரோ?

அமுத்தவாரம்

வாசகர்கள் தங்கள் தொகுதியில் யார் வேட்பாளராக நின்று வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறார்கள்? ஏன்?




எங்கள் ஓட்டு யாருக்கு?

பட்டுப்புடவை பரிசுத்திட்டம்

போட்டி: 24

அடே டே! நல்ல ஐடியா!



''அடேடே இது நல்ல ஐடியாவா இருக்கே!'' என்று நீங்கள் பாராட்டுப் பெற்றதுண்டா? அல்லது யாரையாவது பாராட்டியதுண்டா? அந்த ஐடியாவைக் கீழே உள்ள வெற்றிடத்தில் சுருக்கமாக எழுதி இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப் புடவை. உறையின் மேல் ''நல்ல ஐடியா'' என்று குறிப்பிடுதல் அவசியம்.

முடிவு தேதி: **29-10-84**

இன்னும் 29 பட்டுப்புடவைகள் பாக்கி இருக்கின்றன. வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கேற்று ஒன்றைப்பெற முயலுங்கள்.

என் பெயர் : ....

விலாசம் : ....

....

சுப்ரமண்யத்திற்கு அந்த நிலையிலும் கூடச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டு, ''என்ன, ரங்கசாமி?'' என்றார்.

''மாமா இன்னிக்கு அப்பாக்கு வைகுண்ட சமாராதனை. அவர் ஆத்மா சாந்தியடையணும்னு அவர் காரியங்கள் எதிலும் குறைவு இல்லாமல் செய்து வரேன். நீங்க அவர் உயிர் சிநேகிதர். உங்களுக்குத் தனியே சொல்ல வேண்டாம்னு நினைக்கிறேன்...''

சுப்ரமண்யம் பதிலே சொல்லவில்லை.

ரங்கசாமி போய் விட்டான்.

மணி பதினொன்று இருக்கும்.

சுசீலா வந்தாள்.

''மாமா... சாப்பிட வாங்களேன்...''

கூவியபடியே போய் விட்டாள்.

பன்னிரண்டு மணிக்கு மறுபடியும் ரங்கசாமி வந்தான்.

''மாமா முதல் பந்தி ஆச்சி ... அடுத்த பந்தியிலாவது வாங்க...''

மணி இரண்டு.

சுசீலா சற்று எரிச்சலாய்க் காணப்பட்டாள்.

''வரக் கூடாதா? நீங்களாகவே? இதான் கடைசி பந்தி... உங்க சிநேகிதர் வைகுண்ட சமாராதனை... சாப்பிடக் கொடுத்து வைச்சிருக்க வேண்டாமா, மாமா?''

'அடிபோடி அறிவு கெட்டவளே இருக்கிறவரை மனுஷனைக் கொலைப் பட்டினி போட்டே கொன்று விட்டு இன்னைக்கு அவர் செத்துப் போனதுக்கு வைகுண்ட சமாராதனையாம் வடை. பாயசமாம். பாவி ஜென்மங்கள்!'

''மாமா ஏன் பேசவே மாட்டேங்க நீங்க? சிநேகிதர் போன துக்கமாக்கும்? கண்ணெல்லாம் சிவந்திருக்கு...''

சுசீலா முணுமுணுத்தபடி போய் விட்டாள்.

மணி ஐந்து.

சுப்ரமண்யம் காலையிலிருந்து பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. சிறுகுடலும், பெருங்குடலும் போராடித் தோற்றன.

மணி எட்டு.

சுப்ரமண்யம் சமையலறைக்குப் போய் திரி ஸ்டவ்வைப் பற்ற வைத்தார். உருண்டையாயிருந்த அந்த ஓராழாக்கு வெண்கலப் பானையை அடியில் மாவு தடவி அடுப்பில் ஏற்றினார். தண்ணீரை ஊற்றிக் கொதி வந்ததும் உடைத்த கோதுமையை அள்ளிப் போட்டார். கொதித்து அடங்கிச் சோறாகும் வரை பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தார். பிறகு வெண்கலப் பானையை இறக்கிக் கூடத்திற்குத் துணியால் பிடித்து எடுத்து வந்தார்.

கூடத்து நட்டநடுவில் நீர் தெளித்துக் கோலம் போல ஏதோ போட்டு ஒரு பலகையை வைத்தார்.

வெண்கலப் பானையைப் பலகை மேல் வைத்துவிட்டு உள்ளே போய் விளக்கைக் கொண்டு வந்து ஏற்றினார்.

''தாமு'' என்று வாய் விட்டுக் கதறிய பின்...

குலுங்கி அழ ஆரம்பித்தார்.

உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!

ஹேண்ட்லூம் ஹவுஸ் வழங்கும்



20%

சிறப்புத் தள்ளுபடி

1 10-84 முதல் 22-10-84 வரை
எல்லா ரகங்களுக்கும் உண்டு.
பிரிண்டட் பட்டு, ஆர்கென்ஸா
புடவைகள் மற்றும் குறிப்பிட்ட
ரகங்களுக்கு மேலும்

20%

சிறப்புத் தள்ளுபடி

உண்டு.

ஹேண்ட்லூம் ஹவுஸ்

ADWAVE 2723

7, ரத்தன் பஜார், சென்னை 600 003

- கோயம்புத்தூர் :
  512, திவான் பஹதூர் ரோடு,
  R.S. புரம், கோயம்புத்தூர் 641 002

- திருச்சி :
  ''சுமங்கலி''
  பட்டு கூட்டுறவு சூபர் மார்க்கெட்,
  464, பெரிய கடை வீதி, திருச்சி 620 008

- ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்


சிவாஜி போடுகிறார்
அரை செஞ்சுரி


ஐம்பது ஆண்டுகளுக்கு முன், ராமாயண நாடகத்தில் சீதை வேடத்தில், நடிக்க ஆரம்பித்த கணேசன் என்கிற சிறுவன் தான் இன்று திரையுலகிலே 250 படங்களுக்கு மேல் விதம் விதமான பாத்திரங்களில் நடித்துப் பெருமைமிகு சாதனை படைத்துள்ள நடிகர் திலகம் சிவாஜி. இந்த நடிப்புச் சிகரம் பற்றி நமக்குத் தெரியாத பல புதிய தகவல்களின் தொகுப்பு இதோ:

- தினமும் காலை சரியாக ஆறு மணிக்கு எழுந்து விடுவார்; நாள்தோறும் ஷேவ் செய்துகொள்வார்; எந்த சீஸனாய் இருந்தாலும் குளியல் பச்சைத் தண்ணீரில்.
- ஆறே முக்காலுக்குள், ஷேவ், குளியல் முடித்து, அத்தனை ஆங்கில, தமிழ் காலைத் தினசரிகளையும் , புரட்டி விடுவார்.
- சரியாய் ஆறே முக்காலுக்கு, மாடியிலிருந்து, கீழே இறங்கி வருவார்; நேரே தம் அம்மா, அப்பாவின் பெரிய போட்டோக்கள் இருக்கிற அறைக்குப் போய்ச் சில நிமிடங்கள் வணங்குவார்.
- காலை ஏழு முதல் ஏழரை வரை வந்திருக்கிற சினிமா, அரசியல், ரசிகர் மன்றம் சம்பந்தப்பட்டவர்கள், உதவிகள் கேட்டு வருகிறவர்கள், மற்றவர்கள் என்றுபலரையும் பார்ப்பார்.
- சரியாய் ஏழரை மணிக்கு ஸ்டுடியோவுக்குக் கிளம்பி விடுவார். நேராக மேக் அப் ரூம். எல்லா ஸ்டுடியோக்களிலும், சிவாஜிக்கென தனி மேக்அப் ரூம் உண்டு.
- மேக்அப் முடிந்து எட்டரை மணிக்கெல்லாம் ரெடியாகி விடுவார். இவர் ரெடியாகி விட்டு, வேறு நடிக, நடிகையர், டைரக்டர் போன்ற யாருக்காகவாவது காத்திருந்த நாட்கள் பல.
- 9 முதல் 1 மணி வரை முதல் ஷெட்யூல்; பிறகு 2 முதல் 5 வரை அடுத்த ஷெட்யூல். இடையிடையே பிரேக் கிடைக்கும் போது சிகரெட் (555 பிராண்டு) பிடிப்பதுண்டு.
- ஃப்ளோரில் நுழைந்த பின் எந்த ஒரு காரணத்துக்காகவும் வெளியில் வர மாட்டார். யார் வந்தாலும் உள்ளேயே அழைத்துப் பேசுவார்.
- வசனத்தை மனப்பாடம் செய்வது என்பதெல்லாம் துளியும் கிடையாது. வசன கர்த்தா, வசனத்தை ஒருமுறை படித்துக் காட்டினதும், அதை அப்படியே கிரகித்துக் கொண்டு, பேசி விடுவார்.
- மாலையில் ஸ்டுடியோவிலிருந்து நேராக வீட்டுக்குத்தான். மாலை மறுபடி குளியல்.
- அடுத்த அரை மணிக்கு மறுபடி விசிட்டர்கள். தொடர்ந்து மேலே தம் அறைக்குப் போய், வீடியோவில் படம் பார்ப்பார். விரும்பிப் பார்ப்பது 'கௌபாய்'ப் படங்கள்.
- காலையில் சிவாஜியின் சிற்றுண்டி — ஒரே ஒரு இட்லி; இல்லையெனில் ஒரே ஒரு கரண்டி உப்புமா, பொங்கல் இப்படி ஏதாவது. பின் அரைகப் காபி. அதுகூட, காலையில் சாப்பிடவேண்டிய மாத்திரைகளை வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாதே என்பதற்காகத்தான்.
- மதிய உணவும் (குமார் ஏழெட்டுப் பேருக்கு) வீட்டிலிருந்தே வந்துவிடும். சிக்கன், மீன் இப்படி ஏதாவது இருக்கும். கீரை இருக்கும்; சாதம், தயிர் இருக்கும். சாப்பிடும் அளவோ மிகக் குறைவு.
- மதியம் உணவுக்குப் பின் அரை கப் பிளாக் காப்பி. இந்தப் பழக்கம், அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவரிடமிருந்து இவருக்கு வந்தது. இப்போது நண்பர் இறந்து விட்டாலும், அவர் நினைவாய் பழக்கம் தொடர்கிறது.
- வி. கே. ராமசாமி, மேஜர் — இவர்கள் கூட நடித்தால் நிச்சயம் சிவாஜியுடன் சேர்ந்து தான் சாப்பிடுவார்கள்.
- இரவு உணவிலும் நான்வெஜிடேரியன் இருக்கும். அளவு ரொம்பக் குறைவு.
- சாயங்காலம் நேரம் இருந்தால், பேரன் பேத்திகளுடன், சிந்துப் பேசி, கொஞ்சி விளையாடுவார். குடும்பத்தினருடன் ஜாலியாய்ப் பேசிக் கொண்டிருப்பதுண்டு.
- தினமும் மாலையே, மறுநாள் யார் பட ஷூட்டிங், எங்கே என்றெல்லாம் விசாரித்துக் கொண்டு விடுவார்.
- சிவாஜிக்கு மேக்கப் மேன், மேக்—அப் போட்டு விட்டாலும், புருவத்தை மட்டும் சிவாஜியே எழுதிக் கொள்ளுவார்.
- ரசிகர் கடிதங்களை, தம்பி ஷண்முகமே கவனித்துக் கொள்ளுவார். சில வித்தியாசமான கடிதங்களை மட்டும், அண்ணனிடம் படித்துக் காட்டுவதுண்டு.
- சிவாஜி நடித்த படங்களில், சிலவற்றை சிவாஜி பார்த்ததே கிடையாது! அவ்வளவு பிஸி!
- 'நாடகம் போட வேண்டும்' என்ற ஆசை சிவாஜிக்கு இன்னும் இருக்கிறது. 'இருந்தாலும் நேரம் இல்லையே உடம்பு முடியலையே ' என்ற குறை உண்டு.
- சிவாஜி இன்னும் செய்யாத, ஆனால் அவர் செய்ய ஆர்வமாய் இருக்கிற ரோல் தந்தை பெரியார் பாத்திரம்.
- காரில் பயணம் செய்யும் போது, அரசியல், அல்லது சினிமா பற்றிப் பேசுவதுண்டு. நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியிருந்தால் பாடல்கள் கேட்டபடியே போவார். பிடித்த பாடல்கள் கப்பலோட்டிய தமிழன் படத்தின் அத்தனை பாடல்களும்.
- விமானத்தில் பயணம் செய்யும்போது, உட்கார்ந்து பத்து, பதினைந்து நிமிஷமானதும் தூங்க ஆரம்பித்து விடுவார்!

ராஜசேகரன் எம். எல். ஏ. சொல்ல

எஸ். சந்திரமௌலி

புகைப்படம்: **யோகா**


நன்மையிலேயே நீ மிகவும் வெறுக்கும் மூன்று விஷயங்கள் என்ன கூறு?
1. மனைவியின் தொல்லை. 2. மாமியார் வருகை. 3. எரிச்சலூட்டும் கொசுக்கள்.
மூன்றாவது பிரச்சினையைத் தீர்ப்பது மிக எளிது. அதற்கு உதவுது—டார்டாய்ஸ்
என்ன ஆச்சு! என் நடுங்கிறீங்க அலறீங்க, பூகம்பம் இங்கே இல்லே, அது ரொம்ப தூரத்திலே.
அடி கண்ணு, பூகம்பத்தைக் கூடப் பொறுத்துக்குவேன், ஆனா கொசுத் தொல்லையை மட்டும் பொறுக்க முடியாது.
பூமி நடுங்கும்படி புகைகொண்டு தூக்கங்கள் கொசுக்களை அதற்கு உதவுகிறது—டார்டாய்ஸ்
தூக்கம் போறதைய்யா, வீடு இல்லே இது, ஆபீசு
இராத் தூக்கத்தை இழக்காமலிருக்க உதவுகிறது—டார்டாய்ஸ்
சே! வெடகக்கேடு தேநிலவு கொண்டாடுகிற அழகு!
பிடுங்கியெடுக்கும் கொசுக்களை அடியோடு விரட்டி அடிக்கிறது—டார்டாய்ஸ்

வட்டமேஜை

● திரு. பூர்ணம் விசுவநாதன் நாடக உலக அனுபவ ஆஸ்திகளை நகைச்சுவையோடுவழங்கியதைக் கேட்க நேரம் நல்ல நேரம் நிகழ்ச்சியில் நேர்முகமாகக் கலந்து கொண்டது போன்ற மனநிறைவு ஏற்பட்டது.
ஜனூர் வெளிக்கடை,   டி. ராஜன்.

● சில்லறைத் தட்டுப்பாடு காரணமாகச் சில்லறை சேகரித்துத் தந்தால் சாராயக் கடையில் சாராயம் தருகிறார்கள் என்ற செய்தி (9.9.84 இதழ்) பார்த்தேன். பெங்களூர் சாராயக் கடைகளில் இதைவிட சாமர்த்தியமாகப் பாக்கி சில்லறைக்குப் பதில் சின்னச் சின்ன பிளாஸ்டிக் பைகளில் அடைத்த சாராயத்தையே கொடுத்து விடுகிறார்கள்! யாரும் மறுப்பதில்லை. நாடு எப்படியெல்லாம் முன்னேறுகிறது! அடடா!
பெங்களூர்,   லோகநாதன்.

● மதிய உணவு கொண்டு வரும் டப்பா வாலாக்கள் பம்பாயில் சங்கம் அமைத்து போனஸ் கேட்கிறார்கள் என்ற செய்தி (16.9.84 இதழ்) படித்தேன். பங்களூரில் மதிய சாப்பாடு கொண்டு வருவோருக்குக் கடந்த 15. ஆண்டுகளாகவே போனஸாக ஒரு மாத சம்பளம் தந்து வருகிறோம்! சங்கம் இல்லாமலே பெறுகிறார்கள்.
பெங்களூர்.   ச. பரமசிவன்.



தொகையைச் சேமிப்பது என்று நானும் இமர்த் தீர்மானம் செய்து விட்டேன்.
கோவை—2,   சுந்தர் சுந்தரி.

● எம். ஜி. ஆர். வெர்ஸஸ் எஸ். டி. எஸ். வழக்கு விவரங்களைச் சம்பந்தப்பட்ட கோர்ட்டில் நேரில் உட்கார்ந்து கேட்டது போல இருந்தது.
நெல்லிக்குப்பம்,   ரா. ஜோதிராமன்.

● காமாக்ஷியம்மனைப் பற்றித் தர்மபுரி மாவட்டத்துக்காரர்களாகிய எங்களுக்கே தெரியாத பல விஷயங்களைத் தெய்வதரி

நேரம் நகைச்சுவை நேரம்

● அனைத்துப் பத்திரிகைகளும் ''இராஜ ராஜ சோழன்'' என்றே குறிப்பிட்டிருக்கும் போது ''கல்கி'' ''பொன்னியின் செல்வன்'' என்று புகழாரம் சூட்டியது மும்முடிச்சோழனுக்கு மிகவும் பெருமை சேர்த்தது.
சாத்தூர்,   எம். செல்லையா.

● ரசிகர்கள் போன் செய்தால் எந்த நடிகர், நடிகை பேசத் தயாராய் இருக்கிறார்கள்? ''அவரா? ஊரில் இல்லையே: '' என்ற பதில் தான் 'ரெடி'யாக வைத்திருக்கிறார்களே! ஜாமர் கிருஷ்ணமூர்த்தியின் பாக்கெட் டைரி ரசிகர்களுக்குக் கிடைத்தால் தான் என்ன பயன்?
கும்பகோணம்—1.   டி. எஸ். சீதாராமன்.

● நாட்டில் ஜனநாயகம் தழைக்கச்'சத்திய சோதனை'யில் இறங்கிய என். டி. ஆர். உடல் நலம் குன்றியபோதும் உள்ளம் குன்றாது உழைத்துப் போராடி வெற்றி பெற்றதற்கு அவரடைந்த புகழ் மாலைகளில் உங்கள் தலையங்கமும் நிச்சயம் இடம் பெறும்.
நீடாமங்கலம்.   பத்மா. சுப்பிரமணியம்.

● இமர்ச் செலவுகளைச் சில வாசகர்கள் சமாளித்த விவரத்தை அறிந்ததும், இனி மேல் ஓட்டலில் குடிக்கும் காப்பியில் ஒரு காப்பியைக் குறைத்துக் கொண்டு அந்தத்

சனம் பகுதியில் பக்தி மணம் கமழ எழுதியிருந்தார் ஆனந்தி.
அரூர்.   மு. மதிவாணன்.

● தமிழக அரசின் அபத்தமான போலி மதுவிலக்குக் கொள்கை ஆயுர்வேத மருந்துகள் விஷயத்தில் அநீதி செய்து வருகிறது. ஆல்கஹால் உள்ளது என்பதால் ஆயுர்வேத வைத்தியத்தின் முக்கிய மருந்துகளான தசமூலாரிஷ்டம், திராட்சாரிஷ்டம், சரஸ்வதாரிஷ்டம் போன்றவைகளுக்குக் கடுமையான 33 சதவீத வரியைத் தமிழக அரசு விதித்துள்ளது. திரும்பிய பக்கமெல்லாம் சாராயம் கிடைப்பதால், 'கிக்' வேண்டுமென்பதற்காக மதுவருந்துபவர்கள் யாரும் இந்த அரிஷ்டங்களை அதிக விலை கொடுத்து வாங்கி அருந்த மாட்டார்கள். இம்மருந்துகள் வரியே விதிக்காவிடில் கூட மிகவும் விலை அதிகமானவை. ஆல்கஹால் இம்மருந்துகளில் சுயமாக உற்பத்தியாவதாகுமே தவிர தனியே ஆல்கஹாலை அரிஷ்டங்களில் சேர்ப்பதில்லை. தவிர ஆங்கில மருந்து வகைகளில் சில டானிக்குகளில் 25 சதவீதம் ஆல்கஹால் கலந்துள்ளது. இம்மருந்துகளுக்குத் தமிழக அரசு அநீதியான இந்த 33 சதவீத வரியை விதிப்பதில்லை. இது பாரபட்சமானதல்லவா?
சென்னை—102.   எஸ். அனந்தராமன்.

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)

தெய்வதரிசனம்

பெருமாளைப் பாடிய பெருமாள்

பன்னிரு ஆழ்வார்களில் பெருமான் என்று அழைக்கப்படும் தனிப் பெருமை குலசேகரப் பெருமாளுக்கே உரியது. அவருடைய வாக்கிலிருந்து பிறந்த கவிதைகளைப் பெருமாள் திருமொழி என்றே கௌரவித்துப் போற்றுகிறார்கள் வைஷ்ணவ பக்தர்கள். ஸ்ரீ குலசேகரப் பெருமாளின் பாடல்கள் மிகவும் சுலபமாகப் புரியக் கூடியவை. பக்தியில் தோய்ந்து ரஸம் சொட்டுகின்ற பனுவல்கள்.

''செடியாய வல்வினைகள்
  தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா
  நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும்
  அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து
  உன் பவளவாய் காண்பேனே ''

(செடியாய வல்வினைகள் — புதர்களைப் போல அடர்ந்து முளைத்திருக்கும் கொடிய வினைகள்.)

இந்தப் பாடலைக் கேட்டு உருகாமல் இருக்க முடியுமா? இதற்கு முன் ஒரு பாடலில் திருவேங்கடத்தைத் தரிசிக்க வரும் அடியார்கள் நடந்து செல்லும் பாதையாகத் தாம் இருக்க விரும்புவதாகக் கூறியவர், அதிலும் ஒரு குறை கண்டாராம். ''திருமலைக் கோவிலை அடையப் பலவழிகள் இருக்கலாம். அதனால் கோவிலின் வாசல் படியாகவே கிடந்தால் மெய்யடியார் சஞ்சரிக்கும் பாக்கியத்தையும் பெற்று திருமாலின் பவள வாய் காணும் பெரும் பேற்றையும் அடையலாமே என்று விண்ணப்பஞ் செய்கிறார்'' என்று திவ்யார்த்த தீபிகை கூறுகிறது.

''கொல்லிக் காவலன், கூடல் நாயகன், கோழிக் கோன் குலசேகரன்'' என்றெல்லாம் பட்டங்கள் பெற்ற குலசேகர மன்னர் எவ்வாறு இத்தனை உருக்கமான பாடல்களை இயற்றினார் என்று வியப்பாக இருக்கிறது.

படியாய்க் கிடந்து உன் பவள வாய்க் காண்பேன் என்று அவர் பாடியதைக் கௌரவித்துப் பெருமாள் கோவில்களில் பித்தளைத் தகடு போட்டு வாசற்படியைக் குலசேகரப் படி என்று அழைக்கிறார்கள்.

பெருமாளைப் பாடிய பெருமாளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட தலம் மன்னார் கோவில்.

ராஜ ராஜ சதுர்வேதி மங்கலம் என்றும் வேதபுரி என்றும் அழைக்கப்பட்ட மன்னார் கோவில் அம்பாசமுத்திரத்திலிருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் பொதிகை மலைச்சாரலில் தண் பொருநை நதியின் தீரத்தில் பூந்தென்றலும், புது மலரும், மென் சாரலும், செந்நெல்லுமாக வளம் கொழிக்கும் பிரதேசத்தில் அமைந்துள்ள தலங்களில் மன்னார் கோவிலும் ஒன்று.

கடனா நதிக்கும் பொருநை நதிக்கும் மத்தியில் உள்ள பிரதேசம். இதை ஸ்ரீரங்கமாகவே பாவித்து ஸ்ரீ குலசேகரப் பெருமான் வழிபட்டு இங்கேயே திரு நாடு எழுந்தருளினார் என்பது கர்ண'பரம்பரைச் செய்தி.


'ராஜேந்திர விண்ணகர்' என்ற ஆராய்ச்சி நூலில் திரு. ஆர். திருமலை இந்தச் செய்திக்கு ஆதாரமில்லை என்று கூறுகிறார். எப்படியிருந்தாலும் குலசேகரப் பெருமாளோடு தொடர்புடைய தலம் என்று நினைக்கும் போதுஏற்படுகிற உள்ளக் கிளர்ச்சி சரித்திர ஆய்வுகளை ஒதுக்கவும் தயாராக இருக்கிறது. பக்திக்கு வரலாற்று உண்மைகள் புரியாது. அகத்தியரும், மார்க்கண்டேயரும் இன்னும் பல முனிவர்களும் வழிபட்ட தலங்கள் என்று கூறும்போது ஆதாரம் தேடாத



○ இராமர், லட்சுமணர், சீதா பிராட்டியார்

○ குலசேகர ஆழ்வார்





அஷ்டாங்க விமானம்

மனம் இதையும் நம்பச் சித்தமாகி விடுகிறது.

சரியாக உச்சிக் காலத்தில் கோவிலை அடைகிறோம். கோவில் சாத்தியாகி விட்டது. என்ன ஏமாற்றம்! வருத்தத்தோடு நின்று கொண்டிருக்கும் போது 'தரிசனம் பண்ணணுங்களா?'' என்று ஒருவர் கேட்டார். ''ஆமாம் வெகு தொலைவிலிருந்து வந்திருக்கிறோம்'' என்றதும் கிடுகிடுவென்று போனார். சற்றைக்கெல்லாம் ஒரு பட்டாச்சாரியாரை அழைத்துக் கொண்டு வந்து

ஆனந்தி

விட்டார். 'நமக்குப் பெருமான் இன்று ஸேவை சாதிக்கத் திருவுளம் கொண்டுவிட்டார்' என்று பொங்கும் பூரிப்புடன் பட்டர்பிரானைப் பின்தொடர்கிறோம்.

ஸ்ரீநிவாஸ ஐயங்கார் மிகவும் உற்சாகத்தோடு கோவிலைப் பற்றித் தகவல்களைக் கூறினார்.

''நாங்களெல்லாம் எதுக்கு இருக்கோம்! எங்கிருந்தோ வரேள். தரிசனம் பண்ணி வைக்க வேண்டாமா?'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய்க் கதவுகளைத் திறக்கிறார். விளக்கு ஏற்றுகிறார். ''ராஜேந்திர விண்ணகரத்து நின்றருளிய பரமஸ்வாமி''களின் சந்நிதியில் நிற்கிறோம்.

''வேதநாராயணர். இவர் வேதவல்லித் தாயார். இவர் புவன வல்லித்தாயார். ஆயிரம் வருஷமா அப்படியே இருக்கிறார்கள். ஸ்வாமி சுதை சிற்பம். பச்சை நிறம். புது வர்ணமடிக்கவில்லை'' என்று கூறுகிறார். வேதவல்லித் தாயார் மஞ்சள் நிறமாகவும், புவனவல்லித் தாயார் பசுமை நிறமாகவும் தரிசனம் தருகிறார்கள். ப்ருகு முனிவரும், மார்க்கண்டேய முனிவருமாகப் பிரதிஷ்டை செய்த பெருமாள்.

அர்த்த மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் ராமச்சந்திர மூர்த்தியை அறிமுகம் செய்விக்கிறார். குலசேகர ஆழ்வாரே பூஜை செய்ததாகக் கருதப்படும் ராம லக்ஷ்மணர்களையும் சீதாப்பிராட்டியையும் கண்டு மனம் அப்படியே குழைந்து போகிறது.

இந்தப் பெருமானுடைய ஸந்நிதியில் தான் குலசேகரப் பெருமான் ராமாயணம் படிக்கக் கேட்டாரோ? இராவணன் சீதையைத் தூக்கிப் போன கட்டத்தைக் கேட்ட போது குலசேகரப் பெருமாள் தமது சேனையோடு இலங்கையை நோக்கிக் கிளம்பிப் போய் சமுத்திரத்திலேயே இறங்கி விட்டாராம்! ஸ்ரீராமர் சீதையோடு எதிரே வந்து தாமே சீதையை மீட்டு வந்ததைக் கூறினாராம். இப்படியெல்லாம் அவருடைய பக்தியின் முதிர்ச்சியைக் கொண்டாடுகிறார்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள்.

இந்த ராமனைத்தான் குழந்தையாகப் பாவித்து, எல்லாத் தாய்மார்களும் தங்கள் செல்வனைத் தாலாட்ட வசதியாக

''மன்னு புகழ் கௌசலை தன் மணிவயிறு
வாய்த்தவனே
....
என்னுடையஇன்னமுதே ராகவனே
தாலேலோ''

என்று அவர் தாலாட்டுப் பாடினாரோ!

அருகிலேயே குலசேகரப் பெருமான் கூப்பிய கையுடன் இருக்கிறார். இந்தக் கோவிலில் அவருக்குத் தான் முதலில் தீர்த்த மரியாதை செய்வார்களாம்.

தங்க முலாம் பூசிய கருடாழ்வார் பளபளவென்று. ஹனுமாரும் கருடனைப் போலவே பெருமாளின் பாதங்களைத் தாங்கத் தயாராக இருக்கிறார்.

ஒரு காலத்தில் துவாரபாலகர்கள் கையிலேயே சாவியைக் கொடுத்துவிட்டுப்போய் விடுவார்களாம். மறுநாள் காலையில் வந்து வாங்கிக் கொள்வார்களாம். ஊர் மக்கள் பெருமைப்பட வேண்டிய விஷயம்.

மன்னார்கோவில் என்றும் ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி திருக்கோவில் என்றும் பெயர் வரக் காரணமாக இருக்கின்ற கண்ணபெருமான் திருமுன்னிலை. ராஜமன்னாருக்கு வலது பக்கம் கோதை நாச்சியார். இடது பக்கம் கருடாழ்வார்.

நாயக்க மன்னர்கள் காலத்தில் இங்கே எழுந்தருளி வைக்கப்பட்டதாக வரலாறு. ஆனால் மிகவும் புராதனமான விக்ரகங்கள் என்று கூறுகிறார்கள். சொருக்குக் கொண்

ராஜமன்னார், ஆண்டாள், ஸ்ரீ கருட ஆழ்வார்



டையும், நுண்ணிடையும் ஸ்ரீ சூர்ணமுமாகக் கையில் குமுத மலரேந்தி நிற்கும் கோதை நாச்சியார். கண்ண பெருமாளோடு சம ஆஸனத்தில் கருடாழ்வார். பின்புறம் அவருடைய குழல்கள் சுருண்டு சுருண்டு பரந்திருக்கும் அழகைப் பார்க்க வேண்டும். தேய்ந்திருந்தாலும் 'கம்பீரமாக நிற்கும் மூர்த்திகள்.

அஷ்டாங்க விமானமாதலால் குறுகிய படிகளின் மீது ஏறி மேலே போகிறோம். ஸ்ரீ பரமபத நாதனை இருந்த கோலத்திலும் கிடந்த கோலத்திலும் வணங்கி மகிழ்கிறோம். மேல் தளத்திலிருந்து சுற்று வட்டாரத்தைக் காண்பது மனோரம்யமாக இருக்கிறது.

ஏறி இறங்கிவிட்டுக் கிளம்பும்போது ''குலசேகராழ்வார் கோவிலுக்கு வந்து தரிசனம் பண்ணிக் கொண்டு போறேளா?' என்று கேட்கிறார், பட்டர். பார்த்தால் வெளிப்பிராகாரத்திலேயே இருக்கிறது. 'நல்ல வேளையாகச் சொன்னீரே' என்று ஆவலுடன் தரிசனம் செய்கிறோம்.

பெரிய ஆகிருதியுடன் உள்ள பெருமாள். உள்ளம் குளிர்ந்து உருகிப் பாடிய இவர் சரங்களும் குவிந்திருக்கின்றன. கதைச் சிற்பமானாலும் அலங்காரங்களுக்குக் குறைவில்லாமல் அரச கோலத்திலேயே கிரீட ஹார கேயூரங்களுடன் விளங்குகிறார். இவர் வடமொழியில் பாடிய 'முகுந்த மாலை'யின் அழகையும், நயத்தையும் வடமொழி வல்லுநர்கள் போற்றுகிறார்கள்.

பெரிய பெருமாளுடைய அடியாரான பெருமாளைத் தரிசித்த பூரிப்பு மேலோங்கி நிற்கப் பிரியாவிடை பெறுகிறோம்.



குளோஸ் அப்

குறுக்கே ஒரு நந்தி

பேட்டி காணப் போகும் முன்பு அவரைப் பற்றிய என் எண்ணம் இதுதான்: 'ஜெயலலிதா நல்ல பளபளப்பான — சதைப் பிடிப்பான நடிகை; சும்மா பொழுது போக்கிற்காக அரசியலுக்கு வருகிறார்: அவருக்கு அரசியல், நாட்டு நடப்பு பற்றி அடிப்படை அறிவு கூடக் கிடையாது.''

பேட்டியின் போது எனக்குப் பெரிய ஆச்சரியம்! அவர் நிறைய படித்தவர் என்பதும், பிராந்திய, தேசிய, உலக அரசியல் பற்றி நல்ல ஞானம் உள்ளவர் என்றும் தெரிந்து கொண்டேன். நான் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும், பளிச் பளிச்சென்று பதில்கள் வந்தன. சுமார் மூன்று மணி நேரம் நடந்த அந்தப் பேட்டியை நான் மட்டும் டேப்பில் பதிவு செய்து கொள்ளவில்லை; அவரும் கூடத்தான்! எனக்குத் தெரிந்து, தான் தரும் பேட்டிகளைப் பதிவு செய்து வைத்துக் கொள்கிற ஒரே ஒருவர் ஜெயலலிதாதான்.



''ஏன் நீங்களும் டேப் செய்து கொள்கிறீர்கள்?'' என்று கேட்டேன். பதில் என்ன தெரியுமா? அவர் பத்திரிகைக்காரர்களை நம்புவதில்லையாம். அவர் ஒன்று சொல்ல, பரபரப்பாக இருக்க வேண்டுமென்பதற்காக, இவர்களாக வேறு எதையாவது எழுதிக் கொண்டு விடுகிறார்களாம்.

இவர் விஷயமாய் ஆளுங்கட்சியில், ஒருவித வெறுப்புணர்ச்சி உருவாகிவருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. நான், அ. இ. அ. தி. மு. க. கூட்டங்கள், தேர்தல் சமயம், மற்றும் வேறு பல நிகழ்ச்சிகளின் போதும் இதைக் கூர்ந்து கவனித்து இருக்கிறேன். பெண்கள் தங்களுக்கும் எம். ஜி. ஆருக்கும் இடையிலே நந்திபோல் ஜெ. லலிதா இருப்பதாய் நினைத்துக் கொள்கிறார்கள். ஆண்களுக்கோ 'நேற்று வந்த ஒரு பெண்மணி என்ன இத்தனை பேரையும் ஆட்டிப் படைப்பது?' என்று ஒருவித எண்ணம். இதையெல்லாம் வைத்து எதிர் காலத்தைக் கணித்தால், Jayalalitha is going to be a liability and not an asset for AIADMK

அனிதா பிரதாப் கூறக்கேட்டு எழுதியவர்
எஸ். சந்திரமௌலி

ஸகல காரிய ஸித்தி அளிக்கும் தெய்விகப் புத்தகங்களுக்கு முன்னோடியாகத் திகழும்

லிப்கோ வழங்கும் புத்தகங்கள்

		ரூ.காசு
1.	பத்திரங்களும் ரிஜிஸ்திரேஷனும்	15—00
2.	மஹாத்மாவின் மஹத்வம்	3—00
3.	வள்ளுவர் வாய்மொழி — திருக்குறள் மூலம்	1—50
4.	உங்கள் பிறந்த தேதியும் வாழ்க்கை ரகசியங்களும்	3—00
5.	உடல் மச்சங்களும் உங்கள் வாழ்க்கை ரகசியங்களும்	2—50
6.	ஆங்கில ஆசிரியன்	12—00
7.	தமிழ் — தமிழ்— ஆங்கில அகராதி	20—00
8.	குழந்தை வளர்ப்புக் கலை	5—00
9.	சமைப்பது எப்படி?	5—00
10.	இந்தி ஆசிரியன்	7—50
11.	ஸுந்தர காண்டம் — மூலம் ஸம்ஸ்க்ருதத்தில்	14—00
12.	ஸுந்தர காண்டம் — மூலம் தமிழில்	11—00
13.	ஸுந்தர காண்டம் — ஸ்ரீ C.R.S. தமிழ் வசனம்	18—50
14.	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் —ஸ்ரீ C.R.S. தமிழ் வசனம்— பால காண்டம் முதல் யுத்த காண்டம் முடிய 2 பாகங்களில் 1800 பக்கங்கள்	125—00
15.	ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் — ஸ்தோத்ரமாலையுடன்	10—50
16.	ஸ்தோத்ரமாலை	3—50
17.	கம்ப ராமாயணம் — வசனம்	11—00
18.	ரகுவம்ச மஹாகாவ்யம்—1-19 ஸர்க்கங்கள் — உரையுடன்	55—00
19.	குமாரஸம்பவம்— 1-18 ஸர்க்கங்கள் — உரையுடன்	25—00
20.	ஸ்ரீமத் பகவத் கீதை — மூலம் தமிழில் உரையுடன்	9—50
21.	மாங்கல்ய ஸ்தவம்	1—50
22.	ஸ்ரீ லக்ஷ்மீநாராயண ஹ்ருதயம்	1—50
23.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் — மூலம் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் — உரையுடன்	10—00
24.	நாலாயிர திவ்யப் பிரபந்தம்	70—00
25.	பன்னிரு ஆழ்வார்கள்	2—00
26.	நூற்றெட்டு ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேச வைபவம்	4—00
27.	ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் — உரையுடன்	48—00
28.	ஸ்ரீ தேசிக ஸ்தோத்ரங்கள் — மூலம் — ஸம்ஸ்க்ருதத்தில்	12—00
29.	,, மூலம் — தமிழில்	5—20
30.	,, உரையுடன்	60—00
31.	ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகைகளும் ஸகல காரிய ஸித்தியும்	3—00
32.	பஞ்ச ஸூக்தங்கள்	0—80
33.	ஸ்ரீ குருவாயூர் அப்பன் ஸுப்ரபாதம்	0—60
34.	ஸ்ரீ முகுந்தமாலை	1—50
35.	பஜகோவிந்தம்	1—50
36.	ஸ்ரீ மஹா பக்த விஜயம்	10—50
37.	அபிராமி அந்தாதி — உரையுடன்	2—00
38.	ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ—மூலமும் உரையும்	3—00
39.	ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீ தேவீ பாகவதமும்	4—50
40.	பெரிய புராணம் — சுருக்கம்	2—00
41.	திருவிளையாடற் புராணம் — சுருக்கம்	2—00
42.	ஸகல காரிய ஸித்தியும் சைவத் திருமுறைகளும்	7—50
43.	ஸ்ரீ ஸத்யநாராயண வ்ரதம்	1—30
44.	ஸ்ரீ லக்ஷ்மீ குபேர பூஜாக்ரமம்	0—90
45.	நவக்ரஹ க்ஷேத்ர புராணம்	7—20
46.	திருப்புகழ் மஞ்சரி	2—50
47.	ஆறுமுகனுக்குகந்த ஆறு படை வீடுகள்	7—50
48.	இயற்கை தரும் இன்மருந்துகள்	8—00
49.	குழந்தைக்கு வீட்டு வைத்தியம்	1—00
50.	விரத பூஜா விதானம்	8—00
51.	குடும்ப ஜோதிடம்	8—00
52.	விவாஹ மந்த்ரார்த்த போதினி	2—50
53.	ஸ்ரீ த்யாகராஜ க்ருதி ராமாயணம்	3—00
54.	ஸ்ரீ சனிக்ரஹ சாந்தி பூஜா விதானம்	2—50
55.	Tamil Nadu General Sales Tax (English)	35—00
56.	Central Sales Tax (English)	12—50

விசேஷ சலுகை :

எல்லாவற்றிற்கும் தபால் செலவு பிரத்யேகம். ஆனால், 10-11-1984க்குள் இவ்விளம்பரத்தைக் குறிப்பிட்டு, ஒரே சமயத்தில் ரூ. 50-க்குக் குறையாமல் எமக்கு ஆர்டர் செய்தால், எங்கள் செலவிலேயே புத்தகங்களை அனுப்பிவைக்கிறோம். மணியார்டர் அல்லது டிராப்ட் மட்டும் அனுப்புக.

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

43, ரங்கநாதன் தெரு, தபால் பை 1028

தியாகராயநகர், சென்னை-600 017

போன் : 441538

56 ஆண்டுகளாகப் புத்தக உலகில் பெரும் புகழ்!

யோகாசன மகிமை

[முன்னால் ஒரு குறிப்பு —யோகாசனக் கட்டுரைகளை படித்துவரும் கல்கி நேயர்கள் சில சந்தேகங்களைத் தெளிவு படுத்திக் கொள்ள விரும்பி கேள்விகளை அனுப்பியிருக்கிறார்கள். பொதுவான சில ஐயப்பாடுகளுக்குத் தக்க யோகாசன நிபுணர்களிடமிருந்து பதில் பெற்றுத் தர எண்ணுகிறோம். எனவே, இந்தக் கட்டுரைகள் பற்றிய ஐயவினாக்கள் ஏதுமிருப்பின், ''யோகாசன மகிமை'' என்று தலைப்புத் தந்து ஓர் அஞ்சல் அட்டையில் 'ஆசிரியர், கல்கி, சென்னை—600 032' என்ற முகவரிக்கு அக்டோபர் இறுதிக்குள் அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.]

ஒரு நிறுவனத்தின் உயர் அதிகாரி, டாக்டர் ஏ.எம்.மூர்த்தியிடம் வந்தார். அலுவலகத்தில் வேலை பார்க்கும்போது மூச்சுவிடுவது சிரமமாகி விடுகிறது தொண்டை கமறிக்கொண்டு அடுக்கடுக்காய்த் தும்மல் வருகிறது என்று சொன்னார். அலுவலகத்தில் ஏ.ஸி. அறைதான். அங்கு போய்ப் பார்த்தார் மூர்த்தி. ஒரு கோளாறும் இல்லை. அதிகாரியின் நடைமுறையில் தான் கோளாறு என்று கண்டுபிடித்தார். ஃபைல்களையும் புத்தகங்களையும் புரட்டுகிற போது எச்சிலைத் தொட்டுப் பக்கத்தைத் திருப்புகிற பழக்கம் அவரிடம் இருந்தது. புத்தகங்களிலும் ஃபைல்களிலும் படிந்திருக்கும் தூசு நாக்கில் பட்டுத் தொண்டைக்குப் போய் மூக்கு, தொண்டையெல்லாம் உறுத்தல் ஏற்படுத்தி, நோய்தொற்றி விடுகிறது. தொண்டைப் பகுதியில் நோய் எதிர்ப்புத் தன்மை, வலுவான சதை அமைப்பு இருந்தால் இந்தப் பாதிப்பு ஏற்படாது.


இந்தத் தூசுகளால் ஏற்படும் ஒவ்வாமை (அலர்ஜி) நோய்க்கு நிவாரணம் பெற சர்வாங்காசனம் சொல்லித்தந்தார். அதிகாரி குணமடைந்து விட்டார்.

இந்த வாரம் விளக்கம் தருகிற டாக்டர் ஏ. எம். மூர்த்தி சென்னை ஒய். எம். சி. ஏ. கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் டாக்டர் பட்டம் பெற்றது உடற்பயிற்சிக் கல்வி, யோகாசனம் இரண்டிலுமாகத்தான்— பூனே பல்கலைக்கழகத்தில். சென்னை யோகா பிரதர் ஹுட்டில் ஆலோசனைகள் தருகிறார்.

குள்ளமானவர்கள் பன்னிரண்டு வயதில் யோகாசனப் பயிற்சியில் சர்வாங்காசனம் பழகி விட்டால் இருபது வயதுக்குள் நல்ல உயரமாய் வளர உதவுகிறது. லோனவாலாவில், உயரம் குறைவான பள்ளி மாணவர்களைப் பொறுக்கியெடுத்து ஏழு ஆண்டுகள் பயிற்சி கொடுத்து இதை நிரூபித்திருக்கிறார், மூர்த்தி.

இவை தவிர, ஆண்மைக் குறைவு, உறுப்புக்களில் தளர்ச்சி போன்ற நிலைகளிலிருந்தும் குணம் பெற சர்வாங்காசனம் உதவுகிறது. பெண்களுக்கு மாதவிலக்குக் காலங்களில் ஏற்படக் கூடிய கோளாறுகள், கருப்பைக் கோளாறுகள் இவற்றுக்கும் இது நல்ல குணம் தரும்.

இந்த ஒரு ஆசனத்தில் தான் உடம்பிலுள்ள எல்லாப் பகுதிகளும் சம்பந்தப்பட்டுகின்றன. நரம்பு மண்டலம் வலுவடைகிறது. மூட்டுக்களில் நெகிழும் தன்மைஅதிகமாகிறது. தொடைகளிலும், தோள் பகுதியிலும் தசைகள் சீராக இயங்கும். தைராய்டு சுரப்பியை நன்றாக இயங்கப்பண்ணும். கண் பார்வை சீரடைய, ஆஸ்துமா நோயின் கொடுமையிலிருந்துவிடுபட, ஒற்றைத் தலைவலியை விரட்ட என்று பல கோளாறுகளில் சர்வாங்காசனம் பலன் தருகிறது.




பயிற்சி முறை:

மல்லாந்து தரை விரிப்பில் படுத்துக் கொண்டு உள்ளங்கைகள் தரையைப் பார்க்கும்படி கைகளை உடம்போடு ஒட்டி வைத்துக் கொள்ள வேண்டும். குதிகால்களும், கால் கட்டை விரல்களும் ஒன்றோடொன்று ஒட்டியிருக்க வேண்டும். முழங்கால்கள் வளையாமல் தரையோடு படிந்திருக்க வேண்டும். தலையை உயர்த்தக் கூடாது.

சர்வாங்காசனப் பயிற்சியில் ஐந்து நிலைகள் படிப்படியாக வரும். முதலில் கால்களை அப்படியே 30 டிகிரி அளவு உயர்த்தி, அதே நிலையில் முப்பது விநாடிகள் இருக்க வேண்டும். அடுத்து இன்னும் முப்பது டிகிரி உயர்த்தி, அதாவது அறுபது டிகிரி கோணத்தில் மேலும் முப்பது விநாடிகள். அடுத்து கால்களைச் சேர்த்த மாதிரியே இன்னும் முப்பது டிகிரி உயர்த்த 90 டிகிரி அமைந்து விடும். இதிலும் முப்பது விநாடிகள் இருக்கவேண்டும்.

இப்போது கால்களைத் தலைக்கு மேலே உயர்த்த வேண்டும். இந்த நிலையில் இடுப்பு தானாகவே உயர்ந்து விடும். இடுப்பைக்

சர்வாங்காசனம்



கைகளால் தாங்கிக் கொண்டு மெல்ல உயர்த்த வேண்டும். தாடை, கழுத்தில் தொண்டைக் குழியை ஒட்டிய மாதிரி பொருந்த வேண்டும். மார்புக் கூட்டுக்குப் பின்புறம் கைகளால் தாங்கிக் கொள்ளவும். கால்கள், இடுப்பு, தோள்பட்டை எல்லாம் ஒரே கோட்டில் வருமாறு இருப்பது தான் இறுதிநிலை.

சர்வாங்காசன நிலையில் மூன்று நிமிடங்கள் முதல் பத்து நிமிடங்கள் வரை இருக்கலாம். படிப்படியாக நேரத்தை அதிகரிக்க வேண்டும். ஆசன நிலையிலிருந்து இறங்கும்போது படிப்படியாக முன்போலவே அதே அளவு நிறுத்திப் பழைய நிலைக்கு வரவேண்டும். சவாஸன நிலையில் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்.

முக்கிய குறிப்பு:

இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் சர்வாங்காசனம் செய்யக் கூடாது. 90 டிகிரி அளவு கால்களை உயர்த்தும் போதே சிலருக்குக் கண்களில் சிவப்பு ஏறிவிடும். அவர்கள் இறுதி நிலைக்குப் போகவேண்டாம். முதுகெலும்புக் கோளாறு உடையவர்கள் கண்நோய் உடையவர்கள், இந்த ஆசனத்தில் ஈடுபட வேண்டாம்.

கட்டுரை அமைப்பு: சுப்ர பாலன்

படத்தில்: பி. ரமேஷ்

புகைப்படம்: தாமு

பிள்ளைமனம் பித்து

நாடகங்களில் கதை எங்கே இருக்கிறது என்று, பூதக் கண்ணாடி வைத்துத் தேட வேண்டும் என்று சொல்லுவோமே? 'பிள்ளை மனம் பித்து' இதற்கு விதிவிலக்கு. கதை 'செமர்த்தி'யாக இருக்கிறது.

மூத்த பிள்ளை சீனு மீது பாசத்தைப் பொழியும் தாய் ஜகதா. அவனுக்குத் திருமணம் செய்த பிறகு எங்கே அவன் மாறிவிட்டானோ என்று கண்டுபிடிக்க, கணவர் நடராஜய்யருடன் ஒரு குயுக்தி செய்ய; வெருண்டு போன நாட்டுப்பெண் பிறந்த வீட்டுக்குப் போக; இவர்கள் இருவரையும் சேர்த்து வைக்க வேண்டுமே? இடையில், இரண்டு சம்பந்திகளும் வீசிக் கொள்ளும் சவால் காரணமாக, தம்பதி சேர்வது தடைப்பட்டுப் போனாலும், கடைசியில் தங்கை காயத்ரியின் திருமணத்தில் பிரச்சினை சுமுகமாகத் தீர்த்து வைக்கப் படுகிறது...

வெகு இயல்பான நிகழ்ச்சிகள் (சீனுவுக்குத் தான் தான் எண்ணெய் தேய்த்து விட வேண்டும் என்று ஜகதா பிடிக்கும் பிடிவாதம் தவிர); அதற்கேற்ற இயற்கையான வசனங்கள். ஒருசிலர் உதிரியாக வந்தாலும், அவர்கள் கதைக்கு எத்தனை அவசியம் என்பதை நிரூபித்திருக்கிறார்கள். (உதாரணம்: ஒலி ராவ் ஆக வரும் சந்துரு — எத்தனை சுபாவமான நடிப்பு!)

நடிகர்களே சுமையைத் தாங்கி நாடகத்தை முழுக்க எடுத்துச் செல்லும் தமிழ் நாடக மேடையில், வடக்கத்தி நாடகங்களைப் போல் இயக்குநருக்கும் ஒரு முக்கிய பங்கு உண்டு என்பதை கே. எஸ். நாகராஜன் போன்ற அநுபவஸ்தர்கள் மட்டுமே உணர்த்தி வருகிறார்கள். ஓர் இடத்திலாவது அதிகப்படியான நடிப்பு இருக்க வேண்டுமே? ஊஹூம்.

'[illegible]டியார்' கதை–வசனம் எழுதியிருப்பதுடன், நடராஜய்யராகவும் வருகிறார். முன்னதில் மௌலியையும், பின்னதில் பூர்ணத்தையும் சாயலாகக் காண்பிக்கிறார். சுந்தர், ஷோபா, ஜெயந்தி என்று எல்லோருமே அலட்டிக் கொள்ளாத நடிப்பு.

ஒரு நடுத்தரக் குடும்பத்தைக் கண்முன் நிறுத்தி விடுவதில் மறுபடியும் வென்றிருக்கிறது கலா நிலையம்.

-சாருகேசி



மக்கள் வேதனை



○ மெடிகல் ஷாப் - ''இன்னொரு ஐடியா!''

''சில்லறை இல்லாட்டி கீழே இறங்கிடுங்க.''

''ஸாரி; நோ சேஞ்ச்!''

''எல்லோருமே ரூபா நோட்டாகவே நீட்டினா எப்படி சார்?''

''சில்லறை இல்லீங்களே!''

''மீதியை அப்புறம் வாங்கிக்குவேன்.''

இந்த ரீதியிலான வார்த்தைகளை அன்றாடம் கேட்டுக் கேட்டு நம் காதுகள் புளித்துப் போய் விட்டன. இந்தச்சில்லறைப் பிரச்சினை உங்களை எப்படிப் பாதித்துள்ளது?

இது சில்லறைப் பிரச்சினை அல்ல!

அதை எப்படிச் சமாளிக்கிறீர்கள்? என்று பல தரப்பினரையும் கேட்ட போது....

குடும்பத் தலைவி திருமதி மஹாலக்ஷ்மி ரகுராமன் (நங்கநல்லூர்) ''இந்தப் பிரச்சினையினால் நேரடியாய்ப் பாதிக்கப்பட்டிருப்பது நடுத்தர வர்க்கத்தினர்தான். கடைக்குப் போய் ஏதாவது வாங்கினால் — பஸ்ஸில் போனால் — சில்லறைப் பிரச்சினை! மாதத்தில் ஐந்தாறு ரூபாய் இதனால் நஷ்டம் நமக்கு. பஸ்ஸில் சில்லறை இல்லாமல், கண்டக்டரிடம் வாங்கிக் கட்டிக் கொள்வதைத் தவிர்க்கவே, நான் சீசன் டிக்கட் வாங்கிக்கொண்டு விட்டேன். கடைகளில் பேரம் பேசி, சில்லறைப் பிரச்சினையைச் சில சமயம் சமாளிப்பதுண்டு. மளிகைச் சாமான்களை ஒரேகடையில் வாங்கலாம். இதனால் இந்தத் தடவை கொடுக்க வேண்டிய அல்லது, பெறவேண்டிய சில்லறையை அடுத்த தடவையில் அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்ளலாம்.

அசோக் நகரில் மளிகைக் கடை வைத்திருக்கும் அஜ்மல்கான் ''எங்களுக்கு வேண்டிய சில்லறையில், ஒரு பகுதியை அக்கம்பக்கத்திலுள்ள பெட்டிக்கடைகளிலிருந்து வாங்கிக் கொள்கிறோம். எங்கள் கடைக்கு வழக்கமாக முட்டை சப்ளை செய்பவர், சில்லறை கொடுப்பதுண்டு. வாடிக்கையாளர்களானால், பத்து பைசா, இருபது பைசாவெல்லாம் விட்டு விடுவோம். அப்புறம் இருக்கவே இருக்கிறது மிட்டாய், சாக்லெட், பிஸ்கட். சில்லறைக்குப் பதிலாய்த் தந்து, சமாளிக்கிறோம். அரசாங்கம் ஏதாவது செய்து, பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

கே.கே. நகரில் உள்ள பெட்ரோல் பங்கில் கேட்டபோது சில்லறைப் பிரச்சினை, பெட்ரோல் விற்பனையை அவ்வளவாகப் பாதித்திருக்கிறதென்று சொல்ல முடியாது. ஏனெனில், சரியாய் ஒரு லிட்டர் பெட்ரோல் போட்டால் தானே பிரச்சினை வரும்? எனவே பெட்ரோல், ஆயில், இரண்டின் அளவையும் அதிகமாக்கி, சரியாகப் பத்து ரூபாயாகவோ, பதினைந்து ரூபாயாகவோ, வரும்படியாகப் பார்த்துக் கொள்வோம்.

அஞ்சுகம் நகரில் பெட்டிக்கடை வைத்திருக்கும் ஜானகிராமன்: பெட்டிக் கடைகளைப் பொறுத்தவரை சில்லறைப் பிரச்சினை பாதிப்பு இருப்பதாய்ச் சொல்ல முடியாது. இங்கே நிறைய சில்லறை சேரும். நான் பக்கத்திலுள்ள பெரிய கடைகளுக்கு, சில்லறை கொடுப்பதுண்டு.

○ மளிகைக்கடை - ''அரசு பிரச்சினையைச் சமாளிக்காத போது...''



ஜாபர்கான்பேட்டை 'சாரதி மெடிகல்ஸ்' சிவசங்கரனைச் சந்தித்த போது: இந்தப் பிரச்சினை எங்களை ரொம்பத்தான் பாதித்திருக்கிறது. மருந்து, மாத்திரைகளின் விலையைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். 34 பைசா, 63 பைசா, 27 பைசா என்றெல்லாம் வரும். டாக்டர்கள் 10, 15 என்று மாத்திரைகள் எழுதித் தந்திருப்பார்கள். இந்த எண்ணிக்கையில் அல்லாமல் மாத்திரைகளைக் குறைத்து ரவுண்டுஅமௌண்டாய் வரும்படி தருவோம். பாக்கியை அப்புறம் வாங்கிக் கொள்ளச் சொல்வோம்.



○ பெட்டிக்கடை - ''பரோபகாரிகள்.''

இன்னொரு ஐடியாவையும் டிரை பண்ணுவதுண்டு. உதாரணமாய், நாலு முப்பது பில்லுக்கு 5 ரூபாய் தரும்போது இன்னும் முப்பது பைசா கொடுங்கள்; ஒரு ரூபாயாய் தருகிறேன்' என்றால் 'சில்லறை இல்லையே' என்று பதில் வரும். உடனே நான், 'அடுத்த தடவை வரும்போது 'சேஞ்ச்' வாங்கிக்கங்க' என்பேன். அப்போது பார்க்கணுமே! பாக்கெட், பர்ஸ், எல்லாம் தேடி, சில்லறையை எடுத்துத் தருவார்கள்.

தேவி, தேவி பாரடைஸ் தியேட்டர்களின் தலைமை கேஷியர் ஜெயபாலன்: தமிழக அரசு டிக்கெட் விலையை அதிகரித்தது, சௌகரியமாய்ப் போய் விட்டது. சமயத்தில், இரண்டு பேருக்கு எட்டணா வீதம் தர வேண்டியிருந்தால், இருவருக்குமாய்ச்சேர்த்து ஒரு ரூபாய் தந்து, அவர்களாகவே பிரித்துக்



○ ''மாதம் ஐந்நூறு ரூபாய் நஷ்டம்'' மகாலக்ஷ்மி ரகுராமன்.


கொள்ளச் சொல்லிக் கேட்டுக் கொள்கிறோம். எல்லா தியேட்டர்களிலும் எடை மெஷின் இருக்கும். அதிலே பத்துபைசாக்கள் சேரும். இது பிரச்சினையை ஓரளவுக்குச் சமாளிக்க உதவும். தியேட்டர் ஸ்டால்களிலும் சில்லறை வரும்.

கே.கே. நகரில் ஒரு ஓட்டல்காரரிடம் பேசினோம்: (பேரெல்லாம் வேணாம் சார்!). அவர் சொன்ன கருத்து: மற்ற இடங்கள் போல, ஹோட்டல்கள் இல்லை. மற்ற இடங்களில் ஏதாவது வாங்கப் போய், சில்லறை இல்லையெனில், பொருளைத் திருப்பிக் கொடுத்து விட்டுப் பிறகு வாங்கிக் கொள்ளலாம். ஆனால் இங்கே? இதற்காக, ஆங்காங்கே 'சில்லறை இருக்கிறதா?' '100 ரூபாய், 50 ரூபாய்வைத்திருப்பவர்கள் கவுண்டரில் சில்லறை இருக்கிறதா எனக்கேட்டுக்கொண்டு சாப்பிடவும்'. 'காப்பி மட்டும் சாப்பிடுபவர்கள் சரியான சில்லறை தரவும்' என்றெல்லாம் போர்டு எழுதிவைத்திருக்கிறோம். சில ஓட்டல்களில் கோயில் நிர்வாகத்தினரிடம் சொல்லி, உண்டியலில் சேரும் சில்லறைக்கு ஏற்பாடு செய்வதுண்டு. பீடா, பாக்குப்பொட்டலம் இவை தந்து சமாளிப்பதுண்டு.

அரசு தரப்பில் என்ன சொல்கிறார்கள்? 'ரிசர்வ் பாங்க் அறிக்கை கூறுகிறது: நாட்டிலுள்ள மூன்று நாணயச் சாலைகளிலுமாக, 1983—84—ஆம் ஆண்டில் தயாரித்து, வெளியிடப்பட்ட பல்வேறு மதிப்புள்ள நாணயங்களின் மொத்த அளவு, முந்தைய ஆண்டை விட சுமார் அறுபது சதவிதம் அதிகமாகும்.

பேட்டி கட்டுரை: எஸ். சந்திரமௌலி
படங்கள்: சேகர்

○ பெட்ரோல் பங்க் — ''...நாமேதான் விதம்விதமான வழிகளில் சமாளிக்க வேண்டும்!''



விவாத மேஜை



"அருமையான இசை எவ்வளவு இனிமையாக இருக்கிறது?'' என்று வியந்தார் ராஜகோபாலன். டி. வி. திரையில் ஸுபின் மேத்தா தோன்றினார். அவரது இசை உச்ச கட்டத்துக்குச் செல்ல, தமது கையை வேக வேகமாக வடிவங்கள் வரைவது போலக் காற்றில் அசைத்துக் கொண்டிருந்தார்.

ராஜகோபாலனின் மொத்தக் குடும்பமும் டி. வி.க்கு முன்னால் இருந்தது. வீட்டுக் கூடத்திலேயே உட்கார்ந்து கொண்டு, நியூயார்க் பில்ஹார்மோனிக் ஆர்க்கெஸ்ட்ராவைக் கேட்கிற வாய்ப்பு சாமான்யமாகக் கிடைக்கக் கூடியதா என்ன?

கடைசியில் நிகழ்ச்சி முடிந்து டி. வி. திரையிலிருந்து மறைந்தார் ஸுபின்மேத்தா ஒரு பெருமூச்சுடன் டி. வி.யை அணைத்தார்

மாலினி சேஷாத்ரி

ராஜகோபாலன். அஞ்சலி சாப்பாட்டு மேஜையைக் கவனிக்க விரைந்தாள்.

''ஸுபின் மேத்தா போன்றவர்களை நினைத்து இந்தியா உண்மையிலேயே பெருமைப்பட வேண்டும்'' என்றார் ராஜகோபாலன். ''அதிலும் பியானோ வாசித்த அந்தப் பையன்... காலின் மார்ட்டின்... அவனையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்...''

''நீங்கள்தான் எப்போதுமே இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் போய்த்தங்கி விடும் இந்தியர்களைக் குறை கூறுவீர்களே! இந்த இரண்டு பேரை மட்டும் ஏன் புகழ்ந்து தள்ள வேண்டும்?'' என்றான் விவேக்.

''இந்த இரண்டு பேரும் மேற்கத்திய சாஸ்திரிய இசையில் அல்லவா ஈடுபட்டிருக்கிறார்கள்? அதற்கு உரிய இடம் மேற்கத்திய நாடுகள்தானே?'' என்றார் ராஜகோபாலன்.

ரஞ்சிதா குறுக்கிட்டாள்: ''விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் கூடத்தான் மேற்கு ஏற்றது. ஆகவே நமது இளம் விஞ்ஞானிகள், வெளி நாடுகளுக்கு மேற்படிப்புக்கும், ஆராய்ச்சிக்கும், ஆசிரியப் பணிக்கும் சென்றால், அதில் என்ன தவறு?''

ராஜகோபாலனுக்கு இதில் எல்லாம் திடமான ஓர் அபிப்பிராயம் உண்டு. ''அவர்கள் எல்லாம் தேசப்பற்றே இல்லாதவர்கள்'' என்று முழங்கினார். ''நமது நாடு இந்த மாணவர்களின் பயிற்சிக்கு இங்கே ஏராளமாய்ச் செலவிடுகிறது. கடைசியில் தாய் நாட்டை விட்டுவிட்டுப் போய் விடுகிறார்கள். இந்த ப்ரெயின் ட்ரெயின் காரணமாகத்தான் நம் நாடு இன்னும் பின் தங்கியதாகவே இருக்கிறது!''

அஞ்சலியின் கருத்து வேறு மாதிரி இருந்தது. ''நீங்கள் எப்போது பார்த்தாலும் ப்ரெயின் ட்ரெயினைப் பற்றியே பேசுங்கள்'' என்றாள் காட்டமாக. ''பட்டுவின் பிள்ளை முரளிக்கு என்ன ஆயிற்று? எக்கச்சக்கமான மார்க் வாங்கி எம். எஸ்ஸி. பாஸ் செய்தான். அவனுக்கு ஏற்ற நல்ல வேலை கிடைத்ததா? வேறு வழியின்றி பாங்க் உத்தியோகத்தில் அவன் சேர இருந்த சமயத்தில், ஓர் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சிக்கு ஸ்காலர்ஷிப் அனுப்பிவைத்தது. அவன் மீது எப்படிக் குற்றம் சாட்ட முடியும்?''

"ஆமாம் அப்பா'' என்றாள் ரஞ்சிதா. இங்கிருந்து அமெரிக்கா போகிறவர்கள் எல்லாம் அமெரிக்க மோகம் கொண்டு ஓடுகிறவர்கள் அல்ல. வளமான எதிர்காலத்திற்காகத்தான் அவர்கள் அங்கே போகிறார்கள். தங்கள் எதிர்காலம் மட்டு

அமெரிக்கா அழைக்கிறது!



மின்றி விஞ்ஞான உலகின் எதிர்காலநலனுக்காகவும் போகிறார்கள்''

''என்ன அபத்தமாகப் பேசுகிறாய் நீ'' என்றார் ராஜகோபாலன். ''ஸி. வி. ராமன் இந்தியாவில் பணியாற்றவில்லையா என்ன? அவருக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லையா?''

''அவர் தமது ஆராய்ச்சிக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்குள் பட்டபாடு நமக்குத் தெரியாதா? மேலும் அவர் அலாதி மனிதர் அப்பா'' என்றான் விவேக். ''எவ்வளவோ வருஷங்களுக்கு முன் நடந்தது அது. இன்று அது மாதிரி எதுவும் நடக்கும் என்று எதிர்பார்க்க முடியாது...''

''ஏன்? ஏன் முடியாது? காரணம் சொல்லு?'' என்று அதிர்ந்தார் ராஜகோபாலன். ''இங்கே இருக்கிற எல்லாப்புத்திசாலிப் பையன்களும் வெளியேறி அமெரிக்காவில் குடியேறத் துடிக்கிறார்கள். வெறும் சுயநலம்''

''அதென்னவோ இப்போதெல்லாம் கல்யாணத்திற்கு இருக்கும் பெண்ணுக்கு, அமெரிக்காவில் வசிக்கும் இந்திய இளைஞன் கிடைப்பானா என்று தான் முதலில் பார்க்கிறார்கள்'' என்றாள் அஞ்சலி.

''ஆமாம் அம்மா'' என்று ஆமோதித்தாள் ரஞ்சிதா. ''என் தோழி ராதா கூட அமெரிக்காவில் இருக்கும் இந்தியப் பையனைத் தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று பிடிவாதமாய் இருக்கிறாள்!''

''பாவம்'' என்றாள் அஞ்சலி அனுதாபத்துடன். நாள் முழுக்க சமையல் செய்து, தோய்த்து, கழுவி, துடைத்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான் என்பது அவளுக்குத் தெரியுமோ? இங்கே நமக்கு வேலைக்குஆட்கள் கிடைக்கிறார்கள்.''

''என் நண்பர்களைப் பொறுத்தவரை வேறு விதமான போட்டி'' என்றான் விவேக். ''ஏதாவது ஒரு அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் எப்படியாவது சேர்ந்து விட வேண்டும்! எந்தப் பல்கலைக் கழகம், என்ன பாடத் திட்டம் என்பதெல்லாம் முக்கியமே இல்லை!''

''தெரியும், தெரியும்'' என்றார் ராஜகோபாலன், தலையைப் பலமாக ஆட்டிக் கொண்டே. ''அன்றைக்கு என் நண்பர் சங்கரன் ரொம்பப் பெருமையுடன் சொன்னார் – அவர் பிள்ளை எல்லாத் தடங்கல்களையும் சமாளித்து ஒரு வழியாக இப்போது அமெரிக்கா போகிறானாம்.''



''என்ன தடங்கல்?'' என்றாள் அஞ்சலி.

''விசா தொல்லைதான், வேறு என்ன?''

''ரொம்பக் கஷ்டம் என்கிறார்களே?'' என்றாள் ரஞ்சிதா. ''ஆனால் எல்லோருமே பி. டி. உஷா மாதிரி ஹர்டில்ஸ் சாம்பியன்களாகிக் கொண்டும் வருகிறார்களே, இந்த விஷயத்தில்! எல்லோரும் எப்படியோ சமாளித்து விசா வாங்கிக் கொண்டு வெளிநாடு போய் விடுகிறார்கள்.''

ராஜகோபாலன் விடவில்லை. ''அவர்கள் நம் கலாசாரத்தையே இழந்துவிடுவார்கள்! தங்களுடைய மொழியையே மறந்து விடுவார்கள்! போன மாசம் என் நண்பரின் பிள்ளை சுரேஷ் அமெரிக்காவிலிருந்து வந்தான். சுரேஷின் எட்டு வயதுப் பெண்ணுக்குத் தமிழில் ஒரு வார்த்தை தெரியாது. பாட்டியும் பேத்தியும் ஒரு வார்த்தை கூடப் பேசிக் கொள்ளவில்லை. முடியவில்லை. இந்த மாதிரி போனால் சொந்த பந்தங்களை விட்டுப் போய் விடும்!''

''அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்று வெடித்தாள் அஞ்சலி. ''சிகாகோவிலிருக்கிற கம்ப்யூட்டர் சயன்டிஸ்ட்டைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாளே, மாயா? சமீபத்தில் அவள் இங்கே வந்தாள். இத்தனை உறவினர்கள் இருக்கிறார்கள் தனக்கு என்று, அமெரிக்கா போனப்புறம் தான் அவளுக்குத் தெரிந்ததாம். வாராவாரம் யாராவது ஒருவர், ஏதாவது உறவைச் சொல்லிக் கொண்டு அவர்கள் வீட்டில் தங்கிவிட்டுப் போகிறார்களாம்!''

விவேக்கும் ரஞ்சிதாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ''அமெரிக்காவில் நமக்கு யாராவும் உறவினர் இருக்கிறார்களோ?'' என்று கேட்டார்கள்.

சாவிலும் சிரிப்பு

மரண தண்டனை பெற்ற அமெரிக்க கைதி சார்லஸ் வுட் மின்சார நாற்காலியோடு பிணைக்கப்பட்ட போது கூறினார்: ''நண்பர்களே இப்போது மின்சாரம் 'வுட்'டை (மரத்தை) தாக்கும் அதிசயத்தை நீங்கள் காணப் போகிறீர்கள்!''

ஆதாரம்: மிர்ரர்.
–ராஜி ஜெயராம்




வானவில்லின்
கோலம் காட்டி
வானம் மினுக்கலாம்.
எனினும்.
எல்லோரது
கவனமும் உங்கள்
பக்கம்தான்
திரும்பும்.
இந்த தீபாவளிக்கு
ராசி
பட்டுப் புடவை
வாங்குங்கள்
உற்சாகம் ஊட்டும் கலர்கள்,
கண்கவர் டிசைன்கள், நேர்த்தியான நெசவு.
இவை எல்லாவற்றையும் ஒன்று
சேர்த்துத் தருவது ராசி.
ராசி உங்கள் தீபாவளிக்கு அழகு
சேர்க்கிறது.
ராதா சில்க்ஸ்
தன் பில்டிங், அண்ணாசாலை
சென்னை-600 002
EPR 108 84

நீங்கள் கேட்டவை

தராசு



○ த. சிவாஜி சதாசிவம், கவுந்தப்பாடி.

? என் தாய்க்குச் சமமான ஒரு அரிசியின் மனத்தைப் புண்படுத்தி விட்டோமே என்று வருத்தப்படுகிறேன். பிராயச்சித்தமாக என்ன செய்வது?

! தொடர்ந்து நாலாவது வாரமாக இந்தக் கேள்வியை எழுதி அனுப்புகிறீர்கள். இதிலேயே சற்று மனச்சுமை குறைந்திருக்குமே. நேரடியாக அவரிடம் போங்கள். மன்னிப்புக் கோருங்கள். மறுபடி தவறு நேராமல் கவனமாய் இருங்கள். மனம் திருந்தினால் முழு ஆறுதல் கிட்டும்.

○ ஆர். சிவராஜ், லால்குடி.

? ஆஸ்திரேலிய — இந்திய டெஸ்ட் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் காமிராக் கோணங்களைச் சரியாக எடுக்கத் தெரியாமல் டி.வி.க்காரர்கள் தடுமாறியதைக் கவனித்தீர்களா?



○ ஆத்திரம்

○ புல்லரிப்பு

○ மெய்சிலிர்ப்பு

○ ஐடியா தந்தார்

! கவனித்தேன், கவனித்தேன். பந்தை அடிப்பதைக் காட்டினால் காட்ச் பிடிப்பதைக் காட்ட முடியவில்லை. பந்தைத் தொடர்ந்து போகக் காமிராவால் முடியவில்லை. ரீ பிளேயில் ஸ்லோ மோஷனில் இந்தப் பற்றாக் குறை இன்னும் பரிதாபமாகத் தெரிந்தது. போகப் போக அபிவிருத்தி ஏற்படும் என நம்புவோம்.

○ குமரி ஜெம், சென்னை—5.

? கருணாநிதி இன்னும் ஏன் இ. காங்கிரஸுடன் உறவு வைக்கத் துடிக்கிறார்?

! அவர் இ.காங்கிரஸுடன் உறவு வைக்க வேண்டும் என்று சில பத்திரிகைக்காரர்கள்தான் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவரல்ல.

○ எல். கணேசன், கொடுமுடி.

? அப்பனுக்குச் சாராயம், அம்மாவுக்கு ரேஷன் டீ, பட்டதாரிக்குப் பொழுது போக்குப் பணம், குழந்தைகளுக்குச் சத்துணவு இன்னும் என்ன வேண்டும்?

! அப்பனுக்கு சுயமரியாதை, தன்மானம், அம்மாவுக்குத் தட்டுப்பாடின்றி நியாய விலையில் உணவுப் பொருள்கள்; பட்டதாரிக்கு வேலை வாய்ப்பு; குழந்தைகளுக்குத் தரமான கல்வி — இவை வேண்டும்.

○ டி. பாரதி, சென்னை—53.

? 'கல்கி'யில் 'ல்'—ல் உள்ள தாமரைக்கு ஐடியா கொடுத்தது யார்?

! மணியன்.

○ தேனி தெய்வநாயகம், கள்ளிடைக்குறிச்சி.

? மாபெரும் ஜனநாயக நாட்டின் பார்லிமெண்ட் தேர்தல் தேதிகள் ஜோசியர்களால்தான் நிச்சயிக்கப்படுகின்றனவா?

! அவர்களாவது தேர்தலை ஒத்திப் போடாமல் நடத்தப் பச்சைக் கொடி காட்டினால் சரி.

○ மு. மதிவாணன் அரூர்.

? ஒரே சமயத்தில் ஒரு கைதியின் டைரியும் ஒரு நடிகையின் டைரியும் உங்களுக்குக் கிடைக்குமானால் முதலில் எதைப் படிப்பீர்கள்?

! ஒரே அளவினதான டைரிகள் கிடைத்து, படிக்க அனுமதியும் கிடைக்குமானால் உம்...? தராசின் தட்டுக்களில் இருடைரிகளையும் வைத்துப் பார்க்கிறேன்..... அடேடே கைதியின் டைரியல்லவா தாழ்கிறது...! ஓ! அதில் உண்மைகளின் கனம் அதிகம்! மற்றதில் உண்மைகள் சிலவேனும் மறைக்கப்பட்டிருக்கும் போலும்! ஆக கைதியின் டயரியைத் தானே முதலில் படிக்க வேண்டும்!

25 அமைச்சர்கள் பெயர்களும் தெரியுமா?

○ எஸ். பாலாஜி, காஞ்சிபுரம்.

? இந்திய ஜனநாயகம் நாளுக்கு நாள் மதிப் பிழந்து வர என்ன காரணம்?

! சான் சாணுகச் சறுக்கினாலும் ஆந்திரா வில் என். டி. ஆர். மறுபடி பதவிக்கு வந்தது போன்ற சம்பவங்கள் முழம் ஏறியதாக முடிந்து ஜனநாயகத்தின் மதிப்பைக் காப்பாற்றி வருகின்றனவே!

○ எம். ஏ. பாஷா, சின்னசேலம்.

? தமிழக அமைச்சர்கள் அத்தனை பேரின் பெயர்களும் உமக்குச் சரியாகத் தெரியுமா? (25 பேர்.)

! இதென்னடா வம்பு, சற்று இருங்கள்... முதல்வர் தெரியும்; நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் சரி, அப்புறம் பண் ருட்டி, அரங்கநாயகம், பொன்னையன், கே. ஏ. கே., காளிமுத்து, திருநாவுக்கரசு கோமதி... ஹண்டே, வீரப்பன், ராகவா நந்தம், எஸ். டி. எஸ்... ஓ அவர்தான் கழன்று கொண்டு விட்டாரே... வேறு யார்?... புதுசா யாரோ வந்தார்களே, உம்... ஆ! சௌந்தர்ராஜன். அப்புறம், அப்புறம்...ராதா...குழந்தைவேலுவைச் சொல்லேனு?... அட போய்யா எம்.ஜி. ஆருக்கே எல்லார் பேரையும் பட்டியல் போட முடியுமோ என்னமோ? என் பிராணனை வாங்குகிறீரே!

○ எஸ். எஸ். ரவீந்திரமுரளி, சிவன்மலை.

? தங்களைச் சிக்கலில் மாட்டிவிட்ட ஒரு நிகழ்ச்சி பற்றி?

! ஒரு நிகழ்ச்சியாவது... அதுதான் எழுத்தாளர்களும் நிருபர்களும், ஓவியர் களும், புகைப்படக்காரர்களும் கால தாமதம் செய்து செய்து தினம்தினம் என்னைச் சிக்கலில் மாட்டி வைத்துக் கொண்டே இருக்கிறார்களே!

○ பொன். ராஜேந்திரன், முருங்கப்பேட்டை.

? விமானத்தில் தங்கம் கடத்துவதற்கும் விமா னத்தையே கடத்துவதற்கும் என்ன வித்தி யாசம்?

! ஜக்மோகனும் ராம்லாலும் நடந்து கொண்ட விதத்துக்கு இடையில் உள்ள வித்தியாசம்.

கிளார்க்: சார், நாளைக்குக் காலை யிலே கொஞ்சம் லேட்டா வரவேண்டி யிருக்கும். பெர்மிஷன் வேணும்.

மானேஜர்: சரி, எத்தனை நேரம்?

கிளார்க்: 5 மணி நேரம்

—சிவசக்தி.



○ எஸ். ரவீந்திரன், கடலூர்.

? கங்வா இந்தி படத்தில் ரஜினிகாந்த் நடிப்பு எப்படி?

! மம்பட்டியான் பார்த்தபோது தியாக ராஜன் தான் இந்த ரோலுக்குப் பொருத் தம் என்று பட்டது. ஆனால் கங்வா பார்த்ததும் ரஜினி ஸ்டைல் முன்னைத் தூக்கி அடித்து விட்டதைப் புரிந்து கொள்ள முடிந்தது. என்ன அசுர வேகச் சண்டை! அசத்தி விட்டார் மனுஷன்!

○ கு. கணேசன், சென்னை–15.

? சமீபத்தில் தங்களைப் புல்லரிக்கச் செய்த நிகழ்ச்சி?

ஸ்ரீரங்கம் ராஜகோபுரத் திருப்பணிக்கு நன்கொடை வசூலிக்க வேண்டி உண்டி யல் ஏந்தி சகோதரர்களான நாகேஷும் தேவராஜியும் வயது (11, 13) மதுராந்த கத்திலிருந்து புறப்பட்டுக் கால்நடையாக ஸ்ரீரங்கம் போய்ச் சேர்ந்தார்கள். 220 கிலோ மீட்டர் நடந்து உண்டியல்களை ஜீயர் சுவாமிகளிடம் சேர்ப்பித்து வணங்கி ஆசி பெற்றார்கள். இந்தக் குழந்தைகளை நினைக்கும் போதும் இதைவிட அதிக மாக இவர்களைப் பெற்றெடுத்த பாக்கிய சாலி துரைசாமியை எண்ணும்போதும் புல்லரிக்கத்தான் செய்கிறது.

○ இரா. முரளீதரன், காங்கேயம்.

? வத்தக் குழம்பு சாப்பிட்டும் பழக்கம் உண்டா?

! வற்றிய குழம்பாக மட்டுமில்லாமல் அதில் நிஜமாகவே வற்றலும் போடப் பட்டிருக்க வேண்டும். சிறு வெங்காய மும் சேர வேண்டும். கொட்டைப்பாக்கு அளவு வெல்லம் சேர்த்திருக்க வேண்டும். கமகமக்கும் இந்தக் குழம்பைச் சாதத் துடன் பிசைந்து சாப்பிடுவதை விடத் தளர்ந்த தயிர் சாதத்துக்குத் தொட்டுக் கொண்டால்... ஐயோ! ஐயோ! அந்த ருசிக்கு ஈடு இணை ஏது?

○ நட. சதன் சந்தர், மணப்பாறை.

? தலைப்பு வைத்தபின் எழுதப்படும் கதை. கதை எழுதியபின் வைக்கப்படும் தலைப்பு இந்த இரு தலைப்புக்களில் கதைக்குப் பொருத்தமானது எது?

! தலைப்பு வைத்தபின் கதை எழுதி வரும் போது எப்படியோ தலைப்பைக்கொண்டு வந்து நுழைத்து விட்டோம் என்ற சாதனைத் திருப்தி ஓரிடத்தில் ஏற்படும். கதை எழுதிய பின் தலைப்பு சூட்டினால் இந்தத் திருப்தி இராது. ஆனால் இரண்டுமே கதைக்குப் பொருத்தமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. வாசகரைக் கவர்வதே முக்கியமாகி விட்டது இன்று!

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:


எஸ். கணேசன்,

பள்ளக்காட்டுப்புதூர்,

கொடுமுடி–638 151.

(பெரியார் மாவட்டம்).


ஆஹா! இதுவரை எந்த படத்திலேயும் வராத புதுமை பார்த்தீங்களா! கோபாலன் துணியை கோபிஸ்திரீகள் எடுத்துகிட்டு மரத்துமேலே உட்கார்ந்திருக்காங்க பாருங்க எல்லோருமே ராகமாலிகா புடவை உடுத்திண்டிருக்கிறதனாலே ராதை யாருன்னு தெரியாம கிருஷ்ணர் முழிக்கிறார். அதுதான் புதிர் புதுமை.
PRODUCER
DIRECTOR



குடியிருப்பவர்: ''விடாம மழை பெய்யறதுனாலே வீடெல்லாம் ஏகமா ஒழுகிக் குடியிருக்கவே முடியலே. எத்தனை நாளைக்குங்க நானும் பொறுத்துக்கறது...?''

வீட்டுக்காரர்: ''எனக்குத் தெரியலீங்க! வானிலை ஆராய்ச்சியாளரைத் தான் கேட்கணும்''

ஆர். எஸ். சுப்பிரமணியன்.



டெலிவிஷனில் இரண்டாவது சானல் (ரேடியோவில் விவிதபாரதி போல) டெல்லியில் துவக்கப்பட்டுள்ளது. விரைவில் சென்னை பம்பாய், கல்கத்தா நகரங்களிலும் துவக்கப்பட இருக்கிறது. ஆனால் டெலிவிஷனில் இரண்டாவது சானலில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டுமானால் கூடுதலாய் ஒரு ஆண்டெனா வைக்கவேண்டுமாம்! இதனால் டெல்லியில் ஆண்டெனாவின் விலை ரொம்ப அதிகமாகி விட்டது என்கிறது பத்திரிகைச் செய்தி. இதுபற்றிச் சரியான தகவல் அறிய, ஒளிபரப்பு பிரிவின் துணை இயக்குனர் திரு. டி. எஸ். வாசன் அவர்களைச் சந்தித்த போது அவர் சொன்னார்:

''தற்போது ஒளிபரப்பு பாண்டு 1: சானல் 4—ல் நடக்கிறது. இதன் ஃப்ரீக்வென்ஸி ஒளி – 62.25 மெ. ஹெ. ஒலி – 67.75 மெ. ஹெ. இந்த ஒளிபரப்பை நாம், இப்போது பயன்படுத்துகிற ஆண்டெனா உதவியால் பார்க்கிறோம். ஆனால் இப்போது புதிதாய் வந்துள்ளது பாண்டு 3; சானல் 7 (டெல்லியில்) இதன் ஃப்ரீக்வென்ஸி முன் சொன்ன சானலை விட அதிகம். அதனால் இந்த சானல் நிகழ்ச்சிகளைத் தற்போதுள்ள ஆண்டெனா மூலம் பார்க்க முடியாது. எனவே இரண்டாவது ஆண்டெனா அவசியமாகிறது.

''இன்னொரு விஷயம். இந்தப் புதுச் சானல் நிகழ்ச்சிகள் தெரிகிற பரப்பு ஒளிபரப்புகிற டிரான்ஸ்மிட்டரின் சக்திக்கேற்பவே இருக்கும். 100 வாட் சக்தியுடைய டிரான்ஸ்மிட்டரானால் சுமார் 25 கி. மீ. வட்டாரத்திலும். 1 கி. வா. சக்தியுடையதானால் சுமார் 40 கி. மீ. வட்டாரத்திலும் தெரியும்.

''ஆனாலும் அவசரப்பட்டு இரண்டாவது ஆண்டெனா வாங்காதீர்கள். சுமார் 10 கி. மீ. வட்டாரத்தில் இருப்பவர்கள், இரண்டாவது ஆண்டெனா இல்லாமலேயே நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். ஆனால், நிலைய, ஒளிபரப்பு டவருக்கும் வீட்டிற்கும் இடையில் உயரமான கட்டிடங்கள் இருக்கக் கூடாது. அதேபோல பூஸ்ட்டர் இருந்தாலும் இரண்டாவது ஆண்டெனா அவசியமில்லை.''

சரி இரண்டாவது ஆண்டெனா எந்த விதத்தில் வித்தியாசமாய் இருக்கும்?

தற்போது பயன்படுத்துவதில் இருப்பது போலவே மூன்று கம்பிகள் (எலிமெண்ட்ஸ்) இருக்கும். இவை ஒரு குறுக்குக் கம்பியில் (கிராஸ் பார்) பொருத்தப்பட்டிருக்கும். இந்த அமைப்பை, இப்போதுள்ள ஆண்டெனாவில் பொருத்தப்பட்டுள்ள எலிமெண்ட்ஸ் அமைப்புக்குக் கீழேயே பொருத்தி விட்டால் போதும். (படம்)

இங்கே வரக் கூடிய ஒரு நியாயமான சந்தேகம். இன்னும் கொஞ்சநாள் கழித்து, இன்னும் இரண்டு சானல்கள் வந்தால் நாலு ஆண்டெனா வைக்க வேண்டுமா? பதில் — எஸ்; வேறு வழியில்லை.

என்ன! அயல்நாடுகளில் இப்படியா? என்கிறீர்களா? அங்கே ஒளிபரப்பு நடப்பது அல்ட்ரா ஹை ஃப்ரீக்வென்ஸியில். எனவே இந்தப் பிரச்னை இல்லை!

அது எப்போது இங்கே வரும்?

ஸாரி. இப்போதைக்கு இல்லை!

தகவல்: **மதுமிதா.**



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran


நல்லி
சின்னசாமி செட்டி
பனகல் பார்க், சென்னை



REGISTERED No. M. 2392
Registered as a Newspaper in Sri Lanka